மலர் : 40 இதழ் : 02

# இஸ்லாமிய சிந்தனை

ISLAMIC THOUGHT



ISSUE
154

Quarterly Research Journal
of Jamiah Naleemiah

நளீமிய்யா இஸ்லாமிய
வெளியீட்டுப் பணியகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Grade : 1


பிரதம ஆசிரியர்:

கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி PhD (Edin)

நிருவாக ஆசிரியர்:

அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் (நளீமி)

ஆசிரியர் குழு:

அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி) M.A.

அஷ்ஷெய்க் ஜே.எம். இம்தியாஸ் (நளீமி) M.A.L. (IIUM)

அஷ்ஷெய்க் எஸ்.எல்.எம். ஹஸ்ஸான் (நளீமி) B.A. (SL)

வெளியீட்டு ஆலோசனைக் குழு:

அஷ்ஷெய்க் ஸீ. ஐயூப் அலி (நளீமி) M.A. (Sudan)

அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம். பளீல் (நளீமி) M.Phil (SL)

கலாநிதி அஷ்ஷெய்க் எஸ்.எம்.எம். மஸாஹிர் (நளீமி) PhD (UM)

கலாநிதி அஷ்ஷெய்க் எச்.எல்.எம். ஹாரிஸ் (நளீமி) PhD (IIUM)

கலாநிதி அஷ்ஷெய்க் பீ.எம்.எம். இர்பான் (நளீமி) PhD (IUA)

நிருவாக உதவி:

எம். ஆர். எம். முஸம்மில்



நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்,

த. பெ. 01,

பேருவளை (12070), இலங்கை.

தொடர்புகளுக்கு 0342276695, 0714427630



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


01. ஒப்பீட்டாய்வு பிக்ஹின் தேவையும் நடைமுறைச் சாத்தியப்பாட்டுக்கான சில ஆலோசனைகளும்
அஷ்ஷெய்க் எம்.ஜே.எம். அரபாத் கரீம் (நளீமி) .................................................. 04

02. கூட்டு இஜ்திஹாத்: நவீனகால பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் அதன் முக்கியத்துவமும் வகிபங்கும்
கலாநிதி வஹ்பா அஸ்ஸுஹைலி .................................................................. 09

03. இஸ்லாமிய பண்பாட்டுத் தெளிவு காலத்தின் தேவை: சீறாப்புராணம் மழையழைப்பித்த படலத்தினூடாக ஒரு முயற்சி
ஏ. கமால் அஹ்மட் .................................................................................. 19

04. சிவில் சமூகம் ஓர் இஸ்லாமிய வரலாற்றுக் கண்ணோட்டம்
கலாநிதி லுயி அஸ்ஸாபி........................................................................... 26

05. இலத்திரனியல் விளையாட்டும் சிறுவர் மீது அது ஏற்படுத்தும் தாக்கமும்
கலாநிதி பீ. எம். எம். இர்பான் (நளீமி)........................................................... 35

06. விஞ்ஞானமும் வானவியலும்: அல்பிரூனியின் புத்திஜீவித்துவ சாறல்
ஸெய்யித் முஹம்மத் முஹ்சின் ........................................................................ 45


## விலை விபரம்

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | ரூபா | 100.00 |
| தபால் மூலம் | ரூபா | 150.00 |
| ஒரு வருட சந்தா | ரூபா | 600.00 |
| இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு | ரூபா | 1000.00 |
| மலேசியா, மத்திய கிழக்கு நாடுகள் | ரூபா | 1200.00 |
| ஏனைய நாடுகள் | ரூபா | 1350.00 |

இச்சஞ்சிகையில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் பீடம்

## வெற்றி, தோல்வி

அண்மைக் காலமாக உலக அரங்கிலே இடம்பெற்றுவரும் சில நிகழ்வுகள் மனதை அதிகம் கவலை கொள்ளச் செய்கின்றன. 'சமாதானம்' என்ற எண்ணக்கரு கூடுதலாக வலியுறுத்தப்படுகின்ற இந்தக் காலத்தில் யுத்தம் பல நாடுகளிலும் இன்னும் முடிவடைந்ததாகத் தோன்றவில்லை. யுத்தமும் நீடிக்கிறது.. பெறுமதியான மனித உயிர்களும் பலியாக்கப்படுகின்றன, உடைமைகள் சேதமாக்கப் படுகின்றன. பயங்கரவாதத்தை இஸ்லாம் ஒருபோதும் அங்கீகரிக்கவில்லை. அதற்குத் துணை போனதாக எங்கும் அடையாளம் கிடையாது. பயங்கரவாத செயல்களை இஸ்லாமிய பெயர் தாங்கிகள் செய்வதாக இருக்கலாம். ஆனால், இஸ்லாம் அவ்வனைத்திலுமிருந்தும் தூய்மை யானது. இன்று தமது நலன்களைத் தீர்த்துக்கொள்ள, வளங்களைச் சூறையாட பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற கோஷம் உயர்த்தப்படுகிறது. நீதி, நியாயம், சமத்துவம் என்ற அதியுயர் பெறுமானங்களைச் சூழ இருள் அப்பிப்போயிருக்கிறது. மதம், மொழி, நிறம் என்ற பிரிகோடுகளை யும் தாண்டி மனிதத்தை முற்படுத்த வேண்டிய நிலை தலை கீழாக மாறியிருக்கிறது.

அடுத்து, அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் சிறார்கள், குழந்தைகளுக்கு எதிரான வன்செயல்கள், துஷ்பிரயோகங்கள், பாலியல் கோர நிகழ்வுகள் மனதை உலுக்கக்கூடியனவாக உள்ளன. மலர்களாகப் பார்க்கப்பட வேண்டிய குழந்தைகள் அரக்கர்களால் கசக்கப்படுகின்றனர். இரக்கமற்ற முறையில் கொலை செய்யப்படுகின்றார்கள். இந்த இழி செயல்களை எந்த மதமும் அங்கீகரிக்கவில்லை. பாவம் என்ற வட்டத்தை விட்டும் அப்பாற் சென்று மனிதமற்ற ஈனத்தனமான செயலாக இது அடையாளப் படுத்தப்பட வேண்டிய ஒன்று.

இவ்வனைத்து விடயங்களுக்கும் பின்னணியில் ஒரே ஒரு விடயத்தைக் கூடுதல் அழுத்தம் கொடுத்துச் சொல்ல முடியுமாக இருக்கும். என்னதான் மனிதன் புற உலகில் பல்துறை அடைவுகளைக் கண்டாலும் அவன் படைத்தவனை, மார்க்க விழுமியங்களை விட்டும் தூரம் செல்லச் செல்ல அழிவின் விளிம்புக்கு நெருக்கமாகின்றான். பாவங்கள் கூட இன்பங்களாக அவனுக்குத் தோன்றத் தொடங்கும். வெளித்தோற்றத்தை அழகாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று முயற்சிக்கும் மனிதன் அகத்தை மறந்துவிடுகிறான். எனவே தூய ஆன்மீக வாழ்வு ஒருவனின் வாழ்விலிருந்து பிரிக்கமுடியாத ஒரு அங்கமாக மாறும் போதுதான் மனிதன் பல பிரச்சினைகளுக் கான தீர்வைச் சென்றடையலாம். பண்பாடுகள் ரீதியாக ஒருவன் கட்டியெழுப்பப்பட ஆன்மீகம் சார் வாழ்க்கை இன்றியமையாத ஒன்று.

இன்றைய சிக்கலான வாழ்க்கை அமைப்பில் குழந்தைகள் ஆரம்பம் முதலே ஆன்மீகத்துடன் வளர்க்கப்பட வேண்டிய தேவை இருக்கிறது. இஸ்லாம் சிறு வயது முதலே குழந்தைகள் பள்ளிவாயலுடன் தொடர்புற்று இருக்கவேண்டும் என்று பணிக்கிறது. காரணம், மிக நல்ல பிரஜையாக அவன் எதிர்காலத்தில் வரவேண்டும் என்பதற்காக. இதன் விளைவாக பாவங்களை எதிர்க்கும், அவற்றுக்குத் துணைபோகாத, அவற்றை வெறுத்தொதுக்கும், மற்றவர்களை மதிக்கும் ஒரு சந்ததி நிச்சயம் உருவாகும்.

*"அதனை (ஆன்மா) சுத்தப்படுத்திக்கொண்டவர் வெற்றியடைந்துவிட்டார். அதனைப் பொடுபோக்காக விட்டுவிட்டவர் தோல்வியடைந்துவிட்டார்" (அஷ்ஷம்ஸ்:10)*

கலாநிதி ஏம்.ஏ.எம் சுக்ரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பீட்டாய்வு பிக்ஹின் தேவையும் நடைமுறைச் சாத்தியப்பாட்டுக்கான சில ஆலோசனைகளும்

* அஷ்ஷெய்க் எம்.ஜே.எம். அரபாத் கரீம் (நளீமி)

## ஒப்பீட்டாய்வு பிக்ஹ் தோற்றம் பெறுவதற்கான பின்னணியும் வரலாறும்

மனித வாழ்வின் வளர்ச்சிப் படிவங்களுக்கேற்ப இஸ்லாமிய சட்டக்கலை முதிர்ச்சி கண்டு, பல்வேறு பரிமாணங்களைப் பெற்று வந்துள்ளது. வரலாற்றோட்டத்திற்குள் அல்குர்ஆன், ஸுன்னா பிரயோகிக்கப்பட்ட விதமே இஸ்லாமிய பிக்ஹாக காலப்போக்கில் வளர்ச்சி கண்டது. அல்குர்ஆன், ஸுன்னாவை புரிந்து கொள்ளும் முறையும், வித்தியாசமான சூழல்களில் அவற்றை பிரயோகிக்கும் விதமும் வேறுபடுவதால் இஸ்லாமிய பிக்ஹ் பன்முகத் தன்மை கொண்டதாக காணப்படுவது தவிர்க்க முடியாதது. இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படை மூலாதாரங்களான அல்குர்ஆனையும் ஸுன்னாவையும் விரிந்த தளத்தில் பிரயோகிக்கும் வகையில் இரண்டு வகையான வழிமுறைகள் இஸ்லாமிய சட்டவாக்க வரலாற்றில் தோன்றின. ஒன்று: மூலவசனங்களது விரிந்த பிரயோகம் (நுஸூஸ்) இஜ்மா, கியாஸ், இஸ்திஹ்ஸான், இஸ்திஸ்ஹாப் முதலான சட்டம் பெறும் வழிமுறைகள். இவை சட்டம் சார்ந்த விவகாரங்களை அல்குர்ஆன், ஸுன்னாவின் நேரடி வசனங்களை விரிவாக பிரயோகிக்கும் வழிமுறைகளாக கருதப்பட்டன. மற்றையது: சமூக யதார்த்தம், வழக்காறு (உர்பு), வரையறுக்கப்படாத மனித நலன் (மஸ்லஹா முர்ஸலா) முதலானவை சமூக யதார்த்தங்கள், மனித நலன்களை கவனத் திற் கொண்டு இஸ்லாமிய சட்டம் பிரயோகிக்கப்படுவதற்கான மற்றுமொரு சட்டம் பெறும்வழிமுறையாகும்.[1]

மூல வசனங்களின் விரிந்த பிரயோகமும், சமூக யதார்த்தங்கள், நலன்களை கவனத்திற் கொள்ளுவதுமே இஸ்லாமிய சட்டத்தை நவீன சூழலுக்கு தகுதியாக்கின. அல்குர்ஆன், ஸுன்னாவின் மூல வசனங்களை புரிந்து கொள்வதிலும், வித்தியாசமான சூழலில் அவற்றைப் பிரயோகிப்பது தொடர்பிலும் வரலாற்றில் தோன்றிய சட்ட அறிஞர்களுக்கு மத்தியில் வித்தியாசமான பார்வைகள் இருந்தமை பல்வேறு சட்ட மரபுகளும் வேறுபட்ட சட்ட நிலைப்பாடுகளும் தோன்றி வளர்வதற்கு ஏதுக்களாகின. காலப்போக்கில் இஸ்லாமிய சட்டம் மத்ஹபாக பிரதிபலித்தது. இஸ்லாமிய சட்டத்தை மத்ஹப்ரீதியாக வளர்க்கும்பணியே பிற்பட்ட காலப்பிரிவில் பெரும்பாலும் இடம்பெற்றது. ஒவ்வொரு மத்ஹபுக்குமான அடிப்படைகள், விதிகள், சட்டம்பெறும்வழி முறைகள், பிரத்தியேகமான சட்ட நிலைப்பாடுகள், தீர்வுகளை வகுப்பதில் முன்வைப்பதில் கூடிய கவனம் குவிக்கப்பட்டது. இதன் விளைவாக, மத்ஹப் சார்ந்து இஸ்லாமிய சட்டக்கலையும் சட்டவாக்கமும் வளர்ச்சி கண்டன. மத்ஹப் சார்ந்து சிந்திக்கும் மனோ நிலை மிகவும் வீரியமடைந்தது. சுருக்கமாக எழுதப்பட்ட ஆரம்பகால மத்ஹப் நூல்களுக்குவிரிவுரைஎழுதுதல், மேலதிக இணைப்புக் களைச்செய்தல், ஆதாரங்களைக்குறிப்பிடுதல், மற்றும்குறித்த மத்ஹப் சார்ந்தவர்கள் தங்களது மத்ஹபை சந்தைப்படுத்துதல், அதற்கெதிராக முன்வைக்கப்படும் விமர்சனங்களுக்கு மறுப்புக்

---

*விரிவுரையாளர், ஜாமியா நளீமிய்யா, பேருவலை.
*arafathcareem@gmail.com*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை முன்வைத்தல், விவாதங்களை நடத்துதல் என்றவாறு இஸ்லாமிய சட்டப் பகுதி மத்ஹபுக் குள்ளால்முடங்கியது.[2] இஸ்லாமிய சட்டக்கலை யின் பொதுவான வளர்ச்சி பற்றிய கரிசனையை விட மத்ஹப் சார்ந்து சிந்தித்தலே மிகைத்தது. மத்ஹப் ரீதியான பற்று அளவுகடந்து சென்று வெறியாகவும் பிடிவாதமாகவும் மாறி, மாற்று நிலைப்பாடுகளையும் இஜ்திஹாதுகளையும் வரைமுறையின்றி அளவுமீறி விமர்சிக்கும் போக்கு உருவெடுத்தது.

இஸ்லாமிய சட்டத்தின் சுதந்திரமான நகர்வும், விரிந்த பார்வையும் மத்ஹப் என்ற வரையறைக்குள் சிக்கியது. இஸ்லாமிய சட்டத் தின் வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பை மத்ஹபுகள் மேற்கொண்ட போதிலும் இஸ்லா மிய சட்டத்தின் விரிந்த பிரயோகத்துக்கும், சுதந்திரமான அசைவிற்கும் அவை தடையாக அமைந்தன என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். இந்தப் பின்னணியிலே "இஜ்தி ஹாதின் வாயில் மூடப்பட்டது" என்ற கூற்றின் வரலாற்று யதார்த்தத்தை நோக்க வேண்டியுள்ளது.[3]

இஸ்லாமிய சட்டத்தின் விரிந்த பார்வை சுருங்கிவிடாத, அதன் தொடர்ச்சியான வளர்ச்சிப் போக்கை உத்தரவாதப்படுத்தும் வகையில் ஹிஜ்ரி ஐந்தாம் நூற்றாண்டில் இஸ்லாமிய சட்டம் புதியதொரு வடிவமெடுத் தது. இஸ்லாமிய சட்ட விவகாரங்கள் குறிப்பிட்டதொரு மத்ஹபுக்குள் மாத்திரம் அணுகப்படும் நிலை மாறி, பல்வேறு மத்ஹபு கள், இஜ்திஹாதுகளை உள்வாங்கியதாக விரிந்த தளத்தில் ஆராயும் " இஸ்லாமி சட்டக்கலையின் ஒப்பீட்டாய்வு முறை" தோற்றம் பெற்றது.[4] இதன் விளைவாக இஸ்லாமிய சட்டம் அதன் வரலாற்றில் மற்றொரு பயணத்தை ஆரம்பித் தது. சமூக வாழ்வில் தோன்றும் புதுப்புது பிரச்சினைகளுக்கு அனைத்து மத்ஹபுகளது கருத்துக்களையும் உள்வாங்கி, புதிய இஜ்தி ஹாதுகளை மேற்கொள்வதற்கான புதியதொரு பொறிமுறை இதனூடாக வளர்க்கப்பட்டது. இமாம் இப்னு ருஷ்த்- பிதாயதுல் முஜ்தஹித், இமாம் இப்னு குதாமா 'முங்னி', இமாம் நவவி 'மஜ்மூஃ' ஊடாக இப் பணியை காத்திரமாக மேற்கொண்டார்கள்.[5] நவீன காலத்தில் இதன் பிரயோகம் மிகவும் விரிவடைந்து, இஸ்லாமிய சட்டவிவகாரங்கள் விரிந்த தளத்தில் ஆராயப் படும் நிலை தோன்றியுள்ளது. குறித்த தொரு இமாமின் புரிதலுக்குள்ளால் அல்லது குறித்ததொரு மத்ஹபின் எல்லைகளுக்குள்ளால் சிக்குண்டிருந்த இஸ்லாமிய சட்டம் வரலாற்றில் தோற்றம் பெற்ற மிகப் பெரும் இமாம்களது அறிவுப் பங்களிப்புக்களை புரிந்துகொள்வ தற்கும், அவர்களது இஜ்திஹாதுகளது அடிப்படைகளை நவீன காலத்துக்கேற்ப பிரயோகிப்பதற்குமான வாயிலை இது திறந்துவிட்டுள்ளது.

## சட்டக்கலையின் ஒப்பீட்டாய்வு முறைமை வரைவிலக்கணம்

ஆரம்ப கால சட்டக்கலை அறிஞர்கள், தங்களது சட்டம் சார்ந்த ஆய்வுகளை, பல்வேறு சட்ட மரபுகள், சட்டத்தை பெறுவதற்கான அணுகுமுறைகள், வழிமுறைகளை கவனத்திற் கொண்டு ஒப்பீடு செய்து ஆய்வுகளை மேற்கொண் டிருந்த போதிலும் "சட்டக் கலையின் ஒப்பீட் டாய்வு" என்பதன் பொருளை வரையறுத்துக் கூறியதை காணமுடியாதுள்ளது. ஆரம்ப காலத்தில் இத்தகைய ஆய்வுகள் இல்முல் ஹிலாப் என்றே வழங்கப்பட்டன.[6] இஸ்லாமிய சட்டக்கலையின் வளர்ச்சி குறித்து ஆராயும் நவீன சட்டவியல் அறிஞர்களும், பிக்ஹ் விவகாரங்களை ஒப்பீட்டு ரீதியாக அணுகும் புத்திஜீவிகளும் இக்கலை தொடர்பான வரைவிலக்கணத்தை முன்வைத்துள்ளார்கள்.

"குறித்ததொரு விவகாரத்தில் பல்வேறு சட்ட மரபுகளது நிலைப்பாடுகளை ஒன்று திரட்டி, அவை ஒவ்வொன்றும் கருத்து வித்தியா சப்படும் இடத்தை மிகச் சரியாக இனங்கண்டு, ஆதாரங்களையும், ஆதாரங்களைப் பெற்றுக் கொண்ட வழிமுறைகளையும் விமர்சன ரீதியாக பகுப்பாய்வுக்கு உட்படுத்தி, ஒப்பிட்டு ஆராய்ந்து பொருத்தமானதொரு தீர்வுக்கு வருவதையே இஸ்லாமிய சட்டக் கலையின் ஒப்பீட்டாய்வு குறித்து நிற்கின்றது."[7]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறித்த வரைவிலக்கனத்திலிருந்து இஸ்லாமிய சட்டக் கலையின் ஒப்பீட்டாய்வு முறைமை தொடர்பாக பின்வரும் தெளிவுகளுக்கு வரமுடியும்.

1. பல்வேறு கருத்துக்களை வேண்டி நிற்கும், கருத்து வேறுபாட்டுக்கு உட்பட்ட சட்டப் பகுதியில் தான் ஒப்பீட்டு ரீதியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட முடியும்.

2. இஸ்லாமிய சட்டக் கலை, சட்ட விவகாரங்களை குறித்ததொரு சட்ட அணுகு முறையை அடிப்படையாகக் கொண்டு ஆராயும் அதே வேளை, ஒப்பீட்டாய்வு முறையானது குறித்த விவகாரம் தொடர்பாக அது வரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளையும் கவனத்திற்கொண்டு தீர்வுகளை முன்வைப்பதாக இருக்கும்.

3. பழைய, புதிய சட்ட ஆய்வுகள் ஆராயப் படுவதால், நவீன பிரச்சினைகளுக்கு தீர்வுகளை முன்வைப்பதற்கான ஆழ்ந்த சட்டப் பின்புலத்தை இது வழங்குகிறது.

## சட்டக்கலை ஒப்பீட்டாய்வின் வரையறைகள்

சட்டக்கலை ஒப்பீட்டாய்வில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய வரையறைகள் நிறைவாகக் காணப்படும் போதே அது ஒப்பீட்டாய்வு என்ற பரப்பினுள் உள்ளடக்கப்படுகிறது.

**1. குறித்த சட்ட விவகாரம் தொடர்பாக காணப்படும் வித்தியாசமான கருத்துக்களை குறிப்பிட்டு, கருத்து வேறுபாடு தோன்றுவதற்கான காரணங்களை சரியாக இனங்காணல்**

குறித்ததொரு சட்ட விவகாரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள், சட்ட நிலைப்பாடுகள் தோன்றுவதற்கு ஏதுவாக அமையும் காரணிகளை மிகச் சரியாக அடையாளப்படுத்துவது ஒப்பீட்டாய்வு பிக்ஹின் முதலாவது அடிப்படையாகும். இஸ்லாமிய சட்ட விவகாரங்களில் பல்வேறு கருத்துக்கள் தோன்றுவதற்கான காரணிகளை ஆராயும் இமாம் இப்னு ருஷ்த் தன்னுடைய "பிதாயதுல்முஜ்தஹித் வநிஹாயதுல் முக்தஸித்" என்ற ஆய்வு நூலில் ஒவ்வொரு சட்டப் பிரச்சினையிலும் வித்தியாசமான நிலைப் பாடுகள் தோன்றுவதற்கு ஏதுவாக அமையும் காரணிகளை மிகச் சிறந்த முறையில் ஆராய்ந்து ஒப்பீட்டாய்வு பிக்ஹின் கொள்கைகளை ஆழமாக விளக்கியுள்ளார்.[8] மாலிக் மத்ஹபை பின்புலமாகக் கொண்ட இப்னு ருஷ்த் பல்வேறு மத்ஹப்களது கருத்துக்களையும் குறிப்பிட்டு, அவற்றுக்கிடையில் வித்தியாசங்கள் தோன்றுவதற்கான காரணிகளை அற்புதமாக அடையாளப் படுத்தும் அவரது போக்கு, இஸ்லாமிய சட்ட விவகாரங்களில் அவருக்குள்ள ஆழ்ந்த ஈடுபாட்டுக்கு தக்க சான்றாகவுள்ளது.

ஒப்பீட்டாய்வு பிக்ஹின் முதல் வரையறையை சற்று தெளிவாக புரிந்துகொள்வதற்கு பெண்கள் அணியும் தங்கம், வெள்ளி நகைகளுக்கு ஸகாத் விதியாகுவது தொடர்பில் எழுந்துள்ள சட்டரீதியான சர்ச்சைகளுக்குப் பின்னாலுள்ள காரணிகளை சுருக்கமாக தருவது பயனுள்ளதாக அமையும். பெண்களது நகைகளுக்கு ஸகாத் விதியாகுவது தொடர்பில் இரண்டு வித்தியாசமான சட்ட நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. அதற்கு பின்வரும் இரண்டு காரணிகள் ஏதுக்களாக அமைந்துள்ளன:

i. தங்கம், வெள்ளி நகைகளுக்கு ஸகாத் விதியாகுவது தொடர்பாக வந்துள்ள நபி மொழிகள், ஸஹாபாக்களின் நடைமுறைகள் இரண்டு நேர்முரணான கருத்துக்களை சுட்டுவதாக அமைந்துள்ளன. அவற்றை மேலெழுந்த வாரியாக நோக்கும்போது நகைகளுக்கு ஸகாத் விதியாகும் என்ற கருத்தை அவை உணர்த்துவது போலவே அவற்றுக்கு ஸகாத் விதியாக மாட்டாது என்ற கருத்தையும் உணர்த்தி நிற்கின்றன.

ii. பெண்கள் வைத்திருக்கும் தங்கம், வெள்ளி ஆபரணங்களை, சொந்தப் பயன்பாட்டுக்கு வைத்துள்ள வீடு, வீட்டுத் தளபாடம், சமையல் பாத்திரங்கள், வாகனம் முதலானவற்றோடு ஒப்பிட்டு நோக்குவதா அல்லது சேமிக்கும் நோக்கோடு வைத்திருக்கும் தங்கத்துக்கு ஒப்பிடுவதா என்பதில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு இரு வேறுபட்ட சட்டத் தீர்ப்புக்கள் தோன்றுவதற்கு காரணமாகின.[9]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(2)* குறித்த சட்ட விவகாரம் தொடர் பாகக் காணப்படும் பல்வேறு கருத்துக் களை அவற்றின் மூல நூல்களிலிருந்து பெற்றுக்கொள்ளல்

கருத்துக்களை அவற்றின் மூல நூல்களி லிருந்து நேரடியாகப் பெற்று, மூல நூல்களை மேற்கோள் காட்டுவது ஒப்பீட்டாய்வு பிக்ஹின் மற்றொரு வரையறையாகும்.[10] குறித்ததொரு இமாமின் அல்லது மத்ஹபின் கருத்துக்களை விமர்சனத்துக்கு உட்படுத்தும் மற்றொரு மத்ஹபின் நூல்களில் தங்கிநின்று பிக்ஹ் ரீதியான ஆய்வுகளை மேற்கொள்வது பெரும் குறைபாடாக நோக்கப்படுகிறது. குறித்த கருத்துக்கு மேற்கோளாகக் காட்டப்படும் ஹதீஸ் மற்றும் சட்ட ரீதியான ஆதாரங்கள் அவற்றின் மூல நூல்களுக்கு சென்று ஆய்வு செய்யப்படும் போதே நடுநிலை தவறாத, நேர்மையான ஆய்வு முடிவுகளை பெற்றுக் கொள்வதற்கு வழிவகுக்கும்.

*(3)* ஆதாரங்களை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்தல்

குறித்த சட்ட நிலைப்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு கையாளப்பட்டுள்ள ஆதாரங் களை பல்வேறு கோணங்களில் விமர்சனத் துக்கு உட்படுத்துவது ஒப்பீட்டாய்வு பிக்ஹில் முக்கியமானதாகும். எடுத்துக்கொண்ட ஆதாரத் தின் தரம், குறித்த விவகாரத்துக்கு அது பொருந் தும் தன்மை மற்றும் குறித்த விடயத்தோடு நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்பு படும் எல்லா ஆதாரங்களையும் மேற்கோள் காட்டுதல் முதலானவைகளை ஆராய்ந்து பார்ப்பதே ஆதாரங்களை விமர்சனத்துக்கு உட்படுத்துதல் என்பதன் பொருளாகும். முன்வைக்கப்படும் ஆதாரங்கள் தொடர்பான விமர்சன ஆய்வை மேற்கொள்வதற்கு இரண்டு வழிமுறைகள் காணப்படுகின்றன:

i. ஒவ்வொரு ஆதாரத்தையும் முன்வைத்த தைத் தொடர்ந்து அது பற்றி விமர்சன ரீதியாக கலந்துரையாடுதல்

ii. அனைத்து ஆதாரங்களையும் குறிப்பிட்டு விட்டு, ஒவ்வொன்றாக எடுத்து கலந்துரையாடுதல்

*(4)* இணக்கம் காணுதலும் பலப்படுத்தலும்

ஒப்பீட்டாய்வு முயற்சிகள் அங்குமிங்கும் சிதறிக் கிடக்கும் கருத்துக்களை ஓரிடத்தில் ஒன்று திரட்டும் ஒரு தொகுப்பாக அமைந்து விட முடியாது. மாற்றமாக ஆழ்ந்த ஆய்வுகளின் பின்னணியில் பகுப்பாய்வுகளையும் விமர்சனங் களையும் மேற்கொண்டு பொருத்தமான தீர்வை முன்வைக்கக் கூடியதாக காணப்பட வேண்டும். சகல ஆதாரங்களையும் வித்தியாசமான அணுகு முறைகளையும் கவனத்திற்கொண்டு பல்வேறு கருத்துக்களுக்கு மத்தியில் இணக்கம் காணுதல் அல்லது ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கருத் தொன்றை ஆதாரங்களினடியாக பலப்படுத்து தல் அல்லது புதியதொரு தீர்வுக்கு வருதல் என்ற வகையில் பிக்ஹ் கலையின் ஒப்பீட்டாய்வின் இறுதிவடிவம் காணப்படும். இந்த வகையில், ஒப்பீட்டாய்வு பிக்ஹானது ஆதாரங்களுக்கு மிகவும் நெருக்கமான, சூழமைவுகளை கவனத் திற்கொண்ட, ஷரீஆவின் இலக்குகளோடு ஒத்துச் செல்லக்கூடிய தீர்வுகளை தெரிவதைப் பணியாக வும் இலக்காகவும் கொண்டுள்ளது எனலாம்.

## ஒப்பீட்டாய்வு முறையை பிரயோகிப் பதால் ஏற்படும் விளைவுகள்

*1.* குறித்ததொரு மத்ஹபுக்குள்ளால் மூடுண்டு, சிந்தனைத் தேக்கத்தக்கு உட்படும் குறுகிய நிலையிலிருந்து சிந்தனையை விடுவித்து மிகவும் அகன்று விரிந்த பார்வையை சட்டப் பகுதியில் ஏற்படுத்தவதற்கு ஒப்பிட் டாய்வு மிகுந்த பங்களிப்புச் செய்கிறது.

2. குறித்த சட்டப் பிரச்சினையை பல்வேறு அணுகுமுறைகளுக்கூடாக கையாள முடியும் என்பதைப் புலப்படுத்துவதோடு, பன்முகப் போக்கில் கிளைப் பிரச்சினைகள் அணுகப்படும் போது, அவற்றினடியாகத் தோன்றும் பல்வேறு நிலைப்பாடுகளை கருத்து முரண்பாடுகளாக நோக்காது குறித்த பிரச்சினைக்கு முன்வைக் கப்படும் பல தீர்வுகள் அல்லது தெரிவுகள் என்ற விரிந்த பார்வையை உருவாக்குகிறது. ஆய்வு களின் அடிப்படையில் பெறப்பட்ட பல்வேறு தீர்வுகளில் மிகவும் பொருத்தமானதை தெரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் அதேவேளை, ஏனைய சட்ட முடிவு கள் பிழையானவை, ஷரீஆவோடு முரண்பட் டவை என்ற குறுகிய, இறுக்கமான சிந்தனை நீங்கிவிடுவதற்கு இது காரணமாக அமைகிறது.

3. குறித்த விவகாரம் தொடர்பாக ஏலவே இடம் பெற்ற பல்வேறு ஆய்வுகளையும் உள்வாங்கிய நிலையில் இது மேற்கொள்ளப்படுவதனால், முன்னைய ஆய்வு முயற்சிகள் மதிக்கப்பட்டவை யாகவும், ஆய்வு நேர்மை கொண்டவையாக வும் மாறிவிடுவதோடு, ஒரு முழுமையான ஆய்வு முயற்சிக்கு அது வழிவகுக்கிறது.

4. நவீன காலத்தில் எழும் புதுப்புது விவகாரங்களை ஆழ்ந்த சட்டப் பின்னணியில் நோக்கி உரிய தீர்வுகளை பெறுவதற்கான போதிய சட்டப் பின்புலத்தை சட்டரீதியான ஒப்பீட்டு முயற்சிகள் ஏற்படுத்துகின்றன.

5. சட்ட ஒப்பீட்டாய்வில் தனிநபர்கள், இமாம்கள் விமர்சிக்கப்படுவதை விடுத்து ஆதாரங்களும் கருத்துக்களுமே விமர்சனத்துக்கு உட்படுத்தப்படுகின்றன. இதன் விளைவாக ஆய்வுகளை மேற்கொள்வதற்கான ஆழ்ந்த விமர்சனப் பார்வை வளர்க்கப்படுவதோடு, சகோதரத்துவ வாஞ்சை குன்றாத ஆய்வுகளுக் கும் அது வழிவகுக்கிறது.

## ஒப்பீட்டாய்வை சாத்தியப்படுத்துவதற் கான சில ஆலோசனைகள்

1. ஷரீஆ கல்லூரிகள், அரபு மத்ரஸாக் களில் பிக்ஹ் பாடவிதானத்தை ஒப்பீட்டாய் வாக அமைத்தல், இஸ்லாமிய சட்டக்கலையின் ஒப்பீட்டாய்வு பற்றிய தெளிவை பாட போதனை களுக்கூடாக மாணவர்களுக்கு வழங்குதல்

2. பல்வேறு மத்ஹபுகளது நூல்களை உள்ளடக்கியதாக நூலகங்களை அமைப்பதோடு, மாணவர்களுக்கு அது பற்றிய தெளிவை வழங்குதல்

3. நவீன காலத்தில் ஒப்பீட்டாய்வின் வரையறைகளைப் பேணி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை பரவலாக்கம் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல்.

4. துறை சார்ந்தவர்களை உள்ளடக்கிய கூட்டு இஜ்திஹாதுக்கான பொறிமுறையொன்றை உருவாக்கி செயற்படல். இஸ்லாமிய சட்ட மன்றமாக அது இருக்க முடியும்.

5. ஒப்பீட்டாய்வுகள் மிகவும் விரிவாகவும், பருமனில் மிகவும் பெரியதாகவும் காணப்படுவ தால் புலமை வட்டாரத்தில் அதனை விரிவான தொரு ஒழுங்கிலும், பொது மக்களுக்கு மத்தியில் இலகுபடுத்திய வடிவத்திலும் முன்வைத்தல்.

6. ஆரம்ப காலங்களில் ஆராயப்பட்டு தீர்வுகள் காணப்பட்ட பழைய பிரச்சினைகளை திரும்பத் திரும்ப ஆராயாது, எமது சூழல் வேண்டி நிற்கும் முன்னுரிமைப் பிரச்சினை களை ஒப்பீட்டாய்வுக்கு உட்படுத்துதல்.

7. மகாஸிதுஷ் ஷரீஆ- ஷரீஆவின் இலக்கு கள், பிக்ஹுல் மஆலாத்- பின்விளைவுகள் பற்றிய பிக்ஹ்- முதலான இஜ்திஹாதின் அடிப்படைகளை ஒப்பீட்டாய்வுகளில் அதிகம் பிரயோகித்தல்


## உசாத்துணைகளும் அடிக்குறிப்புக்களும்

1. ஸ□ஹி ஸாலிஹ், மஆலிமுஷ் ஷரீஆ இஸ்லாமிய்யா- பெய்ரூத்: தாருல் இல்ம், பக்: 62-64, 72-74
2. அஹ்மத் இப்னு தைமிய்யா, மஜ்மூஃ பதாவா, மக்தபதுல் மஆரிப், பா:20, பக்: 208-213.
3. உமர் ஸு□லமான் அஷ்கர், மத்ஹல் இலஷ் ஷரீஆ இஸ்லாமிய்யா, 2005 தாருந் நபாஇஸ், 303-310.
4. முஹம்மத் ஸ□ஹலி, பிக்ஹு□ முகாரன், வழவாபிதுஹு□திபாதுஹு□ததவ்வுரில் உலூம் பிக்ஹிய்யா கிலாலல் கர்னில் ஹாமிஸ் ஹிஜ்ரி
5. உமர் ஸு□லமான் அஷ்கர், மத்ஹல் இலஷ் ஷரீஆ இஸ்லாமிய்யா, பக்: 287-294.
6. இப்னு ஜரீர் அத்தபரி, இஹ்திலாபுல் புகஹா, பக்: 06
7. பத்ஹி துரைனி, புஹு□ முகாரனதுன் பில் பிக்ஹில் இஸ்லாமி வஉஸு□ஹி, முஅஸ்ஸதுர் ரிஸாலா, பக்: 05
8. முஹம்மத் ஸ□ஹபி, பிக்ஹால் முகாரன்
9. இப்னு ருஷ்த், பிதாயதுல் முஜ்தஹித் வநிஹாயதுல் முக்தஸித், பா:01, பக்:183
10. வஹ்பா ஸு□ஹலி. பிக்ஹு□ இஸ்லாமி வஅதில்லதுஹு□
11. ஸஈத் ரமழான் பூதி, முஹாழராத் பில் பிக்ஹில் முகாரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டு இஜ்திஹாத்: நவீனகால பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் அதன் முக்கியத்துவமும் வகிபங்கும்

*கலாநிதி வஹ்பா அஸ்ஸுஹைய்லியின் ஆய்வினைத் தழுவி எழுதப்பட்டது

## முன்னுரை

நான்காம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஆரம்பித்த இஸ்லாமிய கலைகளின் மறு மலர்ச்சி தற்காலம் வரையிலும் புதுப்புது வடிவங்களில் வளர்ந்து கொண்டு செல்வதனைக் காணலாம். இஸ்லாமிய நம்பிக்கை, பொருளாதாரம், சமூகவியல், வைத்தியம் போன்ற பல துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சிகளை இவற்றுக்கு உதாரணமாக குறிப்பிடலாம். இவ்வாறான வளர்ச்சிக்கு பல காரணிகள் காணப்படுகின்றன. அவற்றுள் இரு காரணிகள் அடிப்படையானவையாகும்

1. வளர்ச்சியடைந்து வரும் நவீன உலகுக்கு சாத்தியமான வகையில் இஸ்லாத்தையும் அதன் ஷரீஆவையும் நடைமுறைப்படுத்துவதற்காக நவீன இஸ்லாமிய பதிலீடுகளை வழங்குதல். உதாரணமாக: வளர்ச்சியடைந்து செல்லும் வட்டி சார் வங்கி முறைமைக்கு நிகராக இஸ்லாமிய வங்கி முறைமைகள் உருவாகியமை.
2. இஸ்லாத்தினை விட்டும் வழிதவறிய கோட்பாடுகள், சிந்தனைகளுக்கு தெளிவான இஸ்லாமிய சட்டங்களைக் கூற வேண்டி ஏற்பட்டமை. உதாரணமாக: நாஸ்திகவாத, சமவுடைமைவாத கொள்கைகளுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டி ஏற்பட்டதுடன், இஸ்லாமிய தீர்வுகளே நடைமுறைக்கு சாத்தியமானது என்று ஆய்வு ரீதியாக தெளிவு படுத்த வேண்டி ஏற்பட்டமை.

ஆகவே இஸ்லாத்தின் சிந்தனைகள் மற்றும் அதன் நடைமுறைச் சாத்தியநிலை என்பவற்றினை சவால்கள் நிறைந்த நவீன உலகுக்கு தெரியப்படுத்துவதற்காக எமது முஸ்லிம் சமூகம் ஒன்றுபட வேண்டும். இஸ்லாமிய பொருளாதார, அரசியல், கல்வி கோட்பாடுகளை பிரிவினைகளுக்கும் கருத்து வேறுபாடுகளுக்கும் மத்தியில் நின்று ஒற்றுமையாக நடைமுறைப்படுத்திக் காட்ட வேண்டும். புதிது புதிதாக ஏற்படும் பிரச்சினைகளுக்கு கூட்டு இஜ்திஹாதினைப் பயன்படுத்தி உண்மையானதும் நடைமுறைச் சாத்தியமானதுமான தீர்வுகள் மேற்கொள்ளப்பட்ட வேண்டும்.

அந்த வகையில் மக்கா, ஜித்தா, சூடான், அமெரிக்கா போன்ற பிரதேசங்களிலுள்ள பத்வா மன்றங்கள் இவ்வாறு எதிர்நோக்கும் புதிய வடிவிலான பிரச்சினைகளுக்கு கூட்டு இஜ்திஹாதினை பயன்படுத்தி தீர்வுகளை வழங்கி வருகின்றன. அதேபோல் எகிப்தில் கெய்ரோ நகரில் இயங்கும் இஸ்லாமிய ஆய்வுகளுக்கும், பத்வாக்களுக்குமான நிலையம், மற்றும் குவைத்தில் உள்ள வக்ப் மற்றும் ஸகாத்துக்கான நிலையம், பஹ்ரைனிலுள்ள வணிக நிறுவனங்கள், சூடானிலுள்ள காப்புறுதி நிறுவனங்கள் போன்ற இன்னோரன்ன பல நிறுவனங்கள் வெற்றிகரமாக நவீன உலகுக்கு இஸ்லாமிய சிந்தனையை வழங்கி உரிய முறையில் நடைமுறைப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

* இஜ்லான் தாஸீம், விடுகை வருட மாணவன்,
இஸ்லாமிய கற்கைகள் பீடம், ஜாமிஆ நளீமிய்யா,
பேருவலை. *ijlanmtm@gmail.com*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அடிப்படையில் இவ்வாறான நிறுவனங்களின் வெற்றியின் முதுகெலும்பாக இருக்கின்ற கூட்டு இஜ்திஹாதினைப் பற்றி இந்த ஆய்வில் சற்று விரிவாக பின்வரக்கூடிய தலைப்புக்களில் ஆராய்கின்றோம்.

1. கூட்டு இஜ்திஹாதின் யதார்த்த நிலை
2. பத்வாக்களை நெறிப்படுத்துவதில் கூட்டு இஜ்திஹாதின் முக்கியத்துவம்
3. இஸ்லாமிய சட்ட மன்றங்களுக்கும், பத்வா வழங்கும் நிறுவனங்களுக்குமான கூட்டு இஜ்திஹாதின் பங்களிப்பு

## பகுதி ஒன்று - கூட்டு இஜ்திஹாதின் யதார்த்த நிலை

இந்த தலைப்பினூடாக கூட்டு இஜ்திஹாத் என்றால் என்ன என்பதனையும் அதறகான ஆதாரங்களையும் அத்துடன் கூட்டு இஜ்திஹாதுக்கும் அதனுடன் தொடர்பான சில விடயங்களுக்குமான விளக்கங்களையும் ஆராய்வோம்.

இஸ்லாமிய பார்வையில் இஜ்திஹாத் என்பது தெளிவான இஸ்லாமிய ஷரீஆ ஆதாரங்களின் அடிப்படையில் ஒரு பிரச்சினைக்கு தீர்வு காண்பதனைக் குறிக்கும் என சுருக்கமாக கூற முடியும்[(1)]. இவ்வாறு நோக்கப்படும் இஜ்திஹாதினை நவீன கால இஸ்லாமிய அறிஞர்கள் இரு வகையாக பிரித்து விளக்கப்படுத்துகின்றார்கள்.

1. தனிநபர் இஜ்திஹாத்
2. கூட்டு இஜ்திஹாத்

### தனிநபர் இஜ்திஹாத்

தனிநபர் இஜ்திஹாதினைப் பொறுத்த வரையில் ஒரு சட்ட அறிஞர் ஒரு பிரச்சி னைக்கு அல்குர்ஆன், சுன்னா மற்றும் இன்னோரன்ன துணை மூலாதாரங்களைப் பயன்படுத்தி தனியாக தீர்வு காண்பதனை குறிக்கும். இந்த இஜ்திஹாத் முறைமையானது நபி (ஸல்) அவர்களின் மரணத்தின் பின்னர் முதலாவது கலீபா அபூ பக்கர் (ரழி) அவர்க ளின் காலத்தில் ஆரம்பித்து இற்றை வரைக்கும் கால, நேர, சூழ்நிலைகளுக்கும் ஏற்ப தனிநபர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இமாம் அபூஹனீபா, மாலிக், ஷாபிஈ, அஹ்மத் (ரஹ்) போன்ற இமாம்களின் தனிப்பட்ட இஜ்திஹாத்களே பிற்காலத்தில் தனித்தனி மத்ஹப்களாக அவர்களது மாணவர்களால் உருவாக்கப்பட்டன.

நபித் தோழர்களும் கூட தனித்து இஜ்திஹாத்களை மேற்கொண்டு பல சட்டப் பிரச்சினைகளுக்கு தீர்வு கூறியுள்ளமையினை வரலாற்றில் எமக்கு தெளிவாக காண முடியும். அந்த வகையில் மிக அதிகமாக தனிப்பட்ட இஜ்திஹாத்கள் செய்தவர்களுள் ஏழு பேர் முக்கியமானவர்கள். உமர் (ரழி), அலி (ரழி), இப்னு மஸ்ஊத் (ரழி), ஆயிஷா (ரழி), சைத் பின் ஸாபித் (ரழி), இப்னு அப்பாஸ் (ரழி), இப்னு உமர் (ரழி) ஆகியோரே அந்த எழுவருமாவர். அடுத்து குறிப்பிட்ட அளவு தனியாக இஜ்திஹாத் செய்த சஹாபாக்களை பொறுத்தவரையில் அவர்களில் பதின்மூன்று பேர் உள்ளடங்குவர். அவர்களில் அபூ பக்கர் (ரழி), உம்மு சலமா, (ரழி) அனஸ்(ரழி), அபூ ஸஈத் அல்குத்ரி,(ரழி) அபூஹுரைரா,(ரழி) உஸ்மான்,(ரழி) அப்துல்லாஹ் இப்னு அம்ர்(ரழி), அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் (ரழி), அபூ மூசா அல்அஷ்அரி (ரழி) ஸஃத் இப்னு அபீ வக்காஸ் (ரழி), சல்மான் அல் பாரிசி (ரழி), ஜாபிர் இப்னு அப்துல்லாஹ், முஆத் இப்னு ஜபல் (ரழி) போன்றோர் முக்கியமானவர்கள். மூன்றாவது அணியாக தனித்து மிக சொற்பமான இஜ்திஹாத்களில் ஈடுபட்ட சஹாபாக்களை பொருத்தவரையில் அபூ தர்தா, அபூ உபைதா, அபூ சலமா,(ரழி) சஈத் இப்னு ஸைத்(ரழி), நுஃமான் இப்னு பஷீர் (ரழி), ஹசன் மற்றும் ஹுஸைன் ரழியள்ளாஹு அன்ஹும் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்[(2)]

### கூட்டு இஜ்திஹாத்

பல கருத்துக்களுக்கு இடம்பாடான வித்தியாசமான பதில்களை உடைய மார்க்கப் பிரச்சினைகளுக்கு ஓர் அறிஞர் குழு தமது அறிவையும், மார்க்க அறிவையும் பயன்படுத்தி ஒரு பிரச்சினைக்கு கூட்டாக காணும் தீர்வு முறையே கூட்டு இஜ்திஹாத் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் இஸ்லாமிய அடிப்படை மூலா தாரங்களையும், துணை மூலாதாரங்களையும், ஷரீஆவின் அடிப்படை நோக்கங்களையும், சமூக நலனையும் கருத்திற்கொண்டு ஒரு பிரச்சினைக்கு தீர்வுகாண முற்படுவர். இங்கு இருக்கும் அனைவரும் ஒரே கருத்தில் உடன்பட்டு இருக்க வேண்டிய அவசியம் கிடையாது. அவ்வாறு எல்லோரும் ஏகோபித்து ஒரே கருத்தில் இருக்க வேண்டும் என்று முயற்சித்தால் அது இஜ்மா வாக மாறும். ஆனாலும் பெரும்பாலான அறிஞர் கள் உடன்படும் கருத்து கூட்டு இஜ்திஹாதாக கொள்ளப்பட்டு அதன்படி பத்வாக்கள் வழங்கப் படும். இதன் அடியாகவே நவீன இஸ்லாமிய பத்வா ஒன்றியங்கள் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன.

இது இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட ஓர் இஜ்திஹாத் முறைமை ஆகும். ஏனெனில் இங்கு இஜ்திஹாதானது ஷூரா அமைப்பில் செய்யப்ப டுகின்றது. இந்த வழிமுறையானது குலபாஉர் ராஷிதீன் ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அல்குர்ஆனில் அல்லாஹ் இது பற்றிக் கூறும் போது "விடயங்களில் ஆலோசனைசெய்து கொள்ளுங்கள் "(சூறா ஆலஇம்ரான்: 159) என்றும் "அவர்களின் விடயங்களில் அவர்களுக்கு மத்தியில் ஆலோசனை செய்வார்கள்" (சூரா அஷ்ஷூரா: 38) என்றும் கூறுகின்றான். அலி (ரழி) அவர்கள் கூறும் போது "நான் நபி (ஸல்) அவர்களிடத்தில் குர்ஆனிலோ சுன்னாவிலோ தெளிவாக குறிப்பிடப்படாத பிரச்சினைக்கு எங்கிருந்து தீர்வு காண்பது என்று கேட்டேன் அதற்கு நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள் "உங்களின் விடயங்களை அறிந்தவர்களிடத்தில் சென்று கலந்துரையாடி தீர்வினைப் பெற்றுக்கொள்ளுங்கள். அத்தோடு தனி ஒருவரின் கருத்தினை வைத்து தீர்ப்பு வழங்க போகாதீர்கள்" என்று கூறிக் காட்டினார்கள்[3].

இற்றைய காலப்பகுதியில் கூட்டு இஜ்தி ஹாதின் தேவை மிகவும் உணரப்பட்டுள்ளது. பலவகையான கருத்து வேறுபாடுகளை களைந்து ஒரே பாதையில் ஒற்றுமையுடன், சவால்களுக்கு முகம் கொடுத்து அனைத்து துறைகளிலும் பூரணமாக கால் பதிக்க வேண்டும். அப்போது தான் நவீனமடைந்து வரும் துறைகளுக்கு சமதரத்தில் இஸ்லாமிய பதிலீடுகள் நடைமுறைக்கு சாத்தியமானதாக மாறும். பல கருத்து கோட்பாடு, பிரிவினை வாதம் ஒருபோதும் வெற்றி அளிக்க மாட்டாது.

கூட்டு இஜ்திஹாதினைப் பொறுத்த மட்டில் இது தனித்த இஜ்திஹாதினை விட வரலாற்றில் முந்திக்கொண்டதாகும். தெளிவான சட்ட வசனம் இல்லாத பிரச்சினைக்கு தீர்வு காணும் போது சஹாபாக்கள் ஷூரா அமைப் பினையே கையாண்டார்கள் என்பது தெளிவான உண்மையாகும். இதற்கு சஹாபாக்களின் வாழ்வில் பல வகையான நிகழ்வுகள் எமக்கு ஆதாரமாக இருக்கின்றன. உதாரணமாக அபூ பக்கர் (ரழி) அவர்கள் ஏதாவது பிரச்சினைக்கு தீர்வு காணும் போது கோத்திர தலைவர்களை யும், அறிவுடையோர்களையும் சபையில் சேர்த்து கொள்பவராக இருந்தார்கள். உமர் (ரழி) அவர்களும் இவ்வாறே நீதம் செலுத்தி ஆட்சி செய்து வந்தார்கள்[4] அதன் பின்னர் வந்த பரம்பரை ஆட்சியின் போதும் நல்ல பல மன்னர்கள் இவ்வாறே பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டார்கள் இதற்காக தமது அரச சபையில் தனியாக இமாம்களுக்கும், அறிஞர்களுக்கும் என்று ஒரு இடத்தினை ஒதுக்கி வைத்திருந்தார் கள். என்பது மறுக்க முடியாத வரலாற்று உண்மையாகும்.

இவ்வாறான கூட்டு இஜ்திஹாத் முறைமை யின் மூலமே முஸ்லிம் சமூகத்தினை விட்டு கைநழுவிப்போன இஸ்லாமிய கிலாபத்தினை மீண்டும் பெற்று எடுக்க முடியுமாக இருக்கின்றது.

## கூட்டு இஜ்திஹாதுடன் தொடர்புடைய சில விடயங்கள்

இஸ்லாமிய சட்ட மூலாதாங்களுள் கூட்டு இஜ்தி ஹாதுடன் சில போது ஒத்துப்போகும் அமைப்பில் சில விடயங்கள் உள்ளன. அவற் றுக்கும் கூட்டு இஜ்திஹாதுக்கும் இடையி லான தொடர்பினையும், வித்தியாசத்தினையும் இந்த தலைப்பின் ஊடாக ஆய்வு செய்வோம். அந்த வகையில் பின்வரும் விடயங்கள் ஆராயப்பட வேண்டியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இஜ்மா
2. பெரும்பாலான முஜ்தஹித்கள் ஒன்றுபடல்
3. ஷூரா

இஜ்மாவினை பொறுத்தமட்டில், நபி (ஸல்) அவர்களது மரணத்தின் பின்னர் ஏற்படும் மார்க்க ரீதியான ஒரு பிரச்சினைக்கு குறிப்பிட்ட காலத்தில் வாழும் அனைத்து முஜ்தஹித்களின தும் ஏகோபித்த ஒருமைப்பாட்டுடைய கருத்து இஜ்மா என வரைவிலக்கணப் படுத்தப்பட் டுள்ளது[5]. இந்த வரைவிலக்கணத்தின் படி ஒரு முஜ்தஹித் முரண்பட்டாலும் அது இஜ்மாவாக கொள்ளப்பட முடியாது என்பது இஜ்மா பற்றி பேசுகின்ற அறிஞர்களின் நிலைப்பாடாகும்.

இதனுடன் கூட்டு இஜ்திஹாதினை ஒப்பிடும் போது கூட்டு இஜ்திஹாதுக்கும் இஜ்மாவுக்கும் இடையிலான வித்தியாசமானது மிகத் தெளிவா னது. அதன்படி இஜ்மாவில் ஈடுபடும் ஒவ்வொரு வரும் கட்டாயம் முஜ்தஹித்களாக இருக்க வேண்டும் என்பது இஜ்திஹாதின் அடிப்படை நிபந்தனைகளில் ஒன்றாகும். அத்துடன் இஜ்மாவில் எகோபித்த கருத்து காணப்பட வேண்டும் என்பதும் இஜ்மாவின் அடுத்த அடிப்படை நிபந்தனை ஆகும்.

ஆனால் கூட்டு இஜ்திஹாதினை பொறுத்த மட்டில் அதில் முஜ்தஹித்களும் அத்துடன் குறிப்பிட்ட துறை சார்ந்த அறிஞர்களும் கலந்து கொள்வர். இங்கு அனைவரும் கட்டாயம் முஜ்தஹித்களாக அல்லது அவர்களின் தரத்தில் இருக்க வேண்டிய அவசியம் கிடையாது.

அத்துடன் இங்கு அனைத்து தரப்பினரினதும் ஏகோபித்த ஒரு கருத்து எதிர்பார்க்கப்பட மாட்டாது. கலந்துரையாடல்கள் மூலம் இயலு மானவரை பெரும்பான்மை அறிஞர்களின் கருத்துக்களின் அடிப்படையிலேயே முடிவுகள் பெறப்படும். ஆனால் ஒரு கருத்தே இறுதியாக அந்தக் கால நேர, சூழ்நிலைகளுக்கு ஏற்ப நடைமுறைக்கு எடுக்கப்படும்.

இன்றைய நவீன சட்ட பிரச்சினைகளை பொறுத்தவரையில் இஜ்மா என்பது வரை விலக்கணங்களின் கடுமையான நிபந்தனைகள் காரணமாக நடைமுறை சாத்தியமற்ற ஒரு விடயமாக காணப்படுகின்றது.

அடுத்து பெரும்பாலான முஜ்தஹித்களின் கருத்து ஒற்றுமையை ஆதாரமாக எடுத்து நடைமுறைப்படுத்தல் என்ற விடயத்தில் பெரும்பாலான அறிஞர்கள் கருத்து முரண் படுகின்றனர்.[6] ஏனெனில் குறிப்பிட்ட கொள் கையைச் சார்ந்த சில அறிஞர்கள் "நாம் அனை வரும் இந்த விடயத்தில் கருத்து ஒற்றுமை கொண்டுள்ளோம்" என்று ஒவ்வோர் அறிஞர் கூட்டமும் தமக்குள்ளே ஒன்றுபட்டு பிரிந்து போனால் நிலைமை மிக மோசமாக ஆகிவிடும். இதனாலும் இன்னும் பல அடிப்படைப் பிரச்சினைகள் கருதியும் இமாம்கள் இஜ்மாஉல் அக்ஸரிய்யாவினைக் கூட ஒரு சட்ட மூலாதார மாக கருதக் கூடாது என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்த பெரும்பாலான முஜ்தஹித்களின் கருத்து ஒற்றுமையினை பல இமாம்கள் இஜ்மாஉல் அக்ஸரிய்யா என்றும் வரைவிலக் கணப்படுத்தி உள்ளார்கள். ஆகவே இதுவும் தெளிவாக கூட்டு இஜ்திஹாத் என்ற வட்டத் தினை விட்டு வெளியேறுகின்றது.

இறுதியாக ஷூரா அதாவது கலந்துரையாடல் மூலம் தீர்வு காணல் என்பதுவாகும். இது கூட்டு இஜ்திஹாதுடன் பொதுவாக உடன்பட்டாலும் ஷூராவானது ஷரீஆ மற்றும் ஷரீஆ அல்லாத பல துறைகளில் இடம்பெறுகின்றது. இராணுவம், நிர்வாகத்துறை என்பவற்றை உதாரணமாக கூறலாம். ஆனால் கூட்டு இஜ்திஹாதானது ஷரீஆ துறைகளில் மாத்திரமே இடம் பெற முடியும் என்பது அனைவரும் ஏகோபித்து ஏற்றுக்கொண்ட ஒரு கருத்தாகும்.

## பகுதி இரண்டு - பத்வாக்களை நெறிப் படுத்துவதில் கூட்டு இஜ்திஹாதின் முக்கியத்துவம்

பிழையான பல மார்க்க தீர்ப்புக்கள் பலதரப்பட்ட தரப்பினால் தமது துறைகளுக் கும், தமது நிறுவனங்களுக்கும் சார்பான வகையில் மனோ இச்சைப்படி வழங்கப் பட்டுக்கொண்டு இருக்கின்றன. இதற்கான காரணங்கள் மற்றும் அடிப்படைக் காரணி களை சற்று ஆராய வேண்டி உள்ளது. இதன் படி இரண்டு முக்கியமான காரணிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டிக்காட்டுவது பொருத்தமானது. அந்த வகையில்,

சீர்கெட்ட சில பத்திரிகைத் துறையினரின் அடாவடித்தனங்கள் என்பது மிக அடிப்படை காரணிகளில் ஒன்றாக இருக்கின்றது. இஸ்லாம் பற்றிய எந்த விதமான அடிப்படை அறிவும் இல்லாமல் ஏனைய கொள்கைகளையும் கோட்பாடுகளையும், சித்தாந்தங்களையும் விமர்சிப்பது போன்று இஸ்லாமிய கருத்துக்கள், சிந்தனைகளையும் விமர்சித்து அவற்றிற்கு அவர்களின் பக்கவாத தீர்மானங்களை மக்களுக்கு மத்தியில் கொண்டுசெல்ல முயற்சிக்கின்றனர்.

நடுநிலைமையான முறையில் சிந்திக்காது செயல்படுகின்ற சில அறிஞர்களின் கருத்துக்களையும் மற்றும் அல்குர்ஆன், ஹதீஸ்களின் ஒருசில வாசகங்களை பிழையான முறையில் புரிந்து கொண்டும் பிழையான முறையில் பத்வாக்களை வழங்கிக்கொண்டு இருக்கும் இந்த முறைமை மிகவும் கண்டிக்கத்த விடயமாகும்.

அடுத்த முக்கியமான காரணியாக சில தொலைக்காட்சி மற்றும் வானொலி சேவை நிறுவனங்களின் செயற்பாடுகள் காணப்படுகின்றன. பிழையான பத்வாக்களை மக்கள் மயப்படுத்தும் முக்கிய ஊடகங்களாக இவை இருக்கின்றன.

பல்வேறுபட்ட நிகழ்ச்சி நிரல்களை உள்ளடக்கி பணத்தையும், புகழையும் சம்பாதிக்கும் நோக்குடனேயே செயல்படுகின்ற இந்த பாரிய நிறுவனங்கள் இஸ்லாத்தை சொற்ப பணத்துக்காக விற்பதற்கு தயங்குவதில்லை. அதிக பணம் தருபவர்களுக்கு நிகழ்சிகளை செய்ய அனுமதிக்கும் இந்த நிறுவனங்கள் இஸ்லாத்தின் பெயரால் பழைமையானதும் இட்டுக்கட்டப்பட்டதுமான பல பிற்போக்கான கருத்துக்களை மிகச் சாதாரணமாக எவ்வித ஷரீஆ அறிவும் இன்றியும், எந்த விதமான வரையறையும் இல்லாமல் வெளியிட்டு கொண்டு இருக்கின்றன.

இஸ்லாத்தை நவீனப்படுத்தல் என்ற பெயரில் மிகச்சரியான கருத்துக்களை விட்டுவிட்டு சடவாத, சியோனிச கருத்துக்களுக்கு சார்பான கருத்துக்களை இஸ்லாத்தின் பெயரால் வெளியிட்டு பொது மக்களை பிழையான இஜ்திஹாதின் பால் இட்டுச் செல்வதுடன் இஸ்லாம் பற்றிய பிழையான புரிதல்களை மக்கள் மத்தியில் பரப்பிக் கொண்டும் இருக்கின்றன.

இவ்வாறான பிழையான செயல்களை சுட்டிக்காட்டவும், உண்மையான இஸ்லாத்தின் பால் மக்களை அழைக்கவும் இந்த கூட்டு இஜ்திஹாத் எமக்கு வழிகாட்டுகின்றது. மத்ஹப், இயக்க பிரிவினைகளுக்கு அப்பால் நின்று ஒற்றுமையோடு இந்த கூட்டு இஜ்திஹாத் பணி செய்யப்படும் பட்சத்தில் பிளவுபடாத கருத்து ஒற்றுமையுள்ள இஸ்லாமிய எதிர்காலத்துக்கு கூட்டு இஜ்திஹாத் வித்திட முடியும் என்பது இத்துறைசார் அறிஞர்களின் நம்பிக்கையாகும்.

## கூட்டு இஜ்திஹாதின் நோக்கங்களும் அதன் முக்கியத்துவமும்

### இஸ்லாமிய சட்டங்களை ஒருமுகப்படுத்தல்

இது இஸ்லாமிய ஷரீஆவின் மிக அடிப்படையான விடயமாகும். அதாவது இஸ்லாத்தில் பழைய இஸ்லாம், புதிய இஸ்லாம் என்றோ, மேற்குக்கு ஒரு இஸ்லாம் கிழக்குக்கு ஒரு இஸ்லாம் என்றோ, பெரும்பான்மை சிறுபான்மை நாடுகளுக்கு வெவ்வேறு இஸ்லாம் என்றோ கிடையாது. சிறு சிறு வித்தியாசங்களே கால, இட, சூழ் நிலைகளுக்கு ஏற்ப மாறுபட்டாலும் இஸ்லாம் ஒன்றே ஆகும்.

பாரிய வேறுபாடுகள் காணப்படும் பொழுது நடுநிலைமையான ஒரு கருத்துக்கு வர வேண்டும் என்பது இஸ்லாத்தின் அடிப்படையான அம்சமாகும். உதாரணமாக நீண்ட இரவுகள் கொண்ட பிரதேசங்களுக்கு தொழுகை நேரங்கள் வித்தியாசமாக அமையும்போது அருகில் உள்ள சமநிலையான நாடுகளை பின்பற்ற வேண்டும். இது போன்ற எல்லா தீர்மானங்களும் கட்டாயம் கூட்டு இஜ்திஹாதின் நிழலிலேயே தீர்வு பெறப்பட வேண்டும். அப்போதுதான் ஒருமுகப்படுத்தப்பட்ட மார்க்கமாக இஸ்லாம் காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்குர்ஆனில் பல இடங்களில் இஸ்லாமிய சட்டங்களின் ஒருமைப்பாட்டை பற்றி தெளிவாக கூறப்பட்டுள்ளது. "நிச்சயமாக இந்த சமூகம் ஒரு சமுகமே ஆகும். நான் தான் வணக்கத்துக்குரிய இறைவனுமாவேன்" (முஃமினூன்: 25) அதாவது இந்த மார்க்கம் ஒரே மார்க்கமாகும். அடிப்படை சட்ட, நம்பிக்கை விவகாரத்தில் முரண்பாடுகள் காணப்பட முடியாது. மேலும் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் வணங்கவும் கூடாது என்பதுவே தப்ஸீர் ஆசிரியர்களின் விளக்கமாகும்.

## இஸ்லாமிய சட்டங்களின் அடிப்படைகளையும் ஆதாரங்களையும் அறிந்து செயற்படுத்தல்

இது கூட்டு இஜ்திஹாதின் மிகவும் முக்கியமான நோக்கங்களில் ஒன்றாகும். பலவீனமான ஆதாரங்கள் கொண்டு உருவாக்கப்பட்ட பத்வாக்களை அப்புறப்படுத்தி விட்டு உண்மையானதும் பாதுகாப்பானதும் நடைமுறை சாத்தியமானதுமான பத்வாக்களை மக்களுக்கு வழங்குவதே இதன் பணியாகும்.

தெளிவான அல்குர்ஆன், ஸுன்னா வசனங்களுக்கு முரண்பட்ட வகையில் அமைகின்ற பிற்போக்கானதும் பிழையானதுமான ஆதாரங்களின் அடிப்படையில் அமைந்த பத்வாக்களை விட்டும் கூட்டு இஜ்திஹாத் மக்களை தூரப்படுத்துகின்றது. உதாரணமாக வங்கிகளில் சேமிப்பில் வைக்கப்படும் சேமிப்புக்காக வழங்கப்படும் வட்டியை பிரயோசனப்படுத்துதல், முஸ்லிம் பெண் தான் தொடார்ந்து முஸ்லிமாக இருக்க, கணவன் மாற்று மதத்தவராக இருத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவை தெளிவான சட்ட வசனங்களுக்கு முரணானவை ஆகும்.

## பத்வாக்களை நெறிப்படுத்தல்

சட்டப் பிரச்சினைகளுக்கு சட்டத்தையும், பத்வாக்களையும் நெறிப்படுத்துவதுடன், அதனுடைய நிபந்தனைகள், எல்லைகள் என்பனவற்றை தெளிவுபடுத்துவதில் கூட்டு இஜ்திஹாத் பாரியதோர் பங்களிப்பினை செய்து வருகின்றது. தெளிவாகவே தான் சார்ந்த கொள்கைகளுக்கும், மனோ இச்சைகளுக்கும், தான் சார்ந்த அமைப்புக்களுக்கும் சார்பாக தெளிவான சட்ட வசனங்களுக்கு வலிந்து விளக்கம் கொடுத்து அதனை ஆதாரமாக வைத்து கொடுக்கப்படும் பத்வாக்களின் தீங்குகளை விட்டும் கூட்டு இஜ்திஹாத் முஸ்லிம் சமூகத்தை பாதுகாக்கின்றது.

## ஒவ்வொரு சட்டத்துக்குமான மூலாதாரம் தொடர்பில் ஆய்வு செய்தல்

எந்த வகையான இஜ்திஹாதாக இருந்தாலும் அது நடைமுறைப்படுத்தப்பட அந்த இஜ்திஹாதுக்கும் இஸ்லாமிய மூலாதாரங்களுக்கும் இடையிலான தொடர்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இதனை அல்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது "நீங்கள் ஏதாவது ஒரு விடயத்தில் முரண்பட்டுக்கொண்டால் அதனை அல்லாஹ்விடத்திலும் அவனது தூதரிடத்திலும் விட்டு விடுங்கள்" (சூரத்துன் நிஸா:19) அதாவது மனிதர்கள் யாராவது ஒரு விடயத்தில் முரண்பட்டுக்கொண்டால் அதனை அல்குர்ஆனிலோ அல்லது சுன்னாவிலோ தேடி தீர்வு கண்டு கொள்ளுங்கள் என்பதுவே அதன் அர்த்தம் ஆகும்.

ஆனாலும் சில சந்தர்ப்பங்களில் இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் மத்தியிலும் அல்லது மத்ஹப்களுக்கு மத்தியிலும் பாரிய கருத்து வேறுபாடு நிலவுகின்றது. ஒரு மத்ஹப் ஒரு விடயத்தை முழுமையாக ஆகுமானது என்று கூற இன்னுமொரு மத்ஹப் அதனை முழுமையாக மறுப்பதனை சில பத்வாக்களில் காணலாம். இவ்வாறான விடயங்களுக்கு அடிப்படைக் காரணம் சட்ட வசனங்கள் தெளிவாக வராமையாகும். அல்லது நவீனகால பிரச்சினைகள் என்பதனால் தெளிவாக விடயங்களை வரையறுக்க முடியாமையாகும். அல்லது அரபு மொழியின் அடிப்படை இயல்பு நிலைமையான பல பொருள் பிரச்சினை போன்றன காரணங்களாக இருக்கலாம். இவை விதிவிலக்கான சந்தர்ப்பங்களே ஆகும் ஆனாலும் கூட்டு இஜ்திஹாத் மூலம் கால, இட, நேர, சூழ்நிலைகளுக்கு ஏற்ப இவ்வாறான விதிவிலக்கான சந்தர்ப்பங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகளுக்கும் தெளிவான தீர்ப்புக்களை வழங்க முடியுமாக இருக்கின்றது.

சட்ட வல்லுனர்களுக்கான தகைமைகள்

தடி எடுப்பவன் எல்லாம் வேட்டைக்காரனாகிவிட்ட இந்தக்காலத்தில் எந்த விதமான அச்ச உணர்வும் இல்லாமல் பாதைகளில் எல்லாம் பத்வா வழங்கும் நடைமுறைக்கு கூட்டு இஜ்திஹாத் மூலம் உரிய தேர்வினை பெறும் நோக்குடன் கூட்டு இஜ்திஹாதில் கலந்து கொள்ளும் முஜ்தஹித்களுக்கும் மற்றும் துறைசார் அறிஞர்களுக்கும் சில நிபந்தனைகள் காணப்படுகின்றன.

1. ஒரு முஜ்தஹித் கூறும் கருத்து அடிப்படை மூலாதாரங்களில் இருந்து அமைதல் வேண்டும். அல்லது ஏதாவது ஒரு மத்ஹபின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு அமைதல் வேண்டும்.
2. ஒரு முஜ்தஹித் தனக்கு இயலுமான விடயங்களில் மாத்திரம் இஜ்திஹாத் செய்ய முற்பட வேண்டும். அவரது துறை சாராத விடயம் அல்லது அவருக்கு விளக்கம் குறைவாக உள்ள பகுதியாக அது இருக்கும் போது கூட்டு இஜ்திஹாத் முறைப்படி அடுத்தவர்களின் கருத்துக்கு இடமளிக்க வேண்டும்.
3. ஒரு முஜ்தஹித் மக்களின் ஆசைகளையோ அல்லது தான் சாரந்த் கொள்கைகளுக்கு, நிறுவனங்களுக்கு சார்பாகவோ, மனோ இச்சைப்படியோ தீர்ப்புக் கூறக் கூடாது. மாறாக சமூக நலன் மற்றும் பொது நலன்களை அடிப்படையாக வைத்தே தீர்ப்பு கூற வேண்டும்.

"யார் பத்வா சொல்ல முந்திக்கொள்கிறாரோ அவர் நரக நெருப்புக்கு முந்திக்கொள்கிறார்" என்ற ஹதீஸ் மிகவும் பிரபல்யமானதே. ஆகவே ஒரு முஜ்தஹித் கூட்டு இஜ்திஹாதின் போது இம்மூன்று நிபந்தனைகளையும் பின்பற்றும் போது கூட்டு இஜ்திஹாதின் அடிப்படையில் சட்டம் இயற்றுவதில் வெற்றியை அவதானிக்க முடியும்.

பகுதி மூன்று - இஸ்லாமிய சட்ட மன்றங்களுக்கும், மற்றும் பத்வா வழங்கும் நிறுவனங்களுக்குமான கூட்டு இஜ்திஹாதின் பங்களிப்பு

இருபதாம் நூற்றாண்டின் அரைப் பகுதியிலேயே செயற்பாட்டுக்கு வந்த கூட்டு இஜ்திஹாத் வழிமுறையானது நவீன இஸ்லாமிய சட்டத்துறையில் பாரிய பங்களிப்புக்களை செய்து வருகின்றது. குறிப்பாக வணிக வங்கித் துறை மற்றும் மருத்துவத் துறை என்பன இதற்கு சிறந்த உதாரணங்களாகும். இவை தவிர்ந்த இன்னும் பல விசலாமனதும், நவீனமடைந்தும் செல்கின்ற பல துறைகளுக்கு கூட்டு இஜ்திஹாத் பல வகைகளில் உதவிகள் செய்கின்றது. அந்த வகையில் கூட்டு இஜ்திஹாத் முறைமையினைப் பயன்படுத்தி பத்வாக்களையும், இஜ்திஹாத்களையும் உருவாக்கி மக்கள் மயப்படுத்துகின்ற சர்வதேச இஸ்லாமிய சட்டமன்றங்களுக்கும், பத்வாக்களை வழங்கும் நிறுவனங்களுக்கும் கூட்டு இஜ்திஹாத் செய்த பங்களிப்புக்களையும், செயற்பாடுகளையும் இந்த பகுதியில் ஆய்வு செய்வோம்.

கெய்ரோவில் உள்ள இஸ்லாமிய ஆய்வு நிலையம்

இதுவே மிகவும் பழைமை வாய்ந்ததும் ஆரம்ப காலங்களில் உருவாக்கப்பட்டு, கூட்டு இஜ்திஹாதினைப்பயன்படுத்தி ஆய்வுகளையும், பத்வாக்களையும், சட்டங்களையும் வெளியிட்டு வருகின்ற நிறுவனமாகும்.

இந்த நிறுவனமானது சமூகத்தில் காணப்படும் மத்ஹப்வாத, இயக்கவாத, அரசியல் வாதத்துக்கு அப்பால் நின்று எகிப்து மக்கள் அனைவரும் ஒரே சட்டத்தினை பெற்றுக் கொள்ளும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டது. இதன் வெற்றிக்கு அடிப்படையாக எல்லா மத்ஹப்களின் கருத்துக்களும் உள்வாங்கப்படல் வேண்டும் என்ற நோக்கோடு ஆறு வகையான அமைப்புக்களை தன்னுள்ளே உள்ளடக்கி இருக்கின்றது. அதில் ஷாபிஈ, ஹனபி, ஹன்பலி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலிகி போன்ற மத்ஹப் சார் அறிஞர்களையும் மற்றும் துறைசார் அறிஞர்களையும் உள்ளடக்கி இருக்கின்றது.

இந்த நிறுவனத்தின் பெரிய வெற்றியின் விளைவாக உலகுக்கு பல்வேறுபட்ட தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. அவற்றில் சிலவற்றை நோக்குவோம். அதில் பல்வேறுபட்ட வட்டி தொடர்பான பத்வாக்களும், காப்புறுதி தொடர்பான பத்வாக்களும் விசேடமானவை.

1. கடன் கொடுத்து அதன் மூலமாக பிரயோசனம் பெறுவது முழுமையான ஹரமானதாகும். இவ்வாறான கடன்கள் பல்வேறு பெயர்களில் இருந்தாலும் கூட உதரணமாக: நுகர்வுக் கடன், உற்பத்திக் கடன் போன்றவற்றை குறிப்பிடலாம்.
2. வட்டி கொஞ்சமாக இருந்தாலும் அதிகமாக இருந்தாலும் அது ஹராமானதாகும். அதுவும் எந்த வகையான பெயர்களில் இருந்தாலும் சரியே.
3. வட்டிக்காக வேலை செய்தல், வட்டி வங்கிகளில் வேலை செய்தல் ஹராமனதாகும். அதுவும் எப்பெயர் பெற்றாலும் சரியே.
4. வட்டிக்கு கடன் கொடுத்தல், வட்டிக்கு பணம் எடுத்தல் இரண்டும் ஹராமானவையே ஆகும். இங்கு எந்த வகையான நிர்ப்பந்தமும் ஹராத்தில் இருந்து வெளியேற்றாது.

இவை வட்டி மற்றும் கடனுடன் தொடர்பு பட்டதாகும், அடுத்து காப்புறுதி தொடர்பாக அவர்கள் வெளியிட்ட சில பத்வாக்களை அவதானிப்போம்.

1. மக்களுக்கும், சமூகத்துக்கும் உதவி செய்யும் நோக்குடன் சமூகத்தில் நல்ல முறையில் சேவை செய்யும் காப்புறுதி நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டவை ஆகும். அவை சமூக நலன் என்ற அடிப்படை நோக்கத்துக்காக செயற்பட வேண்டும்
2. ஓய்வூதிய கொடுப்பனவுகளை நிர்வகித்தல், விஷேட தேவை உடைய மக்களுக்கு உதவிகளை வழங்குதல் நோக்குடன் செயற்படுகின்ற காப்புறுதி நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டவை ஆகும்.
3. வியாபரம் சார்ந்த காப்புறுதிகள் மற்றும் மனித காப்புறுதிகளை பொறுத்தவரை அவை ஹராமானவை ஆகும்.

**உலக இஸ்லாமிய ஒன்றியத்தின் கீழ் இயங்கும் மக்காவிலுள்ள இஸ்லாமிய சட்ட மன்றம்**

உலக இஸ்லாமிய ஒன்றியத்தினால் காலத்துக்கு காலம் ஒவ்வொரு பிராந்தியத்திலும் கூட்டு இஜ்திஹாத் முறைமை மூலம் சிக்கலான பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் நோக்கோடு சட்ட மன்றங்கள் உருவாக்கப்படுகின்றன. அவற்றில் மிக முக்கியமான ஒரு சட்ட மன்றம்தான் மக்காவிலுள்ள இஸ்லாமிய சட்ட மன்றமாகும்.

இந்த நிறுவனத்தின் மூலம் மிக முக்கியமான பல தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த வகையில் காப்புறுதி தொடர்பான பல முடிவுகள், மாதாந்த தலைப்பிறையினை கணிப்பிடுவதற்கான சில அடிப்படை தீர்மானங்கள், முஸ்லிம், முஸ்லிம் அல்லாதோர் திருமண உறவுகள் தொடர்பான தீர்வுகள், ஹஜ் மற்றும் உம்ரா தொடர்பான விஷேட பல முடிவுகள், சடலத்தை கீறிக்கிழித்தல் சத்திர சிகிச்சை தொடர்பான சில சட்டங்கள், இஸ்லாமிய குடும்பவியல், பொருளாதார, குற்றவியல் தொடர்பான சில முடிவுகள் மற்றும் பத்வாக்களை மக்களுக்கு தெளிவுபடுத்தல் தொடர்பான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

**உலக இஸ்லாமிய ஒன்றியத்தின் கீழ் இயங்குகின்ற ஜித்தாவின் இஸ்லாமிய சட்ட மன்றம்**

மக்காவில் இயங்குவதைப் போல் ஜித்தாவிலும் உருவாக்கப்பட்ட முக்கியமான சட்ட மன்றம் ஒன்றுதான் ஜித்தாவில் உள்ள இஸ்லாமிய சட்ட மன்றமாகும். இதன் முலமாக இஸ்லாத்தில் பல்வேறுபட்ட துறைகளில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நவீன கல்வி முறைமை, நவீன பொருளாதார முறைமைகள் என்பன மிக முக்கியமான தீர்மானங்களாகும். இந்த சட்ட மன்றத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடாக நாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. குடும்பவியல், மருத்துவம், பொருளியல், வங்கியியல், அரசியல் துறைசார் தீர்மானங்களும் உள்ளடக்கப்பட்டு இருந்தன. இங்கு பத்வாக்களை வெளியிடும் நிமிர்த்தம் ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் கலந்துரையாடல்கள் இடம்பெற்ற பின்னரேயே கூட்டு இஜ்திஹாதின் அடிப்படையில் சுமூகமான தீர்மானங்கள் எட்டப்படுகின்றன.

இவை தவிர்ந்த ஏனைய சட்ட மன்றங்களும், ஒன்றியங்களும்

குறிப்பிடப்பட்ட இந்த சில சட்ட மன்றங்கள் தவிர இன்னும் ஏராளமான சட்ட மன்றங்கள் ஒவ்வொரு நாட்டிலும் இயங்கி வருகின்றமை மிக முக்கியமான விடயமாகும். இவற்றில் இந்தியாவில் இயங்குகின்ற சட்ட ஒன்றியம், அமெரிக்காவில் வோஷிங்டனில் இயங்குகின்ற இஸ்லாமிய சட்ட மையம், ஐரோப்பிய நாடுகளை அடிப்படையாக வைத்து இயங்குகின்ற ஐரோப்பிய சபை மற்றும் குவைத் நாட்டில் இயங்குகின்ற சட்ட மன்றங்களை இவற்றுக்கு உதாரணமாக கூறலாம்.

இவை தவிர சில பெரும்பான்மை இஸ்லாமிய நாடுகளில் ஒவ்வொரு துறைக்கும் தனித்தனி யான கூட்டு இஜ்திஹாத் மையங்கள் காணப் படுகின்றன. அந்த வகையில் குவைத்தில் இயங்குகின்ற மருத்துவம் தொடர்பான இஸ்லாமிய சட்ட மன்றம். இதில் பல்வேறு துறைசார் மருத்துவர்களும் இஸ்லாமிய சட்டத் துறைசார் உலமாக்களும் அங்கம் வகிக்கின்றனர். அதேபோல் குவைத்தில் இயங்குகின்ற பைதுல் ஸகாத் நிறுவனம். இது ஸகாத் மற்றும் பொருளாதாரம் தொடர்பான இஸ்லாமிய சட்டங்களை ஆய்வு செய்வதுடன் அவற்றினை அரச அனுமதியுடன் நடைமுறைப்படுத்தியும் வருகின்றது. இதன் பல்வேறு சட்ட மாநாடுகள் பல்வேறு நாடுகளில் நடத்தப்பட்டு வருகின்றமை இதன் சிறப்பம்சமாகும். எகிப்து, குவைத், பஹ்ரைன், சவூதி, லெபனான், சூடான் போன்ற நாடுகளில் இதுவரை பல மாநாடுகள் நடாத்தப்பட்டு வந்துள்ளன.

அத்துடன் குறிப்பாக சவூதி அரேபியாவில் இயங்குகின்ற பத்வாக்களுக்கான அமைப்பும் முக்கியமானதாகும். அந்த வகையில் இது இஸ்லாமிய குற்றவியல் சட்டங்கள், பிறை பார்த்தல் தொடர்பான விவகாரங்கள், தொழுகை நேரங்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வருவதுடன் அவற்றினை நடைமுறைப் படுத்தியும் வருகின்றது.

இவை மட்டுமன்றி டியுனேசியாவிலும், மொரோக்கோவிலும் பல இஸ்லாமிய பத்வா மையங்கள் காணப்படுகின்றன. இவை மூலமாகவும் பல இஸ்லாமிய சட்டங்கள் இஸ்லாமிய உலகுக்கு வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

முடிவுரை

நவீன காலத்திற்கு ஏற்ற வகையில் பிரயோசனமானதும் நடைமுறைக்கு சாத்தியமானதுமான பல முடிவுகளையும் பத்வவாக்களையும் பல்வேறுபட்ட துறைகளில் பெற்றுத்தரும் இந்த கூட்டு இஜ்திஹாத் நவீன கால துணை மூலதாரங்களில் ஒன்றாக கணிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இதன் மூலமாக மாத்திரமே நவீன கால மருத்துவ, வானியல், பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியுமாக இருக்கின்றது. பிளவுபட்டுக் காணப்படுகின்ற இஸ்லாமிய சமூகத்தினை ஒரே சட்டத்தின் கீழ் ஒன்றுபடுத்துவதற்கு இந்தக்கூட்டு இஜ்திஹாத் வழி வகுக்கின்றது.

தனிப்பட்ட இஜ்திஹாத்களின் மூலம் ஆளுக்கு ஒரு கருத்து என்று கூறி ஆளுக்கு ஆள் வெவ்வேறு வகையான சட்டங்களை பின்பற்றாமல் இஸ்லாத்தினை கூட்டாக இஜ்திஹாத் செய்து தூய ஒரே மார்க்கமான இஸ்லாத்தினை பின்பற்ற கூட்டு இஜ்திஹாத் எமக்கு வழி காட்டுகின்றது, இதன் மூலமாக சமூக ஒற்றுமை, இஸ்லாத்தினை தூய வழிமுறையில் பின்பற்றக் கிடைத்தமை மற்றும் பிழையான இஜ்திஹாத்களை விட்டும் முஸ்லிம்களை தூரப்படுத்தியமை, மிகச் சரியான கருத்தை நடைமுறைப்படுத்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தமை , எல்லா விடயங்களிலும் உளத் தூய்மையினை பாதுகாக்கக் கிடைத்தமை, இஸ்லாத்தினை நவீன காலத்துக்கு சார்பான தும் வழிகாட்டத்தக்கதுமான மார்க்கமாக அடையாளப்படுத்தியமை என்பன எல்லாம் கூட்டு இஜ்திஹாத் மூலம் முஸ்லிம் சமூகம் பெற்ற நன்மைகளாகும்.

இஸ்லாத்தின் அடிப்படைகளை விட்டு விலகாத முறையிலும், பொது நலன், சமூக நலன்களைக் கருத்திற்கொண்ட நிலையிலும் இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகளை கருத்திற் கொண்ட நிலையிலும் நடை முறைக்கு சாத்திய மான பல பத்வாக்களையும் முடிவுகளையும் கூட்டு இஜ்திஹாத் மூலம் எமக்குப் பெற முடியுமாக இருக்கின்றது. ஆகவே இந்த கூட்டு இஜ்திஹாத் முறைமையை விளங்கி செயற் படுத்த முயற்சி செய்வோம்.

## உசாத்துணைகள்


1. தாரீகுத் தஷ்ரீஇல் இஸ்லாமி-ஹிழ்ரி
2. அஃலாமுல் முவக்கியீன்-இப்னுல் கையிம் அல் ஜவ்ஸி (பாகம்:1, பக்கம்:1214)
3. அஃலாமுல் முவக்கியீன்-இப்னுல் கையிம் அல் ஜவ்ஸி (பாகம்:1, பக்கம்:64)
4. ஜாமிஉல் பயானில் இல்மி- பைரூத் பதிப்பகம் (1978)
5. அத்தக்ரீர் வத்தஸ்பீஹ் (பாகம்:3, பக்கம்:80), பவாதிஹுர்ரஹிமூத் ஷரஹ் முஸ்லிம் (பாகம்:2, பக்கம்:211), முஸ்தபா (இமாம் கஸ்ஸாலி), இஹ்காம் (ஆமிதி)
6. கஷ்புல் அஸ்ரார் (பாகம்:2 பக்கம்:965), ரவ்லதுன் நாழிர் (பாகம்:1 பக்கம்:385)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய பண்பாட்டுத் தெளிவு காலத்தின் தேவை

## (சீறாப்புராணம் மழையழைப்பித்த படலத்தினூடாக ஒரு முயற்சி)

* V. கமால் அஹ்மட் L.L.B (Hons)

### முன்னுரை

மானிட சமூகத்தின் பண்பாட்டினையும் அனுபவங்களையும் வெளிக்கொண்டு வந்து காட்சிப்படுத்துவதில் இலக்கியங்களுக்கு முக்கிய பங்குள்ளது. இவை காலத்தினைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்ற வகையில்மானிடரது இத்தகைய சமய, கலாச்சார பாரம்பரியங்களையும் அவர்கள் கண்டுகளித்த அனுபவங்களையும் தெளிவான விம்பங்களாக வெளிக்காட்டுகின்றன. இவ்விம் பங்கள் மனித வாழ்வுக்குத் தேவையான விழுமியக் கருத்துக்களை, மக்கட் பண்போடு இணைத்து எடுத்துரைக்கும்போதே, அவை சமூகத்தில் நிலையானதொரு அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்கின்றன.

இஸ்லாத்தைப் பொறுத்தவரை, அதனது போதனைகள் யாவும் மனித வாழ்வின் ஈடேற் றத்திற்கு அவசியமான அம்சங்களாக உள்ளன. இத்தகைய அம்சங்களை இலக்கிய வரம்பில் நின்று எடுத்தியம்பும் போது அது இஸ்லாமிய இலக்கியமாக உருவெடுக்கலாம். இவ்வகை யில், இஸ்லாத்தினைப் போதிப்பதற்கும் வளர்ப்பதற்குமான ஒரு ஆயுதமாக இலக்கியங் களைப் பயன்படுத்துவது வரவேற்கத்தக்க தாகும். இப்பின்னணியில் நோக்கும் போது வரலாறு நெடுகிலும் வெவ்வேறு காலகட்டங் களில் வெவ்வேறு இலக்கியவாதிகளினால் இத்தகைய முயற்சிகள் இடம்பெற்றுள்ளமை யினைக் காண முடிகிறது.

தமிழிலக்கியத்துறையைப் பொறுத்தவரை அங்கு தமிழ்ப் பண்பாட்டினதும் பாரம்பரியங் களினதும் தாக்கம் அதிகம் உணரப்பட்ட ஒன்றாகும். தமிழ் மொழி தோன்றி வளர்ந்த தாகக் கூறப்படும் சங்க காலம் தொடக்கம் தற்காலம் வரைக்கும் இது நீடித்து வருகிறது. இத்தகைய தமிழ்ப் பண்பாட்டுத் தாக்கமானது, இங்கு தோற்றம் பெற்ற இஸ்லாமிய இலக்கியங் களுக்குள்ளும் ஊடுருவியுள்ளமையும் மறுக்க முடியாத உண்மையாகும். இவ்வாறான ஊடுரு வல்கள் இஸ்லாமிய சமய நெறிகளுக்கும் கோட்பாடுகளுக்கும் குந்தகம் விளைவிக்கக் கூடும் என்ற அச்சத்தின் வெளிப்பாட்டினால், நூலுருப்படுத்தப்பட்ட பல இலக்கியங்கள் மீள பதிப்பிக்கப்படாமலும் எடுத்துரைக்கப்படா மலும் இருந்து வருகின்றன.

மேற்கண்ட அச்சமானது, நியாமான ஒன் றென ஏற்கப்படினும், இதனால் அவ்விலக்கி யங்கள் கூற எத்தனிக்கும் நல்ல பல கருத்துக் களையும் உபதேசங்களையும் சேர்த்தே பலர் பயனற்றவை என ஓரங்கட்டுகின்றனர், ஆக இத்தகைய ஓரங்கட்டல்களுக்கு அப்பால் எவ்விதம் ஒரு இலக்கியத்தினை நெறிமுறையாக அணுகி, அது கூறவரும் சமூக விழுமியக் கருத்துக்களையும் பண்பாட்டுப் பதிவுகளையும் ஏனைய சமூகத்தவருக்கு எடுத்துரைக்கலாம் என இங்கு ஆராயப்படுகிறது.

இஸ்லாமிய கோட்பாடுகள் மற்றும் பண் பாட்டு நெறிகளை மையப்படுத்தி, முறையற்ற பல விமர்சனங்களும் விசமக் கருத்துக்களும் கட்டவிழ்த்து விடப்படும் தற்கால சூழலுக்கு

*சட்டத்தரணி
*kamallaw92@gmail.com*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமானதொரு காரணியாக, இஸ்லாமிய பண்பாடுகள், கலாச்சார நெறிகள் முறையாக ஏனைய இன, மத பிரிவினர்களுக்கு தெளிவுறுத்தப்படாமையினைக் குறிப்பிடலாம். இத்தகைய தெளிவுறுத்தலள் பல்லின சமூகங்களைக்கொண்டு காணப்படும் இலங்கை உள்ளடங்கலான பல நாடுகளில் அச்சமூகத்தவர் மத்தியில் சிறந்த நல்லிணக்கத்தினையும், புரிந்துணர்வினையும் ஏற்படுத்தலாம்.

இதன்படி இலக்கியங்களை சமூக நல்லிணக்கத்திற்கும், புரிந்துணர்வுக்குமான சாதனமாகப் பயன்படுத்த எம்மவர் முன்வர வேண்டும். என்பதனையும் துணைப் பொருளாக நான் இங்கு கூற விழைகிறேன். இதற்காக இவ்வுள்ளடக்கத்தில் சீறாப்புராணம் எனும் இஸ்லாமிய இலக்கியத்தின் மழையழைப்பித்த படலம் ஆய்வுக்குட்படுத்தப்படுகிறது.

## உமருப் புலவரின் சீறாப்புராணம்

சீறாப்புராணம் இந்தியாவினை பிறப்பிடமாகக் கொண்ட உமறுப்புலவரால்(1642) இயற்றப்பட்டதாகும். இது காப்பியம் எனும் இலக்கிய வடிவத்தினைக் கையாண்டு நபி முஹம்மத்(ஸல்) அவர்களது வாழ்க்கை வரலாற்றினையும் அவரது அறிவுரைகளையும் எடுத்துக் கூறுகிறது.

' சீறா' என்பது ' சீறத்' என்ற அரபிச் சொல்லின் திரிந்த வடிவமாகும். பயணம் (journey) அல்லது சரிதை என்பது அதன் பொருள். இஸ்லாமிய பரிபாசையில் நபியவர்களின் வாழ்க்கைச் சரிதையினை மட்டும் குறிப்பாகக் கூறவே இச்சொல் கையாளப்படுகிறது. இது தவிர ஏனைய (நபர்களது) சரிதையினைக் கூற ' தாரிஹ்' என்ற சொல்லே பெருவழக்கில் பயன்படுத்தப்படுகிறது. ' புராணம்' என்பது புராணா எனும் சமஸ்கிரத (வடமொழி) சொல்லின் திரிந்த வடிவமாகும். வரலாறு அல்லது பழைமை என்பது அதன் பொருளாகும். இச்சொல்லானது இந்துக்களது வேதங்களைச் சுட்டிக் கூறவே அதிகம் பயன்படுத்தப்படுகிறது. எனவே இவ்விரு சொற்களும் இணைந்து முகம்மத் நபி (ஸல்) அவர்களது வாழ்க்கைச் சரிதத்தைக் கூற உமறுப் புலவரால் கையாளப்பட்டுள்ளது.

உமறுப்புலவரினால் சீறாப்புராணம் என்ற பெயருடன், தமிழக பண்பாட்டினை அவரது இலக்கியங்களுள் கையாள, சில சூழலியல் காரணிகள் காலாயமைந்தன. அவ்வகையில், உமறுப்புலவர் வாழ்ந்த அக்காலப்பகுதியில், இந்தியாவில் ஆங்காங்கே இருந்த முஸ்லிம் மக்கள் தமக்கிருந்த இலக்கிய ஆர்வத்தின் காரணமாக கம்பராமாயணம், மகாபாரதம் முதலிய இந்து மத இலக்கியங்களின் போதனைகளையும், இதிகாசக் கதைகளையும் கேட்டு வருவதனைக் வழக்கமாகக் கொண்டிருந்தனர். இக்கால கட்டத்தில் வாழ்ந்தவரான ' சீதக் காதி மரைக்காயர்' என்பவர், முஸ்லிம்கள் அவர்களது மார்க்க அடிப்படையில் அமைந்த இலக்கியங்களை படித்துப் பயன்பெற வேண்டும் என விருப்பம் கொண்டிருந்தார். இதனாலேயே உமறுப்புலவரினை நபியவர்களது வாழ்க்கை வரலாற்றினை அடியொற்றி ஒரு காப்பியத்தினைப் படைக்குமாறு வழிப்படுத்தியிருந்தார். ஆக, சீறாப்புராணம் இயற்றப்பட நோக்காய் இருந்த ஒரு விடயம் இஸ்லாமிய மார்க்க உபன்னியாசங்களினை எடுத்தியம்ப வேண்டும் என்பதாகும்.

என்றாலும் உமறுப்புலவர் இங்கு கையாளும் சொற்கள், எடுத்துக்காட்டும் உதாரணங்கள் என்பனவெல்லாம் அவர் இஸ்லாமிய பண்பாட்டினை ஏனைய பண்பாடுகளுடன் கலப்புற செய்திருப்பதாக எண்ணத் தோன்றுகிறது. இதனாலேயே உமறுப்புலவர் இஸ்லாமிய பண்பாட்டிற்கும் ஏனைய பண்பாடுகளுக்குமிடையே ஒரு தெளிவான கோட்டினை வரைவதில் தோல்வி கண்டுவிட்டார் எனப் பல தரப்பினரும் விமர்சனம் செய்கின்றனர். இவ்விதம் David Shulman (1984) அவர்களின் விமர்சனம் குறிப்பிடத்தக்கவொன்றாகும். இத்தகைய விமர்சனங்களும் நியாப்பாடுகளும் எமது ஆய்வுக்கு அவ்வளவு அவசியமான விடயமாக நான் கருதவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான விமர்சனங்களுக்கு மத்தியில் சீறாப்புராணத்தின் உள்ளடக்க முறைமையினை நோக்குகின்ற போது, உமறுப்புலவரினது இலக்கியப் பாடுபொருளானது இஸ்லாமிய பாரம்பரியங்களினை ஏனைய சமூகத்தவருக்கு எடுத்துச் சொல்வதனை நோக்காகக் கொண்டதாகத் தெரிகிறது.

## மழையழைப்பித்த படலம்

சீறாப்புராணம் - மழையழைப்பித்த படலமானது, குறித்தவொரு காலகட்டத்தில் அரேபிய (மதீனா வாழ்) மக்கள் மழையின்றி, பஞ்சத்தினாலும் கொடிய வறுமையினாலும் அவதியுற்ற விதம் பற்றியும் அதிலிருந்து மீண்டெழும் வண்ணம் இறைவனின் உதவியினை நாடி நின்ற விதம் பற்றியும் கூறும் பகுதியாகும்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை, அவர்களது இறை நம்பிக்கையும் விசுவாசமும் பூரணமடைய சில அடிப்படையான விடயங்களினை உறுதியாக நம்பியாக வேண்டும். இவற்றுள் முக்கியமான ஒன்றே " இறை நிர்ணயம்" சகலதும் இறைவனின் விருப்பப்படியும் ஆணைப்படியுமே நடக்கின்றன (அரபியில் கழா-கத்ர் என்பர்) எனும் கோட்பாடாகும்.

நபி (ஸல்) அவர்களது பொன்மொழி (ஹதீஸ்) பின்வருமாறு ஏற்பாடு செய்கிறது:

" ஐந்து காரியங்களை அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறிய முடியாது,

1. நாளை என்ன நடக்கும் என்பதனை எவரும் அறிய முடியாது.

2. கருவறைகளிலுள்ள நிலமைகளை எவரும் (தெளிவாக) அறிய முடியாது.

3. ஒருவர் நாளை எதைச் சம்பாதிப்பார் என்பதனை அறிய முடியாது.

4. ஒருவர் தான் எந்த இடத்தில் என்பதனை அறிய முடியாது.

5. மழை எப்போது வருமென்பதனையும் எவரும் அறிய முடியாது. (ஸூரா லுக்மான்) (புஹாரி பக்கம் : 15 ஹதீஸ் எண்: 1039)

ஆகவே, மழை எனும் அருள் இறைவனது நிர்ணயத்துடன் இணைந்ததொரு விடயமென்பது முஸ்லிம்களது ஆழ்ந்த நம்பிக்கையாகும். இந்த நம்பிக்கையின் வெளிப்பாடாகவே, மழையின்றிக் கிடந்த அந்த அரேபிய மக்கள் தமது துன்பங்களைக் கூறி, சமூகத் தலைவரான முகம்மத் நபி (ஸல்) அவர்களை இறைவனிடம் மழை வேண்டிப் பிரார்த்திக்குமாறு கூறுகின்றனர்.

இங்கு மக்கள் நபியவர்களுடன் இணைந்து இறைவனிடம் பிராத்திக்க வேண்டும் எனக் கூறுவதானது, மனிதராகிய நாம் இறைவனுக்கு முன்னால் தமது சகல காரியங்களினையும் அர்ப்பணம் செய்து எம்மை அடிமைகளாக காட்டிக் கொள்ள வேண்டும் என்ற மேலான சிந்தனையினை எடுத்துக் காட்டுவதாகத் தெரிகிறது.

உமறுப்புலவர் இந்த படலத்தில் எடுத்துக் கூறும் பாடு பொருள் அல்லது சம்பவமானது வெறுமனே ஒரு கற்பனைச் சம்பவமோ அல்லது ஊகித்த விடயமோ அல்ல. மாறாக இது இற்றை வரைக்கும் முஸ்லிம்களிடத்தில் நிலவி வரும் முக்கிய வேண்டுதலாகும்.

இவ்விதம் முஸ்லிம்கள் மழை வேண்டித் தொழும் தொழுகையினை 'சலாத்துல் இஸ்திஸ்கா - என அரபியில் கூறுவர்.

மழையழைப்பித்த படலத்தின் முதலாவது பாடற் செய்தியாக முகம்மத் நபி (ஸல்) அவர்கள் பற்றிய பொதுவானதொரு அறிமுகத்தினையும் அவரது மாண்புகளையும் புலவர் எடுத்துக் காட்டுகிறார். இவ்வகையில் கோபமற்ற ஹலீமா எனும் வளர்ப்புத்தாயிடம் பால் குடித்து வளர்ந்த தனி முதற் தூதர், தலைவர் என்ற வருணிப்பு இடம்பெறுகிறது. ஒரு சிறந்த தலைவருக்கு இருக்க வேண்டிய பண்புகளில் ஒன்றே வீண் கோபம் அல்லது மக்களைக் கடிந்து கொள்ளும் நிலையினை நீக்குததாகும் என உணர்ந்து இவ் வருணிப்பு கூறப்பட்டிருக்கலாம்.

அத்தோடு நபியவர்களை அவரது ஏனைய தோழர்கள் சூழ்ந்து கொண்டிருக்கும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தியும் வருகிறது. இவ்வகையில் அத்தோழர்களை கூற 'அசுகாபிமார்' என்ற சொற்றொடர் கையாளப்பட்டுள்ளது. இது *ஸஹாபா* என்ற அரபிச் சொல்லினை அடியொற்றி வந்ததாகும். இதன் அர்த்தம் தோழர்கள் அல்லது நண்பர்கள் என்பதேயாகும்.

இவ்வாறு தோழர்கள் சூழ்ந்து கொண்டிருக்கும் போதே, நபியவர்களிடம் மழையின்மையால் மக்கள் படும் அவதியும், துன்பமும் எடுத்துக் கூறப்படுகிறது. அச்செய்தி ஆரம்ப கட்டமாக

" சீர்த்தி சேர் வள்ளல் வெள்ளிக் கிழமையில் குத்துபாவில் ஆர்த்து

எழுந்து ஓதி மின்பர் அதனிடை இருக்கும் போதில்........

என்ற ஆரம்ப அடிகளோடு பாடல் வருகிறது. இங்கு சம்பவம் இடம்பெற்றது ஒரு வெள்ளிக்கிழமை நாள் என்று தெளிவாக பாடல் கூறுகிறது. வெள்ளிக்கிழமை நாளென்பது முஸ்லீம்கள் பள்ளிவாசலில் ஒன்று சேர்ந்து நல்லுபதேசங்களைக் கேட்டு, தொழுகையில் ஈடுபடும் நாளாகும். இந்த நல்லுபதேச உரையினைக் குறிக்கவே *'குத்பா'* என்ற அரபிச் சொல் பயன்படுத்தப்படும். இத்தகைய பிரசங்கத்தினை நிகழ்த்தும் தலைவர் (இமாம்) வீற்றிருக்கும் இடமே *'மிம்பர்'* என்று வழங்கப்படும். இது இப்பாடல்களில் *'மின்பர்'* என திரிபடைந்து வந்துள்ளது. இத்தகைய தொரு மேடையில் அல்லது இடத்தில் பிரசங்கம் நிகழ்த்திக் கொண்டிருக்கும் போதே அங்கு வந்த சேர்ந்த நபித்தோழர் மக்களது துன்ப நிலைகளை எடுத்துக் கூறுகிறார்.

இத்துன்ப நிலைகள் அடுத்துவரும் ஆறு (6) பாடல்களின் வாயிலாக எடுத்துரைக்கப் படுகின்றன. இதே செய்தியினைக் கூறும் வகையிலேயே புஹாரி எனும் ஹதீஸ் நூலில் நபி மொழி ஒன்று இடம்பெறுகிறது:

" நபித்தோழர்களில் ஒருவரான் அனஸ் (ரழி) அவர்கள் கூறினார்கள், நபி (ஸல்) அவர்கள் காலத்தில் மக்களுக்கு பஞ்சம் ஏற்பட்டது. நபியவர்கள் ஒரு வெள்ளிக்கிழமையன்று மிம்பரில் உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும் போது, ஒரு கிராமவாசி எழுந்தார். நபியவர்களே! செல்வங்கள் அழிந்துவிட்டன. குடும்பத்தார் பட்டினியில் வாடுகின்றனர். எங்களுக்கு மழை பொழியச் செய்யுமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள் என்று அவர் கூறினார். பின்பு நபியவர்கள் தன் இரு கைகளையும் ஏந்தி பிரார்த்தனை செய்தார்கள்......."*(ஸஹீஹ் புகாரி பாகம் 1 அத்தியாயம் 15 ஹதீஸ் இல:1021)*

என்று அச்செய்தி தெளிவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே உமறுப்புலவர் இம்மழையழைப்பித்த படலத்தில் மேற்கண்ட ஹதீஸினை உள்வாங்கியே தனது பாடல்களை நகர்த்திச் செல்கிறார்.

இவ்வாறான செய்தியை புலவர் மிக விரிவாக எடுத்து நோக்கியதாகத் தெரிகிறது. அவ்வகையில்,

" மாரி நீர் வறந்து சோலை மரம் இலை உதிர்ந்து மிக்க

பாரினில் எழுந்த பைங்கூழ் பசை அறக்கருகி...."

என வரும் பாடல்களில் அந்த விபரிப்பினைக் காணமுடிகிறது.

எங்கும் நீரானது வற்றப்பெற்று, சோலைகளிலுள்ள மரங்கள் யாவும் கருகின, பூமியில் இருந்த பச்சிளம் பயிர்கள் எல்லாம் அழிவடைந்து, கானல் நீர் எங்கும் தோன்றும் படியாக வறட்சியே பெருகியது எனக் கூறுவதோடு, இவ்வறட்சியினால் சிறியவர் பெரியவர் என அனைவரும் பசியினால் வாட்டமடைந்து பொலிவிழந்து காணப் பட்டதாகவும் கூறப்படுகிறது. மேற்கண்ட ஹதீஸின் நிழலில் பார்க்கும் போது, உமறுப் புலவர் அச்செய்தியினை உள்வாங்கி தனது விரிந்த சொல்லாட்சியினால் அதனை சற்று விபரித்திருப்பதனைக் காணமுடிகிறது.

அது போலவே, வறட்சியினால் மக்களைச் சூழ்ந்து கொண்ட துன்பத்தினால், அவர்களது இயல்பான நல்லொழுக்கம், நற்பண்புகள் தொலைக்கப்பட்ட செய்தியையும் புலவர் எடுத்துக் காட்டுகிறார். அதீத வறட்சியினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது பசியினைப் போக்க எண்ணிய மக்கள் இழி செயல்களான களவு முதலியவற்றை செய்ய தலைப்படல், வரும் விருந்தாளிகளை கவனிக்க வழியின்றி வெட்கமடைந்து கதவினைப் பூட்டி வீட்டினுள் அடைபட்டுக் கிடத்தல் முதலிய நிலைக்கு தள்ளப்பட்டமையினையும் புலவர் கூறுகிறார்.

இத்தகைய எடுத்துரைப்புக்களின் உட்பொருள் யாதெனில், மேற்கண்ட இழி செயல்கள் தவிர்க்கப்படல் வேண்டும் என்பதேயாகும். நன்மை - தீமை, வறுமை - செல்வச் செழிப்பு என்பனவெல்லாம் இறைவன் புறத்திலிருந்து வரும் சோதனைகள் என்ற நிலையுடனேயே மானிட சமூகம் தம்மை நிலைநிறுத்திக் கொண்டு பாவ காரியங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளல் வேண்டும் எனும் உபதேசத்தினையே இப்பாடல்கள் எடுத்தியம்பு கின்றன.

இப்பாடல்களுள் மனிதர்கள் அடைந்த துன்பத்தோடு இணைத்து ஏனைய ஜீவராசிகள், கால்நடைகள் என்பனவும் அனுபவித்த துன்பங்களை புலவர் தெளிவாக காட்சிப் படுத்துகிறார். இதனால் எல்லா ஜீவராசிகளுக்கும் பொதுவாகவே மழைக்கான பிரார்த்தனை இடம்பெற வேண்டும் என்பதன் தேவையும் இங்கு உணர்த்தப்படுகிறது.

முஸ்லீம்கள் மழை வேண்டித் தொழுகையில் ஈடுபடும் போது தொழுகை நடத்தும் நபர் அல்லது சமூகத் தலைவரின் தலைமையில் திறந்த வெளி ஒன்றில் ஒன்று கூடுவர். அத்தோடு அந்த வெளியில் தமது கால்நடைகளையும் கொண்டுவந்து வைத்த பின்பே தொழுகையிலும் அதனோடு இணைந்த பிராத்தனையிலும் ஈடுபடுவர். இந்நடைமுறையானது ஆரம்ப கால அரேபிய முஸ்லிம்கள் தொட்டு இற்றை வரைக்கும் இருந்து வருகிறது. இதன் முக்கிய தாற்பரியம் யாதெனில் மழை எனும் அருளானது மனித சமூகத்தினை மட்டுமின்றி முழு உயிரனங்களினையும் போசிக்கும்படியானது என்பதேயாகும்.

இவ்வாறான எண்ணிறைந்த துன்பங்களை எடுத்துக் காட்டியே மழை வேண்டிப் பிரார்த்திக்க வேண்டும் என்பதன் அவசிய நிலை எடுத்துக்காட்டப்படுகிறது. இவற்றை செவியுற்ற நபியவர்கள் பிரார்த்தனை செய்யும் சம்பவம் கீழ்வரும் பாடலில் இடம்பெறுகிறது:

" திருத்தமாய் உரைப்ப கேட்டு திருநபி இரங்கி பாரில் வருத்தங்கள்

நீக்க வேண்டி மனத்தினில் கிருபை மீறி பொருந்து அரும் புறுக்கான்

வேதப் பொருளினை எவரும் உள்ளத்து இருத்து அரும் ஒளியை

உன்னி இரு கை ஏந்தி துஆ இரந்து."

இங்கு புலவர் கையாண்ட *'புறுக்கான்'* என்ற சொல் முஸ்லிம்களால் வேத நூலான அல் குர்ஆனுக்கு வழங்கும் இன்னொரு பெயராகும். *'துஆ'* எனும் சொல் அரபியில் இறைவனிடம் செய்யப்படும் பிரார்த்தனையினை குறிப்பிடப் பயன்படும். இவ்விதம் அல்குர்ஆனினை முன்னிலைப்படுத்தி இரக்க சிந்தனை பெருகி, நபியவர்கள் பிரார்த்தனை செய்த விதமும் பின்னர் அதனால் மழை பொழிந்த விதமும் தொடர்ந்து புலவரால் எடுத்துக் காட்டப்படுகிறது.

நாம் முன்னர் எடுத்துக் காட்டிய ஹதீஸில் இதே செய்தி ஏற்பாடு கூறப்பட்டுள்ளது,

"....நபி (ஸல்) அவர்கள் தங்களின் கைகளினை உயர்த்தினார்கள். இறைவா ! மழையைப் பொழியச் செய்வாயாக ! என்று இரு முறை கூறிப் பிரார்த்தனை செய்தார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக, அப்போது வானத்தில் (அதுவரை) எந்த மேகத்தையும் நாங்கள் காணவில்லை. திடீரென மேகம் தோன்றி மழை பொழிந்தது. பின்னர் நபியவர்கள் மிம்பரிலிருந்து தொழுகை நடாத்தினார்கள், மழை அடுத்த (வெள்ளிக் கிழமை) ஜும்மா வரை நீடித்தது.." *(ஸஹீஹுல் புஹாரி பாகம் 1 அத்தியாயம் 15, ஹதீஸ் இல:1021)*

இந்த ஹதீஸின் பிரதிபலிப்பினைத் தொடர்ந்து வரும் பாடல்களில் காணமுடிகிறது. ஹதீஸின் படி நோக்கும் போது, மழையானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த ஜும்ஆ நாளான வெள்ளிக்கிழமை வரைக்கும் நீடித்தது என்ற அர்த்தம் கிட்டுகிறது. அதாவது 7 நாட்கள் என்று நேரடியாகப் பொருள் கொள்ளலாம். உமறுப்புலவர் இம்மழை நாட்களைக் கூறும் போது,' ஆறிரு நாண் மழை' என ஏற்பாடு செய்கிறார். இது 'ஆறு இரு நாள் மழை' என பிரிக்கப்படும். இதன் நேரடிப் பொருளாவது (6×2=12) பன்னிரண்டு நாட்களென அமையும்.

என்றாலும், 'ஆறு இரு நாள் மழை' என்பதில் வரும் "இரு" என்பதற்கு 'பெரிய' என்ற இன்னொரு பொருளும் கொள்ளலாம் *(வெற்றித்தமிழ் அகராதி பக்கம் – 52, ச. மெய்யப்பன, மணிவாசகர் பதிப்பகம்).* ஆக ஆறு பெரிய நாட்கள் என அமையும். ஆறு பெரிய - முழுமையான நாட்கள் என்பதே அதன் பொருளாகும். இதன்படி அடுத்த நாள் முழுமையடையாத நாளாக இருக்க வேண்டும் (முற்பகல் பொழுது மட்டும் - அதுவே ஏழாம் நாளான வெள்ளிக்கிழமை). இதன்படி மொத்தமாக ஏழு நாட்கள் மழை பொழிந்தது எனவும் பொருள் கொள்ளலாம். இத்தகைய பொருட் பேதங்கள் செய்யுள்களில் தவிர்க்க முடியாத ஒன்றாகும். என்றாலும் குறித்த நபி மொழியில் ஏற்பாடு செய்யப்பட அறிவிப்பில் எத்தகைய குழப்பமும் கிடையாது.

இந்த அதீத மழையினால் மேலும் இன்னொரு வகைத் துன்பம் பீடித்தமையினை மேற்கண்ட நபி மொழியின் அடுத்த பகுதி கீழ்வருமாறு கூறுகிறது:

"..... மழை அடுத்த ஜும்ஆ (வெள்ளிக் கிழமை) நாள் வரை நீடித்தது. நபி (ஸல்) அவர்கள் உரை நிகழ்த்தும் போது, அதே கிராமவாசி அல்லது வேறொருவர் எழுந்து, நபியவர்களே! கட்டிடங்கள் இடிந்து விட்டன, செல்வங்கள் மூழ்கி விட்டன. எங்களுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள் என்றார்...."

இங்கு முன்னர் மழையின்றி மக்கள் அனுபவித்த துன்பத்தைப்போல, கிடைத்த அதீத மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் செல்வங்ளோடு உயிர்கள் காவப்பட்டமை முதலிய துன்பங்கள் இன்னும் விரிவாக உமறுப்புலவரினால் கூறப்படுகின்றன.

இதே தொடரில், மேற்கண்ட நபிமொழி முடிவடையும் போது, இறைவனிடம் நபியவர்கள் மழையினை நிறுத்துமாறும், அந்த மழையினை பிரயோசனமான ஒன்றாக ஆக்கித் தருமாரும் பிரார்த்தனை செய்கிறார்கள். இச்செய்தி கீழ்வருமாறு நபிமொழியின் வாயிலாக அறிவிக்கப்படுகிறது:

"..... நபி (ஸல்) அவர்கள் தங்களின் கைகளை உயர்த்தினார்கள். இறைவா! எங்கள் சுற்றுப் புறங்களுக்கு (இம்மழையைத் திருப்புவாயாக!) எங்களுக்கு எதிரானதாக் இதனை ஆக்கி விடாதே என்று கூறினார்கள். அவர்கள் வானத்தினை நோக்கித் தம் கையால் சைகை செய்த போதெல்லாம் மேகங்கள் விலகிச் சென்றன. முடிவில் மதீனா நகரம் ஒரு குன்றின் மீது அமைந்திருப் பதனைப் போல மாறியது...."

அத்தோடு இதேவாறான ஹதீஸ் பதிவு செய்யப்பட்டுள்ள புஹாரியின் இன்னொரு அறிவிப்பில்,

'.....சுனாத்' எனும் நீரோடை ஒரு மாதம் ஓடியது. எப்பகுதியிலிருந்தும் வரக் கூடியவர்கள் இம்மழையைப்பற்றி பேசாமலில்லை. " என்ற செய்தியும் இணைத்துக் கூறப்பட்டுள்ளது. *(ஸஹீஹுல் புகாரி பாகம் 1 அத்தியாயம் 15 ஹதீஸ் எண்: 1033)*

இதே விதமாகவே சில விசேடமான வருணிப்புக்களையும் உதாரணங்களையும் கையாண்டு உமறுப்புலவர் மழையழைப்பித்த படலத்தினை நிறைவு செய்கிறார். அவ்விதம்,

" நன்மைகள் எவர்க்கும் நடத்திட வந்த
நபி துவா செய்திட முகிலும்
தென்வரை முதலாம் வரைகளில் புகுந்த
தினகரன் விசும்பிடை செறிந்தான்....."

என்று நிறைவு செய்யும் போது நபியவர்களது துஆ பிரார்த்தனையினை மீளவும் பொருந்திக் கொண்ட இறைவன் மழையினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தி இன்னொரு வகையிலான அருளைச் செய்தான் எனக் கூறுகிறார்.

## முடிவுரை

மேற்கண்ட கலந்துரையாடலின் வாயிலாக, சீறாப்புராணத்தின் பாடு பொருளில் பரவலாக இஸ்லாமிய நெறிமுறைகளினை மையப்படுத்தி சில அரிய வகையிலான சமூக விழுமியக் கருத்துக்களையும் நற்செய்திகளையும் கூற உமறுப்புலவரினால் முடிந்துள்ளது எனும் விடயம் என்னால் துணியப்பட்டது.

எனவேதான், இந்த அணுகுமுறையினை இலக்கியவாதி, வாசகன் உள்ளடங்கலாக விமர்சகர்களும் மனதிற் கொண்டு முறையே இலக்கியங்களைப் படைக்கவோ, படிக்கவோ, விமர்சனம் செய்யவோ முன்வர வேண்டும். இதனால் இஸ்லாமிய இலக்கியங்களுக்குள் காணப்படும் தெளிவின்மைகள் நீக்கப்பட்டு, தெளிவான உபதேசங்ஸகள் பிற சமூகத்தவரிடையே கொண்டு சேர்க்கப்பட ஏதுவான சூழல் உருவாகலாம்.

## உசாத்துணைகள்:


1. David Shulman, *Muslim Popular Litereture in Tamil, The Tamimancari Malai in Islam in Asia*, ed.Y Fried mann, Vol.1(Jerusalam, Magnes, 1984)
2. Ronit Ricci,*Islam Translated. Literature, Conversion, and the Arabic Cosmopolis of South and Southeast Asia.* University of Chicago Press, 2011
3. SM.Sulaiman and NM.Ismail, *Islam and India Religion and Tamil Culture* (University of Madras, 1977)
4. V.Narayan, *Religious Vocabulary and Regional Identity – A Study of the Cirappuranam in Beyond Turk and Hindu*, ed. D.Gilmartin and B.Lawrence (University of Florido Press, 2001)
5. மு. நடராசா, தமிழ் செய்யுட் தொகுப்பு (க.பொ.த. உயர்தரம்), ஆதவன்பதிப்பகம், 2009


## இணையதளங்கள்


1. https://www.scribd.com/doc/6778767/Bukhari-Tamil-Full
2. https:/ibnalhyderabadee.wordpress.com/2006/04/11/seerah-and-hadith-what-is-the-difference/




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவில் சமூகம்

## ஓர் இஸ்லாமிய வரலாற்றுக் கண்ணோட்டம்

*கலாநிதி லுயி அஸ்ஸாபி


### கட்டுரைச் சுருக்கம்

ஒரு சமூகத்தினுடைய அரசியல் முதிர்ச்சி நிலையை எவ்வாறு அளவிட முடியும்? மற்றும் அதற்கான கருவிகள் என்ன? என்ற தலைப்பில் கட்டார் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத் துறைப் பேராசிரியர் லுயி அஸ்ஸாபி எழுதிய நூலினுடைய ஒரு பகுதியை இக்கட்டுரை தொகுத்தளிக்கிறது. இஸ்லாமிய நாகரிகம் கோலோச்சிய காலப் பிரிவில் முஸ்லிம் உம்மாவை, அதன் சுய இயக்கத்தை மற்றும் இயங்கு சக்தியை தீர்மானிப்பதில் எந்தளவுக்கு 'சிவில் சமூகம்' என்ற சிந்தனை பங்களிப்புச் செய்திருக்கிறது என்பதைக் இக்கட்டுரை மதிப்பீடு செய்வதற்கு முயல்கிறது. அதனோடிணைந்த வகையில், நவீன இஸ்லாமிய சிந்தனைத் தளத்தில் 'சிவில் சமூகம்' என்ற சிந்தனை போதியளவு முக்கியத்துவம் பெறாமைக்கான காரணங்கள் என்ன? என்பதனை பகுப்பாய்வு செய்கிறார் கட்டுரையாசிரியர். சுருக்கமாக, இஸ்லாமிய வரலாற்றையும் , அதன் நாகரிக எழுச்சியையும் புரிந்து கொள்வதற்கு நவீன கால சிவில் சமூகம் என்ற சிந்தனையை லுயி அஸ்ஸாபி பிரயோகிக்கிறார் எனக் கூற முடியும். அதற்கூடாக, இஸ்லாமிய வரலாற்றோட்டத்தில் 'சிவில் சமூகம்' என்ற சிந்தனை எவ்வாறு மெதுவாக வளர்ச்சியடைந்து , முதிர்ச்சியடைந்து வந்துள்ளது என்பதனை விரிவாக ஆராய்கிறார்.

கட்டுரை இரண்டு பிரதான பகுதியாக பிரிக்கப்பட்டிருக்கிறது. சிவில் சமூகம் என்ற பதப் பிரயோகத்தின் உள்ளடக்கம், வரலாறு மற்றும் நவீன காலப் பரப்பெல்லைகள் தொடர்பாக முதலாவது பகுதி பேசுகிறது. இரண்டாவது பகுதியில், மேற்குறிப்பிட்ட புரிதல் இஸ்லாமிய வரலாற்றில் எவ்வாறு தொழிற்பட்டுள்ளது என்பதனை அலசுகிறது. அந்த வகையில், ஒவ்வொரு வரலாற்றுக் கட்டத்திலும் முஸ்லிம் உம்மாவின் நாகரிக எழுச்சியை தாங்கி நிற்கும் பலமான அடித்தளமாக அரசியல் கட்டமைப்புகளுக்கு அப்பால் பொதுச் சமூகம் அல்லது சிவில் சமூகம் தொழிற்பட்டிருக்கிறது என்ற கருத்தை அவர் வலியுறுத்துகிறார். நபி (ஸல்) அவர்களுடைய காலத்திலே சிறந்ததொரு சிவில் சமூகத்திற்கான அடிப்படையான விழுமியங்கள் கட்டியெழுப்பப்பட்டதுடன், உமையாக்களது காலப்பகுதியில் அதிகார சக்திகளுக்கு எதிரான சிவில் சமூகத்தின் எதிர்ப்பரசியல் துளிர்விட ஆரம்பித்தது. தொடர்ந்து அப்பாஸிய காலப் பிரிவிலே சிவில் சமூகத்தின் ஏனைய கூறுகளான தொழிற்சங்கங்கள் , அறிஞர்களது செல்வாக்கு மற்றும் சமூகநல செயற்திட்டங்களை மேம்படுத்தல் போன்றன வளர்ச்சி கண்டது. ஆனால், உஸ்மானிய சாம்ராஜ்ஜியத்தின் கடைசி காலப் பிரிவிலும், புதிய தேசிய அரசுகளது உருவாக்க காலத்திலும் சிவில் சமூகம் அரசியல் சக்திகளால் காவு கொள்ளப்பட்டது. தனது அரசியல் நலன்களுக்கு ஏற்ப அதற்கு வடிவம் கொடுக்கப்பட்டது. மொத்தமாக நோக்கும் போது, இக்கட்டுரை விவாதிக்கும் மையக்கருத்தின் முக்கியத்துவத்தை பல்வேறு பரிமாணங்களில் புரிந்து கொள்ள முடியும். குறிப்பாக, சமூக எழுச்சியை


* தொகுப்பு : அஷ்ஷெய்க் ஸகி பவ்ஸ் (நளீமி)
zackymfm@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி முஸ்லிம் சமூகத்தை நகர்த்திச் செல்லும் நிகழ்ச்சித் திட்டத்தில் சமூகத்தை ஒழுங்குபடுத் துவதும், பலப்படுத்துவதுமே அடிப்படையா னது என்ற நவீன இஸ்லாமிய சிந்தனையில் விவாதிக்கப்படுமொரு கருத்தை கட்டுரை ஆதரிக்கிறது. அதனை இஸ்லாமிய நாகரிகத்தி னுடைய வரலாற்றுக் கண்ணோட்டத்தில் கட்டுரையாசிரியர் நிறுவுகிறார். அதாவது, இஸ்லாமிய நாகரிக எழுச்சிக்கும், சமூகத்தி னுடைய ஒழுங்குபடுத்தப்பட்ட இயக்கத் திற்கும் இடையில் நேர்மறைத் தொடர்பிருக் கிறது என்பதனை லுயி அஸ்ஸாபி கோடிட்டுக் காட்ட முயல்கிறார். அதாவது, இஸ்லாமிய நாகரிகம் எழுச்சி பெற்றமைக்கு முஸ்லிம் சமூகம் வரலாற்றில் அனுபவித்த செல்வாக்கு மிக்க அரசியல் அதிகாரம் மட்டுமே காரண மாகும் என்ற கருத்தை இஸ்லாமிய வரலாற் றனுபவங்களின் ஒளியில் மறுதலிக்கிறார். சுருக்கமாக, இஸ்லாமிய நாகரிக எழுச்சி தொடர்பான புதியதொரு நோக்கொன்றை (Hypotheses) கட்டுரை முன்வைக்கிறது.

## 'சிவில் சமூகம்' என்ற சிந்தனையும் அதன் நவீன கால வரலாற்றுப் பின்னணியும்

சமீபத்திய வரலாற்றில் முதலாவதாக "சிவில் சமூகம்" என்ற பதப்பிரயோகத்தை ஒரு சிந்தனையாக முன்வைத்தவர் ஜெர்மனிய அரசியல் கோட்பாட்டாளர் ஹேகல் ஆகும். அதாவது, சிவில் சமூகம் என்ற பதத்தினுடைய அரசியல் புரிதல் என்ன?, சிவில் சமூகத்தின் மீதுள்ள பொறுப்புகள் யாவை?அதனுடைய வரையறைகள் என்ன? அது எவ்வாறு கட்டி யெழுப்பப்படுகிறது? போன்ற சிவில் சமூகம் என்ற பதப்பிரயோகத்தை புரிந்துகொள்வதற் கான கூறுகளை அவர் விரிவாக விவாதித்தார். அந்த வகையில், சிவில் சமூகம் என்ற புதியதொரு சிந்தனையின் தேவையை இரண்டு அடிப் படைகளில் நின்று ஹேகல் சிந்தித்தார். அதில் முதலாவது, சமகால அரசியல் ஒழுங்கின் படி ஒரு தேசத்தினுடைய அரசியல் கட்டமைப் பானது அதன் சட்டத்தினாலும், அரசியல் தீர்மானங்களினாலும் குடிமக்களைக் கட்டுப் படுத்துகிறது. அதாவது, அரசினாலும், அரசாங்கப் பொறிமுறையாலும் மறைமுகமாக குடிமக்கள் வழிநடாத்தப்படுகிறார்கள். இதுவே சமகால அரசியல் ஒழுங்கில் அரசுக்கும், அரசாங்கத்திற்கும் குடிமக்களுக்கும் மத்தியில் நிலவும் பொதுவான உறவாகும். எனவே, குடிமகனுக்கும், அவன் சார்ந்துள்ள சமூகத் திற்கும் சுதந்திரமாக இயங்குவதற்கு மற்றும் தமது அபிலாஷைகளை பூரணப்படுத்திக் கொள்வதற்கு அரசின் மற்றும் அரசாங்கத்தின் கெடுபிடிகளுக்கு அப்பால் தனியானதொரு சுதந்திரமான வெளியொன்றின் தேவையை ஹேகல் உணர்ந்தார். அதாவது, சமூகம் தனது சமூகம் சார்ந்த தேவைகளை மற்றும் இலக்கு களை அடைந்து கொள்வதற்காக தன்னைத் தானே ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கான வாய்ப்பை அத்தகையதொரு வெளி ஏற்படுத்திக் கொடுக்கிறது. இவ்வாறு அரசியல் அதிகாரக் கட்டமைப்புகளை தாண்டிச் சென்று, ஒரு சமூகம் தனது அபிலாஷைகளுக்காக தன்னை ஒழுங்குபடுத்திக் கொள்வதனையே சிவில் வெளி அல்லது சிவில் சமூகம் என ஹேகல் வரையறை செய்கிறார். இது சிவில் சமூகம் என்ற சிந்தனை தோற்றம் பெற்றமைக்கான முதலாவது பின்புலமாகும்.

இரண்டாவது, மத்தியகால மேற்குலக வரலாற்றனுபவங்களின் படி, கிறிஸ்தவ மதத் தலைமைபீடங்களே அரசையும், மக்களையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தன. அதனை இன்னொரு வசனத்தில் சொன்னால், அரசை அல்லது அரச தலைவர்களை தமது தேவைகளுக்கு ஏற்ப வழிநடாத்துவதினூடாக மக்கள் எந்தத் திசையில் பயணிக்க வேண்டும் என்பதனையும் மறைமுமாக கிறிஸ்தவ மதத் தலைமைபீடங்களே தீர்மானித்தன. இந்தப் பின்னணியில், அரசிடமிருந்தும் மற்றும் அரச இயந்திரத்தினுடைய அச்சாணியான கிறிஸ்தவ கட்டமைப்பிடமிருந்தும் சமூகத்தை விடுவிக்க வேண்டும் என்ற விவாதம் எழுச்சி பெற்றது. தொடர்ந்து, அரசின் அடக்கு முறைக்கு எதிராக சமூகம் தன்னை ஒரு சக்தியாக வடிவமைத்துக் கொண்டு ஒன்று திரள வேண்டும் என்ற கருத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிமையாகியது. அரசு தனது தேவைக்கு ஏற்ப சமூகத்தை வழிநடாத்த முடியாது. சமூகமே அரசை வழிநடாத்த வேண்டும் என்ற சிந்தனையும் கருக்கொண்டது. இவ்வாறு, அரச இயந்திரத்தை கட்டுப்படுத்தும் சமூகத்தினுடைய நடவடிக்கைகளை 'சிவில் சமூக செயற்பாடுகள்' என ஹேகல் வரையறை செய்கிறார். 17,18 ஆம் நூற்றாண்டுகளில் தமது அதிகாரத்தால் சமூகத்தை கட்டிப் போட்டிருந்த சக்திகளை எதிர்த்து நிற்கும் அரசியல் கோட்பாடாக 'சிவில் சமூகம்" என்ற சிந்தனை தோற்றம் பெற்றதனையும் புரிந்துகொள்ள முடிகிறது. அதாவது ஒரு சமூகம் தனது சுய இயக்கத்தை உறுதி செய்துகொள்வதற்கும் , அரச தலையீடுகளை கட்டுப்படுத்துவதற்குமான தளமாக 'சிவில் சமூகம்' என்ற சிந்தனையை பிரசவித்தது என்பதே மேற்சொன்ன வரலாற்றுப் பின்புலம் எமக்குணர்த்துகின்றது. மேற்சொன்ன வரலாற்றுப் பின்புலத்தில் அது எழுந்த போதிலும் கூட, கடந்த மூன்று நூற்றாண்டுகளாக சிவில் சமூகம் என்ற சிந்தனை , அதன் உள்ளடக்கம், வரையறைகள் மற்றும் இலக்குகள் போன்றவற்றில் விரிவடைந்து சென்றிருக்கிறது.

## சிவில் சமூகம் : செயற்பாட்டுப் பரப்பெல்லைகள்

ஒரு நாட்டின் அரசு , சந்தை மற்றும் குடும்ப நிறுவனம் போன்ற மூன்று தளங்களுக்கு அப்பால் சமூகம் தன்னை சுதந்திரமாக ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு முயல்வதனை 'சிவில் சமூக வெளி' (Civil Space)என இன்று வரைவிலக்கணப்படுத்துகிறார்கள். மேலும், அவ்வாறு சமூகத்தை ஒழுங்குபடுத்தி , அதனை வலுவூட்டும் நிறுவனங்கள் , ஒன்றியங்கள் , இயக்கங்கள் மற்றும் அமைப்புகளை 'சிவில் சமூக இயக்கங்கள்' என்றும், அவற்றின் செயற்பாடுகளை 'சிவில் சமூக செயற்பாடுகள்' என்றும் அழைப்பதுண்டு. அதேபோன்று , சமூகம் தன்னை நெறிப்படுத்திக் கொள்வதற்காகவும் , பொது நலன்களை அடைந்துகொள்வதற்காகவும், தனது சுதந்திரமான இயக்கத்தை உத்தரவாதப்படுத்திக் கொள்வதற்காகவும் சிவில் சமூக வெளியில் ஒன்றிணைகிறது. இணைந்து உழைக்கிறது. பொது விவகாரங்களை விவாதித்தல் , கருத்துருவாக்கம் செய்தல் மற்றும் கூட்டுப் பணிகளில் ஈடுபடுதல் ஆகிய இலக்குகளை அடைந்துகொள்ளல் போன்ற அகன்ற தளத்தில் சிவில் சமூக வெளியை ஒரு சமூகம் பயன்படுத்திக்கொள்கிறது. மேலும், முழு சமூகத்தையும் பாதிக்கக் கூடிய விவகாரங்கள் தொடர்பாக வித்தியாசமான கண்ணோட்டங்களை சிவில் சமூகம் விவாதிக்கிறது. தீர்வுக்கான முயற்சிகளை முன்மொழிகிறது. அதனை சாத்தியப்படுத்திக் கொள்வதற்காக உழைக்கிறது. இதுவே சிவில் சமூகம் என்ற சிந்தனையும் , அதன் செயற்பாட் டுப் பரப்பெல்லையாகும்.

## இஸ்லாமிய வரலாறும் சிவில் சமூகம் என்ற சிந்தனையின் படிமுறை வளர்ச்சியும்:

### (i) நபி (ஸல்) அவர்களுடைய காலப்பகுதி

நபி (ஸல்) அவர்களின் வருகைக்கு முன்பு 'சிவில் சமூக செயற்பாடு' என்றதொரு தோற்றப்பாட்டை காணமுடியாது. மாறாக, ஏனைய கோத்திரங்களது அத்துமீறல் மற்றும் அடக்குமுறைக்கு எதிராக ஒரு மனிதனைப் பாதுகாக்கும் கேடயமாக அவன் சார்ந்து நிற்கும் "கோத்திரக் கட்டமைப்பு" கருதப்பட்டது. மேலும், எந்த நிலையிலும் தனது கோத்திரத்தவனுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற தத்துவமே கோத்திரக் கட்டமைப்பின் அடிப்படையாகவும் இருந்தது. அதாவது, நீதியோ அல்லது அநீதியோ கோத்திரத்தின் நலன் , பெருமை என்ற பெறுமானங்களைச் சுற்றியே சமூகம் ஒழங்குபடுத்தப்பட்டிருந்தது. ஆனால், நபி (ஸல்) அவர்களது வருகைக்குப் பின்னர் புதியதொரு சமூக ஒப்பந்தமொன்றை அவர்கள் முன்வைத்தார்கள். குறிப்பாக, மதீனாச் சூழலில் புதிய சமூக ஒப்பந்தம் பிரயோகிக்கப்பட்டது. விளைவாக, பழைய கோத்திரக் கட்டமைப்பை மையப்படுத்திய சமூக ஒழுங்குகின் அடிப்படைகள்மாற்றியமைக்கப்பட்டன. உதாரணமாக,"எந்த நிலையிலும் கோத்திரத்திற்கு உதவி செய்தல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பெறுமானமானது, புதிய சமூக ஒப்பந்தத்தின் கீழ் பொறுப்புணர்வுடன் கூடிய விழுமியங்களுடன் இணைக்கப்பட்டது. மட்டுமன்றி, சமூக ஒழுங்கானது 'நீதியின்' அடிப்படையில் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்ற சிந்தனையை நபி(ஸல்) அவர்கள் சமூகமயப் படுத்தினார்கள். அந்த அடிப்படையில் தனது கோத்திரம் இன்னொரு கோத்திரத்திற்கு அநீதி இழைக்கும் பட்சத்தில், அதற்கு குற்றப் பரிகாரம் வழங்க வேண்டும் என்ற புதிய பார்வையொன்றையும் கோத்திரக் கட்டமைப்புக்கு அவர்கள் வழங்கினார்கள். இவ்வாறாக, சமூக ஒப்பந்தத்தின் புதிய பரிமாணங்கள் இணைந்து "கோத்திரத்தை பலப்படுத்தல்" என்பதிலிருந்து 'சமூக ஒப்பந்தங்களை" அடிப்படையாக வைத்து வாழ்தல் என்ற சிந்தனையை நோக்கி மதீனா சமூகம் சற்று நகர்ந்து சென்றது. அதாவது, எல்லோரும் உடன்பட்ட பொது விழுமியங் ளை முன்னுரிமைப்படுத்துவதற்கான பயிற்சியை நபி (ஸல்) அவர்கள் வழங்கினார்கள் என்று அதனைப் புரிந்துகொள்ள முடியும். மேற் சொன்ன படிமுறை மாற்றத்தை இன்னொரு வசனத்தில் சுருக்கமாகச் சொன்னால், சமூகத்தின் பிரதான இயங்குதளமாக கருதப்பட்ட "கோத்திரம்" என்ற கட்டமைப்பை "உம்மா" என்ற புதிய தளத்தை நோக்கியும், கோத்திரக் கட்டமைப்பை வழிநடாத்திய "கோத்திர வெறி" என்ற பண்பினை "ஒத்துழைப்பு" என்ற புதிய பண்பாட்டை நோக்கியும், "கோத்திரப் பெருமை" என்ற உணர்வை, "மனித கண்ணியம்" என்ற புதிய விழுமியத்தை நோக்கியும் அழைத்து வருவதற்கு நபி (ஸல்) அவர்கள் முன்வைத்த புதிய சமூக ஒப்பந்தம் முயற்சி செய்தது. அதன் விளைவாக, உரையாடல் , மாற்றுக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளல், உடன்பாட்டுப் புள்ளிகளை பலமாகக் (Strength) கருதுதல் போன்ற கிளை அடைவுகளையும் இலக்கு வைத்து புதிய சமூக ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது. நபி (ஸல்) அவர்களுடைய மரணத்தின் பின்னர் இடம் பெற்ற "ஸகீபா பனூ ஸாஈதா" அரசியல் உரையாடல்களை நுணுக்கமாக அவதானிக்கும் போது, இறுக்கமான கோத்திர கட்டமைப்புக்குள்ளும் சிறந்ததொரு உரையாடல் கலாசாரம் உள்வாங்கப்பட்டிருப்பதனை கண்டு கொள்ள முடியும். அது நபி (ஸல்) அவர்கள் அறிமுகம் செய்த புதிய சமூக ஒப்பந்தத்தின் விளைவாகத் தான் இருக்க முடியும். இந்தப் பின்புலத்தில் உரையாடல் , உடன்படல் , மாற்றுக் கருத்துக் களை முன்வைத்தல் மற்றும் விவாதித்தல் போன்ற ஆரோக்கியமான சிவில் சமூக கட்டமைப்பொன்றை நோக்கிச் செல்வதற்கு அவசியமான அடிப்படைப் பெறுமானங்கள் சமூகமயப்படுத்தப்பட்ட காலப்பகுதியாக நபி (ஸல்) அவர்களுடைய காலப்பகுதியை புரிந்து கொள்ள முடியும். ஏனெனில், மேற்குறிப்பிட்ட பெறுமானங்கள் இன்றி, யாராலும் ஒரு சமூகத்தில் ஒரு சக்தியாக மாறி தமது இலக்குகளை அடைந்துகொள்ளவோ அல்லது அதிகாரத்திற்கு எதிராக குரல் கொடுக்கவோ முடியாது.

### (ii) உமையாக்களின் ஆட்சி காலமும் சிவில் சமூக செயற்பாடுகளும் :

#### சூழமைப் பின்புலத்தை புரிந்து கொள்ளல்

பொதுவாக, நபி (ஸல்) அவர்கள் முதல் குலாபஉர் ராஷிதீன்களது காலம் வரை தொடர்ந்த நல்லாட்சிச் சிந்தனைகள் உமையாக்களின் வருகையுடன் கவிழ்ந்ததாக கூறப்படுகிறது. அதாவது, இஸ்லாமிய உயர் அரசியல் விழுமியங்ககளை ஒரு புறம் வைத்துவிட்டு, சர்வதிகார மன்னராட்சியை உமையாக்களே துவங்கி வைத்தார்கள் என ஏராளமான வரலாற்றாசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள். இத்தகைய வரலாற்றுப் பகுப்பாய்வில் பேருண்மை இருக்கிறது. என்றாலும் கூட, உமையாக்களின் எழுச்சியை "சர்வதிகாரம்" என்ற பரிமாணத்தில் மட்டுமே வைத்து நோக்க முடியாது. மாறாக, ஆரம்பகால கோத்திரக் கட்டமைப்பு மற்றும் அதிகார மோதல்களினது மீளெழுச்சியாகவும் அதனை நோக்க வேண்டும். அதனை ஏற்கனவே சகீபா பனூ ஸாஈதா உரையாடல்களின் போது உமர் (றழி) அவர்கள் தெளிவாகச் சுட்டினார். அதாவது, இஸ்லாமிய சமூகத்திற்குள் மீண்டும் அரசியல் முரண்பாடுகள் கோத்திரங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் தோற்றம் பெறலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்கான இடம்பாடுகள் இருக்கிறது என்ற கருத்தை மறைமுகமாக ஸகீபாவிலே உமர் (றழி) அவர்கள் உணர்த்தினார்கள். இந்த முரண்பாடுகளை முகாமை செய்யும் நோக்கிலேயே கிலாபா ராஷிதா காலப்பகுதியில் ஆட்சி விவகாரங்களில் குறைஷிக் கோத்திரம் முழுமையாக செல்வாக்குச் செலுத்தியதை கண்டுகொள்ள முடியும். மட்டுமன்றி, குறைஷிகளுக்கு மத்தியிலும் ஒரு வலுச்சமநிலையை பேணிக் கொள்ளும் வகையிலேயே ஆட்சி முறைமை குலபாக்களுக்கு மத்தியில் ஒழுங்குபடுத்தப் பட்டிருந்தது.

இத்தகைய வரலாற்றுக் கண்ணோட்டத்தில் உமையாக்களின் எழுச்சியும், முஆவியா (ரழி) வின் ஆட்சியும் வெறுமனே சர்வதிகார அரசியல் அபிலாசைகளின் மீது மட்டுமே நின்று தோற்றம் பெறவில்லை. மாறாக, அது கோத்திரங்களுக்கு இடையிலான அதிகார மோதலினதும், பழைய அரசியல் கணக்குகளை தீர்த்துக் கொள்வதற்குமான முயற்சியுமாகும். நபி (ஸல்) அவர்களது வருகைக்கு முன்னரும், அவர்களுடைய மக்கா காலப் பகுதியிலும் அதிகாரம் பனூ உமையாக்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. ஆனால், நபி (ஸல்) அவர்களுடைய மதீனா ஆட்சி காலப் பகுதியிலும், அதன் பின்னரும் அதிகாரம் பனூ உமையாக்களிடமிருந்து கைமாறியபோது பனூ ஹாஷிம் மற்றும் பனூ உமையா கோத்திரங்களுக்கு மத்தியில்" அரசியல் பதற்ற நிலை" (Tension) எழுந்தது. அது தொடர்ந்தது. நபி (ஸல்) அவர்கள் இத்தகைய களயதார்த்தத்தை ஆழமாகப் புரிந்திருந்தார்கள். எனவேதான், மக்கா வெற்றியின் போது "யார் அபூஸூப்யானின் (ரழி) அவர்களுடைய வீட்டில் நுழைகிறாரோ, அவர் பாதுகாக்கப் பட்டவராக மாறிவிட்டார்" என அறிவிப்புச் செய்தார்கள். பனூ உமையாக்களின் தலைமை அபூஸூப்யான் (ரழி) அவர்களிடமே அன்று காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில், தமது பழைய தலைமைத்துவ அதிகாரங்களையும், அரசியல் வகிபாகத்தையும் பெற்றுக் கொள்வதற்கான முயற்சியாகவே உமையாக்களது எழுச்சியை நோக்க வேண்டும். ஆனால், பாரம்பரியமாக கோத்திர வெறியை வெளிப்படுத்தும் அடையாளங்களுடன் அதிகாரத்தையோ அல்லது ஆட்சியையோ உமையாக்கள் அணுகவில்லை. மாறாக, தமது அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்வதற்கு இஸ்லாமியப் பின்புலத்தில் ஆதாரங்களைத் தேடவும், அவ்வாறான கருத்துக்களை ஆதரிக்கவும் செய்தார்கள். மிகக் குறிப்பாக,"ஜபரிய்யா சிந்தனையை" உமையாக்கள் தமது அரசியல் அதிகாரத்தை ஸ்தீரப்படுத்திக் கொள்வதற்கான கருவியாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். எது நடந்தாலும் அதனை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில், அது அவ்வாறு நடைபெற வேண்டுமென்பதே அல்லாஹ்வின் ஏற்பாடாகும் என ஜபரிய்யா சிந்தனையை வரையறை செய்ய முடியும்.

## உமையாக்களுக்கு எதிரான சிவில் சமூகத்தின் எதிர்ப்பரசியல்

மேற்சொன்ன சூழமைப் பின்புலத்திலேயே உமையாக்களது ஆட்சிக்கு எதிராக சிவில் சமூக இயக்கம் ஆரம்பிக்கிறது. ஆட்சியாளர்களுக்கு எதிரான எதிர்ப்பரசியலாக அது எழுச்சியடைகிறது. "எதிர்ப்பரசியல்" என்பது சிவில் சமூக செயற்பாடுகளில் பிரதான கூறாகும். ஆட்சியாளர்களது சர்வதிகாரத்தை கட்டுப்படுத்தும் கருவியாகவும், விழுமியமாகவும் அதனைப் புரிந்து கொள்ளலாம். நவீன கால சிவில் சமூகம் என்ற சிந்தனையை தோற்றுவித்த அடிப்படை பெறுமானமாகவும் அதனை கோடிட்டுக் காட்டலாம். அந்தவகையில், இஸ்லாமிய வரலாற்றில் முதல் முறையாக உமையாக்களது காலத்திலேயே எதிர்ப்பரசியல் செயற்பாடுகள் துளிர்விடுகின்றன. சமூகம் தன்னை பல்வேறு தளங்களில் ஒழுங்குபடுத்தி ஆட்சியாளரை விசாரணை செய்வதற்கு முயற்சி செய்கிறது. மிக்க குறிப்பாக, உமையாக்களினுடைய காலப் பகுதியில் தோற்றம் பெற்ற ஷீயாக்கள், முஃதஸிலாக்கள், மவாலீக்கள் மற்றும் ஹவாரிஜ்களுடைய நடவடிக்கைகளை "எதிர்ப்பரசியலினுடைய" சில பரிமாணங்களாக வரையறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய முடியும். உமையாக்களது ஆட்சியின் அடிப்படைத் தத்துவமான கோத்திரம் சார்ந்த அரசியல் அபிலாஷைகளை முதலாவதாக ஹவாரிஜ்கள் கேள்விக்குட்படுத்தினார்கள். மட்டுமன்றி, அரபுத் தீபகற்பத்தின் அதிகாரம் "குறைஷிகளிடம்" மட்டுமே இருக்க வேண்டும் என்ற கருத்தை எதிர்த்தார்கள். இஸ்லாமிய ஆட்சியின் மூலவேரான "ஷூறா" சிந்தனையை மீளவும் உயிர்ப்பிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள். இத்தனையையும் அடைந்து கொள்வதற்கு அகீதா என்ற பரப்பிற்குள் நின்று தான் அரசியலையும் நோக்க வேண்டும் என ஹவாரிஜ்கள்விவாதித்தார்கள். இறுதியில், அகீதா வையும், அரசியல் பரப்பையும் மிகத் துல்லிய மாக பிரித்தறிந்துகொள்ள முடியாத நிலையில், தமது நிலைப்பாட்டுக்கு மாற்றமான நிலைப்பாடு களை ஏற்றுக் கொண்டவர்களை பழிவாங்கும் திசையில் ஹவாரிஜ்களது போராட்டம் நகர்ந்து சென்றது. ஆக மொத்தத்தில், உமையாக்களது ஆட்சி மற்றும் அதன் சர்வதிகார சமன்பாடு களுக்கு எதிரான சிவில் சமூகத்தினுடைய எதிர்ப்பரசியலின் ஒரு வடிவமாக ஹவாரிஜ் களது நடத்தையை சித்தரிக்க முடியும்.

அதேபோன்று, உமையாக்களது ஆட்சி புரிதல் ஏற்படுத்திய எதிர்மறை விளைவுகளை, சமூகவியல் தாக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல் ஷீயா இஸம் தோற்றம் பெற்றது. அதனையும் எதிர்ப்பரசியலின் மற்றொரு வடிவமாக புரிந்துகொள்ள முடியும். "பொருத்தமற்றவர்களது கரங்களில் ஆட்சி கிடைத்ததன் விளைவுகளையே நாம் உமையாக் களது மோசமான ஆட்சியில் அனுபவிக்கி றோம்"என்ற சுலோகத்துடன் அவர்கள் தொழிற் படத் துவங்கினார்கள். மீண்டுமொரு நல்லாட்சி வரவேண்டும் என்றால், உமையாக்களை விட ஆட்சி அதிகாரத்திற்குப் மிகப் பொருத்தமான நபி (ஸல்) அவர்களுடைய குடும்பத்தாரிடம் அதிகாரம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற செய்தியையே அரசியல் ஷீயாஇஸம் முன்வைத்து இயங்கியது. காலப் போக்கில் உமையாக்களது ஆட்சிக்கு எதிரான பலமான மக்கள் சக்தியாக அது பரிணாமம் பெற்றது. குறிப்பாக, உமையாக் களது ஆட்சி புரிதலினால் ஒதுக்கப்பட்ட வர்கள், பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் அரசியல் ஷீயாஇஸத்தை தமக்கான தெரிவாகக் கருதி ஆதரித்தார்கள். மறுபுறம், தமது ஆட்சியை ஆதரிக்காத அல்லது அதனை விமர்சனம் செய்துகொண்டிருந்த பொதுவானவர்களையும் "ஷீயா ஆதரவாளர்கள்" என உமையாக்கள் குற்றம் சாட்டியமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையிலேயே இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் "ஷீயா" என குற்றஞ் சாட்டப்பட்ட நிலையில் அவர் கைது செய்யப்பட்டமை நோக்கத்தக்கது. மிக ஸீரியஸாக உமையாக்கள் எதிர்வினையாற்றுமளவுக்கு அரசியல் ஷீயா இஸத்தின் எதிர்ப்பரசியல் நடவடிக்கைகள் பலமானதாக இருந்தன.

உமையாக்களது ஆட்சிக்கு எதிரான முஃதஸிலாக்களது சிந்தனை இயக்கத்தை கூற முடியும். குறிப்பாக, தமது ஆட்சியை ஸ்தீரப் படுத்திக் கொள்வதற்காக உமையாக்கள் கருவி யாகப் பயன்படுத்திய "ஜபரிய்யா கொள்கைக்கு" எதிரான சிந்தனை இயக்கமாக முஃதஸிலாக்கள் தோற்றம் பெற்றார்கள். அதாவது, உமையாக்க ளது அதிகார அரசியலினுடைய கோட்பாட் டுத் தளத்தை நேரெதிர்த் திசையில் முஃதஸி லாக்கள் விசாரணை செய்தார்கள். அந்த வகையில், உமையாக்களுக்கு எதிரான அப்பா ஸியர்களுடைய புரட்சிக்கு சிந்தனைத் தளத்தை இட்டவர்களும் முஃதஸிலாக்களே. எனவே தான், அப்பாஸிய ஆட்சியில் நியாயமான செல்வாக்கைப் பெற்றவர்களாக முஃதஸிலாக் கள் மாறினார்கள். ஆனால், மீண்டும் தமது நிலைப்பாடுகளுக்கு மாற்றமான கருத்தைக் கொண்டிருந்த "அஹ்லுல் ஹதீஸ்" இயக்கத்தை யும், இமாம் அஹ்மத் இப்னு ஹன்பலின் அப்பாஸிய சர்வதிகாரத்திற்கு எதிரான எதிர்ப் பரசியலையும் கட்டுப்படுத்துவதற்கும், நசுக்கு வதற்கும் முஃதஸிலாக்கள் துணைபோனார்கள். அதாவது, உமையாக்கள் விடயத்தில் எதிர்ப் பரசியல் கோட்பாட்டாளர்களாக செயற்பட்ட முஃதஸிலாக்கள், அஹ்லுல் ஹதீத் விடயத்தில் அரசுக்கு சார்பாகவே (Statues Quo) செயற்பட் டார்கள். இறுதியில் முஃதஸிலா இயக்கத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுடைய தோல்விக்கு அது காரணமாக அமைந்தது. இவ்வாறு, ஹவாரிஜ் இயக்கத்தின் எழுச்சி, அரசியல் ஷீயாஇஸத்தின் செல்வாக்கு, முஃதஸிலா அறிவியல் இயக்கத்தின் செயற்பாடுகள் மற்றும் அப்பாஸியர்களது போராட்டம் என சிவில் சமூக 'எதிர்ப்பரசியல்' தளம் உமையாக்களுடைய காலப்பகுதியிலேயே விரிவடைந்துகொண்டு சென்றது.

(iii) அப்பாஸிய ஆட்சி காலமும் சிவில் சமூக செயற்பாடுகளும்

இஸ்லாமிய வரலாற்றில் சிவில் சமூக செயற்பாடுகள் பல்வேறு தளங்களுக்குள் விரிவடைந்த காலப் பகுதியாக அப்பாஸிய ஆட்சியைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். உதாரணமாக, தொழிற் சங்கங்கள், வியாபாரிகளுடைய சங்கங்கள், உலமாக்கள் மற்றும் கல்விமான்களது நிலைப்பாடுகள் போன்றன சிவில் சமூகத்தை சுறுசுறுப்பானதாக மாற்றியமைத்தது. மட்டுமன்றி, சமூக விவகாரங்களை முகாமை செய்வதில் ஆட்சியாளர்களுடைய செல்வாக்கு கட்டுப்படுத்தப்பட்டது. உதாரணமாக, சந்தை மற்றும் அதன் தொழிற்பாட்டை தீர்மானிப்பதற்காக வியாபாரிகளுடைய சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அதற்காக "ஷெய்ஹுஸ் ஸூக்" (சந்தையின் தலைவர்) என்ற பெயரில் பதவி யொன்றும் ஏற்படுத்தப்பட்டது. ஷெய்ஹுஸ் ஸூக்கின் தலைமையின் கீழ் வியாபாரிகள் ஒரு கட்டமைப்பாக இயங்கினார்கள். மட்டுமன்றி, நீதிபதிக்கும், சந்தை வியாபாரிகளுக்கும் இடையிலான இடைத்தரகராக ஷெய்ஹுஸ் ஸூக் செயற்பட்டார். இன்னும், உலகின் பல பாகங்களிலிருந்தும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வியாபாரங்களுக்காக ஆட்சிப் பிராந்தியத்திற்குள் வரும் வியாபாரிகளும் கூட ஒரு குறிப்பிட்ட ஒழுங்கில் வழிநடாத்தப்பட்டார்கள்.

இவைபோக, அப்பாஸியக் காலப்பிரிவிலேயே சமூகத்தை கட்டியெழுப்பும் தனியான சிந்தனையாகவும், பாரிய செயற்திட்டமாகவும் 'வக்ப்" நிறுவனமயப்பட்டது. மேலும், சமூக எழுச்சி செயற்திட்டங்களையும், சமூக மேம்பாட்டுக்கு தேவையான அடித்தளத்தையும் வக்ப் சிந்தனை வலுவூட்டியது. அக்காலப் பிரிவில் ஷாம் தேசத்தின் தலைநகர் டமஸ்கஸை தரிசித்த உலகப் பயணி "இப்னு பதூதா" பின்வருமாறு தனது அனுபவத்தை பகிர்ந்து கொள்கிறார் :

"சமூகத்தின் முழு இயக்கத்தையும் வக்ப் சிந்தனையே தீர்மானித்தது. பல்வேறுபட்ட சமூக நலன்களை அடைந்து கொள்வதற்கான வழிமுறையாகவும் அதனை மக்கள் நோக்கினார்கள். உதாரணமாக, வசதி இல்லாத நிலையில் ஹஜ் செய்ய விரும்புபவர்கள் வக்ப் செயற்திட்டத்திலிருந்து பயன்பெற்றார்கள். வசதியற்ற குடும்பங்களுக்கு தேவையான ஏற்பாடுகளை செய்துகொள்வதற்காக வக்ப் பணத்திலிருந்து செலவளிக்கப்பட்டது. நீண்ட தூரப் பயணிகளும் அதிலிருந்து பயன் பெற்றார்கள். டமஸ்கஸின் பாதைகளும் வக்ப் பணத்தைப் பயன்படுத்தியே செப்பனிடப்பட்டன. இஸ்லாமிய உலகின் பல நகரங்களை தரிசிப்பவர்களும் அதன் அழகிலும், வசதி வாய்ப்புகளிலும் திகைத்து நின்றார்கள்"

அதேபோன்று, நகரங்களில் வாழ்பவர்களுக்கான கல்வி, வைத்தியசாலை வசதிகள் மற்றும் தொழில்வாய்ப்புக்கான ஏற்பாடுகளும் வக்ப் செயற்திட்டத்தினால் செய்து கொடுக்கப்பட்டன. ஒட்டுமொத்தமாக நோக்கும் போது, மனித சமூகத்தின் உயர்ந்த மனிதாபிமானப் பண்புகளை வெளிப்படுத்தும் சிவில் சமூகமாக முஸ்லிம் சமூகத்தை வக்ப் சிந்தனை மாற்றியமைத்தது எனலாம். இதற்கூடாக, கூட்டுறவு, பரஸ்பர கூட்டுப் பொறுப்பு மற்றும் சகோதரத்துவம் போன்ற பண்பாடுகளை வெளிப்படுத்தும் சிவில் சமூக ஒழுங்கொன்று அப்பாஸியக் காலத்தில் எழுச்சி பெற்றுள்ளதனை கண்டு கொள்ள முடியும்.

இக்காலப் பகுதியில் இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தினுடைய சட்டவாக்கத் துறையிலும் சிவில் சமூகமே செல்வாக்குச் செலுத்தியது. அதாவது, சட்டவாக்கம் மற்றும் புதிய விதிமுறைகளை ஒழுங்குபடுத்தித் தொகுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கும் பணியை அரசியல் அழுத்தங்களுக்கு உட்படாத உலமாக்களும், அறிஞர்களுமே சுதந்திரமாக மேற்கொண்டார்கள். அன்றைய சிவில் சமூக வலைப்பின்னலை பலப்படுத்தியதில் உலமாக்களும், இமாம்களும் முன்னணியில் நின்றார்கள். உதாரணமாக, அப்பாஸிய கலீபா ஹாரூன் ரஷீதினுடைய ஆட்சி காலத்தில் இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தின் வரி சேகரிப்புக்கான ஒழுங்கு விதிகளை வகுப்பதில் இமாம் அபூ யூசுபின் நிலைப்பாடுகளே செல்வாக்குச் செலுத்தின. அதேபோன்று, ஷூரா மற்றும் பங்குபற்றல் போன்ற இஸ்லாமிய அரசியல் விழுமியங்கள் முன்னுரிமை பெறாத காலப்பகுதியில், ஆட்சியாளர்களுக்கும், மக்களுக்கும் இடையிலான வலுச் சம நிலையை பேணும் பாரிய பணியை இஸ்லாமிய அறிஞர்களும், இமாம்களும் செய்திருக்கிறார்கள். எனவே தான், பலபோது சிவில் சமூகத்தை புறக்கணித்த நிலையில் ஆட்சியாளர்களது கைபொம்மைகளாகவும், அரச பீடத்தின் நலன்களுக்கு சார்பாகவும் (Statues Quo) இயங்குவதற்கு அவர்கள் மறுத்திருக்கிறார்கள். மறுபுறம், வக்ப் சொத்துகளிருந்தும், சமூகத்தின் பணத்திலிருந்துமே அத்தகைய அறிஞர்களும், இமாம்களும் மற்றும் அவர்களுடைய கல்வி நிறுவனங்களும், மாணவர்களும் பயன்பெற்றார்கள். அறிவுப் பணி செய்தார்கள். விளைவாக, அவர்களுடைய சிந்தனைச் சுதந்திரமும், சமூக நலன் குறித்த அகன்ற பார்வையும் பாதுகாக்கப்பட்டன. இன்னொரு வசனத்தில் சொல்வதானால், சிவில் சமூகம் தனது வக்ப் சொத்துகளுக்கூடாக அதிகாரத்திற்கு எதிரான தனது பலமான சக்தியாக அறிஞர்களை மற்றும் அவர்களது நிறுவனங்களைக் கட்டியெழுப்பிப் போஷித்தது. இவ்வாறு, 'சிவில் சமூகம்' என்ற சிந்தனை உமையாக்களுடைய ஆட்சி காலத்தை விட பரந்த அமைப்பிலும், ஒழுங்குபடுத்தப்பட்ட வகையிலும் அப்பாஸியக் காலப் பிரிவில் விரிவடைந்து மற்றும் பலமடைந்து கொண்டு சென்றுள்ளமை தெளிவாகிறது.

உஸ்மானியக்கிலாபத்தின் இறுதிப் பகுதி வரை மேலே கலந்துரையாடப்பட்ட சிவில் சமூக இயங்குதளம் மற்றும் அதன் வீரியம் நீண்டு செல்கிறது. என்றாலும் கூட, மேற்கத்தேய காலனியமும், நவீனத்துவத்தின் வருகையும் முஸ்லிம் சமூகத்தின் உள்ளக சிவில் சமூகக் கட்டமைப்பை அப்படியே உயிரற்ற ஜடமாக மாற்றியமைத்து விட்டது. அதாவது, உஸ்மானிய சாம்ராஜ்ஜியத்தின் கீழ் பணிபுரிந்த நீதிபதிகளும், இமாம்களும், சட்ட அறிஞர்களும் 'அரசாங்க உத்தியோகத்தர்களாக' இணைத்துக் கொள்ளப்பட்டார்கள். மட்டுமன்றி, சிவில் சமூகத்தின் செயற்திட்டங்களுக்கு அடிப்படையாக அமைந்த 'வக்ப் சொத்துகள்' அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட நிலையில் தனியான அமைச்சாக பிரடகனம் செய்யப்பட்டது. அதனை விட, கிலாபத்தின் வீழ்ச்சிக்குப் பிற்பட்ட அரபுலகில் சுதந்திரமான சிவில் சமூக நிறுவனங்களும் கூட அரசியல் கட்சிகளுடன் இணைத்துவிடப்பட்டன. இந்தப் பின்னணியிலேயே நவீனத்துவத்தின் பேரலையை எதிர்கொள்ள முடியாமல் முஸ்லிம் உலகின் சிவில் சமூகம் தடுமாறியது. இறுதியில் ஆட்சியாளர்களினால் அவர்களது நலன்களுக்கு எற்ப சிவில் சமூகம் அரபுலகில் ஒழுங்குபடுத்தப்பட்டது. விளைவாக, கிலாபத்திற்குப் பிற்பட்ட அரசியல் சர்வதிகாரத்தை எதிர்த்து நிற்பதற்கு தேவையான கூறுகளை சிவில் சமூகம் இழந்து நிற்க வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு தள்ளப்பட்டது.

## இறுதிச் சுருக்கம்

ஒரு சமூகம் தன்னை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கான சிந்தனைச் சட்டகமே 'சிவில் சமூகம்' என்ற கோட்பாடாகும். அதே போன்று, தனது சுயநல விருப்பு, வெறுப்புகளின் அடிப்படையில் ஆட்சியாளர்கள் சமூகத்தை நகர்த்திச் செல்லாமல் இருப்பதையும் அது உறுதி செய்கிறது. இன்னும், இஸ்லாமிய நாகரிகத்தின் எழுச்சியிலும், அதனை விசாலப்படுத்தியதிலும் 'சிவில் சமூகம்' என்ற சிந்தனைக்கு பாரிய பங்கிருக்கிறது. அதாவது, இஸ்லாமிய நாகரிகம் என்பது ஒரு விதத்தில் முஸ்லிம் சமூகத்தினுடைய சமூக ரீதியான செயற்பாடுகளது ஒட்டுமொத்த அடைவாகும். ஆரோக்கியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவில் சமூகமொன்று கொண்டிருக்க வேண்டிய பிரதான பண்புகளான எதிர்ப்பு அரசியல், புத்திஜீவித்துவ சுதந்திரம் மற்றும் ஒழுங்கு படுத்தப்பட்ட பொருளாதாரப் பலம் என்ற மூன்று பரிமாணங்களுமே இஸ்லாமிய நாகரிகத்தை போஷித்துப் பலப்படுத்தின. ஆனால், நவீன தேசிய அரசுகளுடைய எழுச்சி யுடன் அவை பலவீனப்பட்டுப் போயின. எனவே, மீண்டும் அதனை கட்டியெழுப்புவ தற்கான வித்தியாசமான வியூகங்கள் வகுக்கப் பட வேண்டும். மிகக் குறிப்பாக, சிவில் சமூகம் என்ற சிந்தனையை சமூகமயப்படுத்தல், கல்விக் கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்தல் மற்றும் சிவில் விழுமியங்களின் மீது புதிய தலைமுறையை பயிற்றுவித்தல் போன்றன அதற்காக நாம் முன்னெடுக்கும் வியூகங்களில் கருத்திக் கொள்ளப்பட வேண்டிய பிரதான விடயதானங்களாகும்.

மூலம்:

அர்ருஷ்துஸ் ஸியாஸி வ உஸ"ஸ"ஹ"ஸ் மிஃயாரிய்யா: பஹ்ஸ"ஸ் பீ ஜதலிய்யதில் கியம் வல் முஅஸ்ஸஸாத் (அரசியல் முதிர்ச்சி நிலையும், அதனை அளவிடுவதற் கான கருவிகளும், பக்கம் 153 - 180, கலாநிதி லுயி அஸ்ஸாபி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலத்திரனியல் விளையாட்டும் சிறுவர் மீது அது ஏற்படுத்தும் தாக்கமும்

* கலாநிதி பீ. எம். எம். இர்பான் (நளீமி)

சூடான் நாட்டில் இயங்கும் Renaissance and Civilizational Forum 2013 ஆம் ஆண்டு அறபு மொழியில் நடாத்திய ஆய்வுப் போட்டியில் முதல் பரிசு பெற்ற ஆக்கத்தின் ஒரு பகுதி

அறிமுகம்:

இலத்திரனியல் சாதனங்களின் கண்டுபிடிப்பில் உலகம் அசுர வேகத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறது. மனிதன் பூமிப் பந்தில் எந்த மூலையில் வாழ்ந்தாலும் இக்கண்டுபிடிப்புகளால் -சாதகமாகவோ பாதகமாகவோ- தாக்கமடையாமல் இருக்க முடியாது என்று கூறுமளவு அவற்றின் வகையும் தொகையும் பெருகிவிட்டன. ஆண், பெண், பெரியவர், சிறியவர் என்ற பாகுபாடின்றி எல்லோர் வாழ்விலும் ஊடுபாவி நிற்கும் இச்சாதனங்களுள் இலத்திரனியல் விளையாட்டுகளும் ஒரு பாகம் என்பது வெளிப்படை.

இலத்திரனியல் விளையாட்டுகள் மீது சிறுவர்களுக்கு விரைவாக ஏற்பட்டு விடும் மோகமும் கவர்ச்சியும் அவை பற்றிய ஆழ்ந்த அவதானமொன்றை சமூக ஆர்வலர்களிடமும் ஆய்வாளர்களிடமும் வேண்டி நிற்கிறது. நவீன வாழ்வின் தவிர்க்க முடியாத கூறாகி விட்ட இச்சாதனங்களின் பயன்பாடு குறித்த தீவிரமான ஆய்வுகள் இன்று தேவைப்படுகின்றன. இதுவே இந்த ஆய்வை எழுதத் தூண்டிய பகைப்புலம் எனலாம்.

* சிரேஷ்ட விரிவுரையாளர், ஜாமியா நளீமிய்யா, பேருவலை. sheikhirfan1997@yahoo.com

கரு:

இந்த ஆய்வு இரு அடிப்படையான வினாக்களுக்கு விடை காண முயல்கிறது:

1. இலத்திரனியல் விளையாட்டுகள் என்பவை யாவை?
2. இலத்திரனியல் விளையாட்டுகள் சிறுவர்களில் ஏற்படுத்தும் தாக்கங்கள் எத்தகையவை?

## இலத்திரனியல் விளையாட்டுகளின் வகைப்பாடு

நோக்கங்கள், வடிவங்கள், உள்ளடக்கம், செயற்பாடு என்பவற்றின் அடிப்படையில் இலத்திரனியல் விளையாட்டுகள் பலவாறு வகைப்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக:

(1) நோக்கங்கள் அடிப்படையிலான வகைப்பாடு:

1. பொழுது போக்கு நோக்கம் கொண்டவை.
2. கல்வி சார் நோக்கம் கொண்டவை

(2) வடிவங்கள் அடிப்படையிலான வகைப்பாடு:

1. கணினி விளையாட்டுகள் (Computer Games).
2. வீடியோ விளையாட்டுகள் (Video Games).
3. கையியக்கச் சாதனங்கள் (Hand-held Machines)
4. அலைபேசிகள் (Mobile Phones)

(3) உள்ளடக்க அடிப்படையிலான வகைப்பாடு[22] -

இது பொழுது போக்கு விளையாட்டுகளை வகைப்படுத்தும் சபையின் (Entertainment



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Software Rating Board-ESRB) வகைப்பாடு. கல்வித்துறை சார்ந்தோரது அழுத்தங்களின் பேரில் இலத்திரனியல் விளையாட்டு உற்பத்திகளை வகைப்படுத்தி ஒழுங்குபடுத்துவதற்காக Interactive Digital Software Association இனால் இச்சபை அமெரிக்காவில் ஏற்படுத்தப்பட்டது. கைத்தொழில் உற்பத்தி நாடுகளில் இது போன்ற வேறு சபைகளும் காணப்படுகின்றன. உதாரணம்: Entertainment Software Rating Board (ESRB) // Internet Content Advisory Association (ICAA) // Pan European Game Information (PEGI) // Australian Classification Board (ACB).

1. குழந்தைகளுக்கான விளையாட்டுகள் (EarlyChildhood-EC): மூன்று வயதினருக்கும் அதற்கு மேற்பட்டோருக்கும் உரியவை.
2. அனைவருக்குமான விளையாட்டுகள் (Everyone- E): ஆறு வயதினருக்கும் அதற்கு மேற்பட்டோருக்கும் உரியவை. இவை சிறிதளவு வன்முறையும் கேலியும் வன்மொழியும் கொண்டிருக்கலாம்.
3. விடலைப் பருவத்தினருக்கான விளையாட்டுகள் (Teen- T): பதின்மூன்று வயதுக்கும் அதற்கு மேற்பட்டோருக்கும் உரியவை. இவை வன்முறையும் வன்மொழியும் மறைமுகமான பாலியல் கருப்பொருளும் கொண்டிருக்கலாம்.
4. வளர்ந்தோருக்கான விளையாட்டுகள் (Mature- M): பதினேழு வயதினருக்கும் அதற்கு மேற்பட்டோருக்கும் உரியவை. வன்முறை, அதிக வன்மொழி, வளர்ந்தோருக்கு உகந்த பாலியல் கருப்பொருள் என்பவற்றை கொண்டிருக்கலாம்.
5. பெரியவர்களுக்கான விளையாட்டுகள் (Adults Only- AO): பதினெட்டு வயதுக்கு மேற்பட்டோருக்கு உரியவை. இவை அதிகூடிய வன்முறை, பாலியல் கருப்பொருள், நிர்வாண உருவங்கள் என்பவற்றை கொண்டிருக்கலாம்.

(4) செயற்பாட்டு அடிப்படையிலான வகைப்பாடு[3]:

1. துடிப்பான விளையாட்டுகள் (Action Games): எதிர்ப்படும் சவால்களை வெற்றி கொள்வதற்கான துரித எதிர்வினை, நுணுக்கம், நேரக் கவனம் என்பவற்றை இவை வேண்டி நிற்கும். உதாரணம்: போர் விளையாட்டுகள்.
2. துடிப்பான சாகச விளையாட்டுகள் (Action-adventure Games): நீண்ட மற்றும் குறுகிய சவால்களை இவை கொண்டிருப்பதுடன், கண்டு பிடித்தல், சேகரித்தல், புதிர் அவிழ்ப்பு, மோதல் என்பவற்றையும் கொண்டிருக்கும். உதாரணம்: திருடும் விளையாட்டுகள்.
3. சாகச விளையாட்டுகள் (Adventure Games): மோதல்களின்றி பிறருடன் இணைந்து புதிர்களை அவிழ்த்தல்.
4. பாத்திர ஏற்பு விளையாட்டுகள் (Role Playing): மையப் பொருளைச் சுற்றி வேறுபட்ட ஆற்றல் கொண்ட சாகசக்காரர்களின் பாத்திரங்களில் விளையாடுதல்.
5. உருவகப் படுத்தல் விளையாட்டுகள் (Simulation): ஓர் உண்மை நிகழ்வை அல்லது கற்பனை கலந்த உண்மை நிகழ்வை நேரடியாக உருவகிக்கும் நோக்கில் இவை அமைக்கப்பட்டிருக்கும். உதாரணம்: நகர உருவாக்க விளையாட்டுகள், வாகனங்களை அல்லது விமானங்களைச் செலுத்தும் விளையாட்டுகள்.
6. மூலோபாய விளையாட்டுகள் (Strategy): வெற்றியைச் சாதிப்பதற்கு ஆழ்ந்த கவனமும் திட்டமிடலும் இங்கு அவசியம்.
7. வேறு விளையாட்டுகள்: இசை விளையாட்டுகள்; (Music Games), புதிர் விளையாட்டுகள் (Puzzle Games), மெய்வல்லுனர் விளையாட்டுகள் (Sports Games), எளிய பொழுது போக்கு விளையாட்டுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Trivia- பெரும்பாலும் அலைபேசிகளில் காணப்படும்), மேசை விளையாட்டுகள் (Board Games) அட்டை விளையாட்டுகள் (Card Games), விளம்பர விளையாட்டுகள் (Adverga mes), நுண்கலை விளையாட்டுகள் (Art Games), கல்வி சார் விளையாட்டுகள் (Educational Games) மற்றும் பல.

## சிறுவர்கள் மீது இலத்திரனியல் விளையாட்டுகளின் தாக்கம்

குழந்தையின் வளர்ச்சியிலும் ஆளுமை விருத்தியிலும் விளையாட்டு முக்கிய பாத்திரத்தை வகிப்பதாக கல்வியியல் நிபுணர்கள் ஒருமித்த கருத்தை வெளிப்படுத்துகின்றனர். குழந்தை தனது உடல் அவயவங்களை அசைக்கத் தொடங்கியது முதல் விளையாட ஆரம்பித்து விடுகிறது. ஏனெனில் குழந்தையிடம் மேலதிகமாக சேகரமாகும் சக்தியை வெளியிடும் பிரதான மார்க்கம் அது. குழந்தையின் பல இயல்பூக்கங்களை துலக்கி செம்மைப்படுத்துவதற்கு விளையாட்டு அவசியமானது. இன்றைய குழந்தைகளின் உலகத்தில் இலத்திரனியல் விளையாட்டுகள் இத்தகைய பகைப்புலத்தில்தான் பாவனைக்கு வந்தன என நாம் கூறினால் அது உண்மைக்குப் புறம்பாகாது. விளையாட்டு உலகத்தில் எப்போதும் புதுமை காண விரும்பும் குழந்தையின் தேவையை ஈடுசெய்யத் தோன்றிய இவ்விளையாட்டுகள் - பிற கைத்தொழில் துறைகள் போன்று- இலத்திரனியல் துறையில் ஒரு புரட்சியையே ஏற்படுத்திவிட்டன.

முதல் இலத்திரனியல் விளையாட்டு 1970 ஆம் ஆண்டில்தான் அறிமுகம் செய்யப்பட்டது. அண்மைய புள்ளி விபரம் ஒன்றில், உலகளவிலான இலத்திரனியல் வீடியோ விளையாட்டுகளின் வருடாந்த விற்பனை வருமானம் 101 பில்லியன் அமெரிக்க டொலரை விட அதிகம் என தெரிவிக்கப் பட்டுள்ளது[5].

கோஹென் 2000ஆம் ஆண்டில் மேற்கொண்ட ஆய்வு, சர்வதேச அளவில் இலத்திரனியல் விளையாட்டுகளின் விற்பனை இருபது பில்லியன் டொலரை எட்டியிருந்ததாக உறுதிப்படுத்தியது[6].

இன்று இலத்திரனியல் விளையாட்டுகள் சர்வதேச அளவில் சிறுவர்களை மட்டுமன்றி பெரியவர்களையும் வசீகரிப்பதற்கு பின்வருவன காரணங்களாக அமைகின்றன:

1. இவ்விளையாட்டுகளில் பயன்படுத்தப்படும் படங்கள், நிகழ்வுகள், வர்ணங்கள், ஒலி, இயக்கம் என்பவற்றின் கவர்ச்சி.
2. விளையாடுவோருக்கு முன்னாலுள்ள தொடர்ச்சியான சவாலும், கட்டம் கட்டமான வெற்றியும்.
3. இவ்விளையாட்டுகளுக்கும், சிறுவர்களால் விரும்பப்படுகின்ற 'காட்டூன்' சித்திரங்களுக்கும் இடையிலான ஒற்றுமை.
4. கற்பதற்கும் விளையாடுவதற்கும் இலகுவாய் இவை அமைந்திருத்தல்.

இத்தகைய ஆகர்ஷணத் தன்மை கொண்ட இலத்திரனியல் விளையாட்டுகளை நுணுகிக் கவனிக்கும் எவரும், அவை சிறுவர் மீது ஏற்படுத்தும் கடுமையான தாக்கத்தை ஒரு போதும் நிராகரிக்க முடியாது. இப்பின்புலத்தில்தான், கல்வியியலாளர்களும் ஆயவாளர்களும் குழந்தைநல மருத்துவர்களும் அவை குறித்து அதிகம் கவனம் செலுத்த தொடங்கினர்.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இத்துறை தொடர்பாக கைத்தொழில் நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இலத்திரனியல் விளையாட்டுகளின் அனுகூலங்களையும் பிரதி கூலங்களையும் தனித்தனியாக எடுத்துக் காட்டுகின்றன. எனவே அவற்றை தனித்தனியாக எடுத்து நோக்கி, பின்னர் ஒப்பு நோக்குதல் அவை பற்றிய சிறந்ததொரு முடிவுக்குவர நமக்கு உதவியாக அமையும்.

## இலத்திரனியல் விளையாட்டுகள் சிறுவர்களில் ஏற்படுத்தும் பாதக விளைவுகள்:

இலத்திரனியல் விளையாட்டுகள் தொடர்பாக கைத்தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகள், அவை சிறுவர்கள் மற்றும் விடலைப் பருவத்தினர் மீது மட்டுமன்றி வளர்ந்தோர் மீதும் பல்வேறு பாதக மான விளைவுகளை ஏற்படுத்துவதாக தெரிவித்துள்ளன. அவர்களது உள்ளம், சிந்தனை, நடத்தை, உடல் முதலிய அனைத்தி லும் அப்பாதிப்புகள் தொடர்பு பட்டிருக்கின் றன. அவற்றுள் பிரதான மானவற்றை சுருக்க மாக நோக்குவோம்:

(1) வன்முறையும் அத்துமீறலும்

இலத்திரனியல் விளையாட்டுகள் சிறுவர்கள் மீது ஏற்படுத்தும் பாதகமான விளைவுகள் குறித்து பேசும் ஆய்வுகளுள் அனேகமானவை அவ்விளையாட்டுகள் ஏற்படுத்தும் வன்முறை சார் நடத்தை மீதே அதிக கவன குவிப்புச் செய்கின்றன. அவை உள்ளடக்கியிருக்கும் பல்வேறு வன்முறை வடிவங்களே இந்நடத்தை தோன்றக் காரணம் என அவ்வாய்வுகள் தெரிவிக்கின்றன[7].

வன்முறை கொண்ட கணினி விளையாட் டுகளுக்கும், அவற்றில் ஈடுபடும் சிறுவர்கள் தமது சகபாடிகள் மீது அனுதாபம் காட்டாதி ருப்பதற்கும் அவர்களுக்கு உதவி புரியாதிருப்ப தற்கும் இடையில் மிகப் பலமான தொடர்பு காணப்படுவதாக அமெரிக்க உளவியல் விஞ்ஞானிகள் சங்கம் உறுதிப்படுத்தியது[8].

நான்காயிரம் பேருக்கு அதிகமானோர் மீது (இவர்களுள் பாதிப்பேர் 18 வயதுக்கு கீழ்ப் பட்டோர்) மேற்கொள்ளப்பட்ட 35 ஆய்வுகளின் முடிவில், இலத்திரனியல் விளையாட்டுகள் உடல் கிளர்ச்சி, கோபம், பகையுணர்ச்சி என்பவற்றை அதிகரிக்கச் செய்வதாகவும், பரஸ்பர கூட்டுறவுப் பண்பில் கணிசமான வீழ்ச்சியை ஏற்படுத்துவதாகவும் கண்டறியப்பட்டது[9].

வன்முறைத் தாக்குதலை உள்ளடக்கிய இலத்திரனியல்விளையாட்டொன்றில் ஈடுபட்ட சிறுவர்கள் அவ்வாறான உள்ளடக்கத்தை கொண்டிராத விளையாட்டில் ஈடுபட்ட வேறு சிறுவர்களை விட அதிகமாக தங்களது நிஜ வாழ்வு விளையாட்டுகளில் பரஸ்பரம் தாக்கிக் கொண்டதாக இர்வின் மற்றும் குரோஸ் மேற்கொண்ட ஆய்வொன்று காட்டியது[10].

ஸ்ரான்போர்ட் மருத்துவக் கல்லூரியி னால், பாடசாலைகளில் மூன்றாம் மற்றும் நான்காம் தரங்களில் கற்கும் மாணவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில், அவர்கள் வாராந்தம் விளையாடும் கணினி விளையாட் டின் நேர அளவு ஏழு மணித்தியாலங்களாக மட்டுப்படுத்தப்பட்ட போது அவர்களது வார்த்தையளவிலான அத்துமீறல்கள் 50% குறைவடைந்ததாகவும், உடலளவிலான அத்து மீறல் 40% குறைவடைந்ததாகவும் கண்டறியப் பட்டது[11].

இயல்பாகவே வன்முறைக் குணம் கொண்டி ராத விடலைப் பருவத்தினர் வன்முறை உள்ளடக்கம் கொண்ட கணினி விளையாட் டுகளில் நீண்ட நேரம் ஈடுபட்ட பிறகு, அவ் விளையாட்டுகளில் ஈடுபடாத விடலைப் பருவத் தினரை விட சுமார் பத்து மடங்கு அதிகமாக சண்டையிட்டுக் கொண்டதாக மற்றோர் ஆய்வு தெரிவிக்கிறது[12].

(2) அடிமைப்படுதல்[13]

அன்றாட வாழ்வை பாதிக்குமளவு இலத் திரனியல் விளையாட்டுகளில் மூழ்கிப் போகும் நிலையை இது குறிக்கிறது. இவ்விளையாட் டுகளுக்கான அபரிமிதமான சந்தைப்படுத் தலும், இன்று பெருமளவு பாவனையிலுள்ள பல்வேறு வடிவ கணினிகளும், அதீத திறன் அலைபேசிகளும் (Smart Phones) இந்நிலைக்கு வழியேற்படுத்தி உள்ளன.

இலத்திரனியல் விளையாட்டுகள் மீது சிறுவர்கள் கொள்ளும் எல்லை மீறிய ஈடுபாடு அவர்களது பிற செயற்பாடுகள் மீது பெருமளவு தாக்கம் செலுத்துவதாக கவலை தெரிவிக்கப் படுகிறது. அடிமைப்படும் நிலையிலான இந்த ஈடுபாட்டை மாற்ற முயலும் போது உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பக்க விளைவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றுகின்றன எனவும் கண்டறியப் பட்டுள்ளது.[14]

இலத்திரனியல் விளையாட்டுகளுக்கு இவ்வாறு அடிமைப்பட்ட நிலையில் அவற்றுக் கான பணத்தைப் பெறுவதற்காக குற்றச் செயல்களில் ஈடுபடும் சிறுவர்கள் பிற வகை யான அம்சங்களுக்கு அடிமைப்பட்டவர்களை -சிற்சில பண்புகளில்- ஒத்திருப்பதாகவும், சமூகப் பிரச்சினைகளில் சிக்கிக்கொள்வதா கவும் அவதானிக்கப்பட்டுள்ளது.[15]

இலத்தினியல் விளையாட்டுகளுக்கு அடிமையானோர் தங்களை குடும்பம், நண்பர்கள் மற்றும் பிற சமூகத் தொடர்புகளிலிருந்து தனிமைப்படுத்திக்கொண்டு, விளையாட்டு ரீதியான சாதனைகளில் மாத்திரம் ஆழ்ந்து போவதாகவும் சில ஆய்வுகள் சுட்டுகின்றன.[16] -

டென்மார்க் ஆய்வொன்றின் படி, கணினி விளையாட்டுகள் குழந்தையின் சிந்தனைப் பாங்கில் பாரிய தீங்குகளை ஏற்படுத்துகின்றன இவ்விளையாட்டுகளுக்கு அடிமையாகும் குழந்தை அறிவு ரீதியாகவும் சமூக ரீதியாகவும் வலது குறைந்த நிலைக்கு தள்ளப்படுகிறது. இவற்றினாலும் வேறு தொழிநுட்பக் கண்டு பிடிப்புகளாலும் அவசர இயல்புக்கு பழக்கப் படும் குழந்தை, ஒப்பீட்டளவில் வேகம் குறைவான அன்றாட வாழ்வியல் நிகழ்வு களோடு இயைந்து செல்வதற்கு சிரமப்படு கிறது. இந்நிலையில் அது வீட்டிலும் பாடசாலையிலும் வெறுமைக்கும் தனிமை உணர்வுக்கும் ஆட்படுகிறது.[17]

### (3) குற்றச் செயல்கள்

வீடுகளிலும் பாடசாலைகளிலும் இடம் பெற்ற பல குற்றச் செயல்களே ஆரம்பத்தில் இலத்திரனியல் விளையாட்டுகளின் அபாயம் குறித்து பலரும் கவனம் செலுத்த துாண்டின. இவ்விளையாட்டுகளில் தீவிரமான ஈடுபாடு கொண்டிருந்தோர் தங்கள் ஆசிரியர்கள் மீதும் சகபாடிகள் மீதும் உறவினர்கள் மீதும் துப்பாக்கிச் சூடு நடாத்திய சம்பவங்களும், தம்மைத் தாமே மிகக் கொடூரமாக அழித்துக் கொண்ட நிகழ்வுகளும் அமெரிக்கா, ஜேர்மன், ஜப்பான், ஸ்பெய்ன், பிரித்தானியா, சீனா, கொரியா, நோர்வே போன்ற நாடுகளில் பதிவு செய்யப் பட்டன.[18]

### (4) பெறுமானங்களில் பிறழ்வு

பல இரத்திரனியல் விளையாட்டுகள் சிறுவர்களுக்கு பிறழ்வுற்ற-தவறான பெறுமா னங்களை கற்றுக் கொடுப்பதோடு, சமூக வாழ்வுக்கு ஒவ்வாத நடத்தைக்கும் இட்டுச் செல்வதாக குற்றம் சாட்டப்படுகிறது. வன்மமும் அத்துமீறலும் போற்றத்தக்க பண்புகள் என சிறுவர்கள் நம்பத் தொடங்கு வது இப்பிறழ்வின் வெளிப்பாடெனலாம்.

இலத்திரனியல் விளையாட்டுகள் பெண் களையும் சிறுபான்மை சமூகங்களையும் இழிவு படுத்தும் வகையில் கொண்டுள்ள காட்சிகள் தொடர்பாகவும் ஆய்வாளர்கள் கவனம் செலுத்தத் தொடங்கினர்.[19] ஏனெனில் இத்தகைய காட்சிகள் பால் மற்றும் இன ரீதியான அநீதிகள் சமூக அங்கீகாரம் கொண்டவை என்ற மனப்பதிவை சிறுவர் உள்ளத்தில் ஏற்படுத்துவ தாக அஞ்சப்படுகிறது.

இலத்திரனியல் விளையாட்டுகளுக்கும் பெண்களுக்கெதிரான நிலைப்பாடுகளுக்கும் தொடர்பிருக்க வாய்ப்பிருப்பதாக சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இவ்விளையாட் டுகளில் பாலியல் சார்ந்த பெண் தோற்றங்களை கண்டு பழகிப் போனவர்கள் தொழில் முறை சார்ந்த தோற்றங்களை கண்டு பழகியவர்களை விட பாலியல் வல்லுறவில் அதிகம் நம்பிக்கை வைக்கின்றனர் என அவை கூறுகின்றன.[20]

மேற்குலகில் பெரும்பான்மை சமூகங்க ளுக்கு மத்தியில் வாழும் சில சிறுபான்மையினர் (உதாரணமாக மத்திய கிழக்கினர்) கணினி விளையாட்டுகளில் மிகையாக வன்முறைக்கு இலக்காக கொள்ளப்பட்டிருப்பதாக வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன.[21] அமெரிக்க கறுப்பு இனத்தவர்கள் கைதேர்ந்த மெய்வல்லு னர்களாகவும், மாஃபியாக்களாகவும், அதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறையாளர்களாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளனர். ஆசியப் பெண்கள் சாதுவான அழகிகளாகவும், ஆசிய ஆண்களில் அனேகர் தற்காப்புக் கலை நிபுணர்களாகவும் சித்தரிக்கப் பட்டுள்ளனர்.[22]

கீதானோ மற்றும் பாந்தரின் ஆய்வு[23], வன்முறை கொண்ட கணினி விளையாட்டுகள் வேறு பல தவறான புரிதல்களையும் ஏற்படுத்துவதாக தெரிவிக்கிறது. 'பிரச்சினைகள் விரைவாகவும் குறைந்த யத்தனத்தோடும் தீர்க்கப்பட முடியும்', 'பிரச்சினையை தீர்ப்பதற்கான ஒரே வழி அப்பிரச்சினையின் மூலத்தை முற்றாக அழித்து விடுவதே', 'பிரச்சினைகளை எதிர் கொள்வதற்கு திட்டமிட்ட படிமுறைச் செயற்பாடுகளன்றி எழுந்தமானமான இயல்பூக்கச் செயற்பாடுகள் போதுமானவை' என்பன போன்ற தவறான புரிதல்களை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

*(5) யதார்த்த வாழ்வில் வன்முறைச் சம்பவங்களைக் காணும் போது உணர்ச்சி வெளிப்பாடற்றிருத்தல்[24]*

*(6) பாடசாலைச் செயற்பாடுகளிலும் கல்விச் சாதனைகளிலும் பின்தங்கி விடல்[25]*

இலத்திரனியல் விளையாட்டுகளில் செலவிடப்படும் அதிக நேரம் கல்விச் செயற்பாடுகளை பாதிப்பதே இதற்கு காரணம்.

*(7) கவனக்குவிப்பும் நினைவாற்றலும் பலவீனமடைதல்.*

இவ்விளையாட்டுகளில் சிறுவர்கள் கற்பனையை அதிகம் படர விடுவதால் இந்நிலை ஏற்படுகிறது. இரவில் தூக்கமின்மையும் நேர காலத்துடன் தூங்க முடியாதிருத்தலும் இதற்கான சில காரணங்களாக முடியும்.[26]

*(8) சிறுவர்களிடம் சுயநலமும் தந்திரமும் சூழ்ச்சியும் வளர்ச்சியடைதல்[27]*

*(9) நேர விரயம்[28]*

*(10) உடல் நலத்தில் ஏற்படும் அபாயங்கள்.*

இவ்விளையாட்டுகளில் ஈடுபடும் சிறுவர்கள் பார்வைப் பலவீனம், தசை மற்றும் என்பு வலி, நேரம் தவறிய-பிழையான உணவுப் பழக்கத்தால் தோன்றும் போஷாக்கின்மை, உடல் பருமனாதல், வலிப்பு போன்ற உபாதைகளுக்கு உட்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.[29]

## இலத்திரனியல் விளையாட்டுகள் சிறுவர்களில் ஏற்படுத்தும் சாதக விளைவுகள்:

இலத்திரனியல் விளையாட்டுகளின் பிரதிகூலங்களை பல ஆய்வுகள் சுட்டிக்காட்டிய போதிலும், கலக்கமடையும் அளவுக்கு அவை தீங்கானவை அல்ல எனவும், கல்வித் துறையில் அவற்றிலிருந்து பல அனுகூலங்களைப் பெற முடியும் எனவும் வேறு ஆய்வுகள் வலியுறுத்துவதை இங்கு மறுப்பதற்கில்லை[30].

அத்தகைய அனுகூலங்களை சுருக்கமாக இவ்வாறு வரிசைப்படுத்தலாம்:

*(1) இலத்திரனியல் விளையாட்டுகள் அறிவார்ந்த ஆற்றல்களுக்கும் புலன்களின் ஒருமித்த செயற்பாட்டுக்கும் பயிற்றுவிக்கின்றன*

சமயோசிதம், அனர்த்த முகாமைத்துவம், துரித பகுப்பாய்வு, விரைவான தீர்மானம், மூலோபாய நோக்கு, வாசிப்பு மற்றும் கணிதவியல் ஆற்றல்கள், விடாமுயற்சி, யூகிக்கும் ஆற்றல், திட்டமிடல், நினைவாற்றல் என்பவற்றை இவ்விளையாட்டுகள் வளர்ப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.[31]

*(2) இலத்திரனியல் விளையாட்டுகள் கணினித் தொழிநுட்பத்தையும் இணையத்தையும் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்துகின்றன[32] -*

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் அதியுயர் தொழிநுட்ப உலகில் குழந்தைகளுக்கு இந்த அறிவு மிக அவசியம்.

*(3) இலத்திரனியல் விளையாட்டுகள் கல்விச்செயற்பாட்டை இன்பமானதாகவும் மகிழ்ச்சியானதாகவும் ஆக்குகின்றன.*

அவற்றின் நிறங்கள், படங்கள், இயக்கம், சவால்கள், பரிசுகள் என்பவற்றால் சிறுவர்கள் அவற்றை விரும்புகின்றனர். கற்றலுக்கு மிகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த வழி கற்றல் செயற்பாடு களிப்பூட்டு வதாக அமைவதாகும். இந்த வகையில் இவ்விளையாட்டுகள் இயல்பான ஆசிரியர் களாக அமைந்து விடுகின்றன.[33] இப்பின் புலத்தில்தான் பல்வேறு கல்விசார் நோக்கங் களுக்காக இலத்திரனியல் விளையாட்டுகள் இன்று பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(4) இலத்திரனியல் விளையாட்டுகள் சிறுவர்களிடம் தன்னம்பிக்கையையும் சுய கௌரவ உணர்வையும் வளர்க்கின்றன.

அனேகமான இலத்திரனியல் விளையாட் டுகளில் சவால்கள் பல படித்தரங்களில் அமைந்திருக்கும். இலகுவான படித்தரத்தி லிருந்து விளையாட ஆரம்பிக்கும் சிறுவர்கள் படிப்படியாக அதிக சவால் கொண்ட கட்டங் களை அடைகின்றனர். தோல்விக்கு கொடுக்கும் விலை சொற்பம் என்பதால் திரும்பத் திரும்ப வெற்றிக்காக முயல்கின்றனர். இதனால் அதிகம் கற்கும் வாய்ப்பை பெறுகின்றனர்.

(5) இலத்திரனியல் விளையாட்டுகள் குழுச் செயற்பாட்டுக்கு பயிற்சியளிக்கின்றன.

(6) இணையம் மூலமான இலத்திரனியல் விளையாட்டுகள் பல்வேறு நாடுகளையும் கலாசாரங்களையும் சேர்ந்தோரை அறிமுகப் படுத்துகின்றன.

ஏக காலத்தில் பலரால் ஈடுபட முடியுமான விளையாட்டுகளில் இவ்வாய்ப்பு கிட்டுகிறது.

(7) சில இலத்திரனியல் விளையாட்டுகள் சிறுவர்களுக்கு சிறந்த உடற்பயிற்சியாக அமைகின்றன.

(8) வன்முறை சார்ந்த இலத்திரனியல் விளையாட்டுகள் மனதுக்குள் அடக்கப் பட்டிருக்கும் விரக்தியுணர்வுக்கும் வன்ம உணர்வுக்கும் வடிகாலாய் அமைகின்றன.[34]

இந்த வகையில் கால்பந்து போன்ற வன் விளையாட்டுகளாக இவை தொழிற்படுகின்றன.

(9) விடலைப் பருவத்தினர் போதைப் பொருளுக்கும் வீதி விளையாட்டுகளுக்கும் அடிமைப்படுவதை விட இலத்திரனியல் விளையாட்டுகள் பாதுகாப்பானவை.[35]

(10) மருத்துவப் பயன்கள்.[36]

இலத்திரனியல் விளையாட்டுகள் சில வகையான நோய்களுக்கு -குறிப்பாக புற்று நோய்க்கு- சிகிச்சையளிக்கும் போது ஏற்படும் வேதனையை குறைக்க உதவுவதாக நவீன மருத்துவப் பரிசோதனைகள் உறுதி செய்துள்ளன.

கைகளில் ஏற்பட்ட எரி காயங்களையும் பக்கவாதத்தையும் சரி செய்து பழைய நிலைக்கு கொண்டுவர இவ்விளையாட்டுகள் உதவுவதாக வும் கண்டறியப்பட்டுள்ளது.

மூளை விருத்தி குன்றிய குழந்தைகளிடம் சிந்திக்கும் திறனையும்கவனக்குவிப்பையும்இவை ஊக்குவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## ஆய்வின் பெறுபேறுகளும் கலந்துரை யாடலும் பரிந்துரைகளும்

இலத்திரனியல் விளையாட்டுகளை ஆதரிப் போருக்கும் எதிர்ப்போருக்கும் இடையில் அவற்றின் பயன்கள் குறித்தும் தீங்குகள் குறித்தும் பல்வேறு ஆய்வு முடிவுகளும் வாதப் பிரதிவாதங்களும் விமர்சனங்களும் பரிமாறப் பட்ட போதிலும், நடுநிலையான நோக்கில் கவனிக்கும்போது பின்வரும் பிரதான முடிவு கள் நமக்கு கிடைக்கின்றன:

1. இலத்திரனியல் விளையாட்டுகள் சமகால குழந்தை வளர்ப்பு பொறிமுறையில் நிராக ரிக்க முடியாத தாக்கத்தை கொண்டிருக் கின்றன.
2. இலத்திரனியல் விளையாட்டுகள் சிறுவர்கள் மீது அனுகூலமாகவும் பிரதி கூலமாகவும் ஏராளமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.
3. இலத்திரனியல் விளையாட்டுகள் ஏக காலத்தில் சிறுவர்களது உடல்-உள ஆரோக்கியத்தை கெடுக்கவும், விருத்தி செய்யவும் ஆற்றல் பெற்றிருக்கின்றன.
4. இலத்திரனியல் விளையாட்டுகளின் பாதக மான விளைவுகள் பற்றிப் பேசும் பல ஆய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் அவற்றின் வன்முறை சார்ந்த உள்ளடக் கத்தின் மீதே அதிக கவனம் செலுத்துகின்றன.

5. இலத்திரனியல் விளையாட்டுகள் தொடர் பான மேற்கு நாடுகளின் தரப்படுத்தலும் கட்டுப்பாடுகளும் அவற்றின் தீங்குகளைத் தடுக்கப் போதுமானவையன்று.

இலத்திரனியல் விளையாட்டுகள் மனித வாழ்வியல் பயன்பாட்டுக்காக வந்த நவீன சாதனங்களுள் ஒரு கூறு என்ற வகையில் அவற்றை முற்றாக புறமொதுக்குவது சாத்தியமற்றது. எனவே, இவ்விளையாட் டுகளின் அனுகூலங்களையும் பிரதிகூலங் களையும் எடுத்துக்காட்டும் ஆய்வுகளின் நிழலில் சில கட்டுப்பாடுகளோடும் விதிமுறை களோடும் அவற்றிலிருந்து பயன்பெற முயல்வதே உகந்த செயலாகும்.

இவ்விளையாட்டுகளை உள்ளடக்க அடிப்படையில் தரம் பிரிப்பதற்கும் வகைப் படுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த மேற்கு நாடுகளில் பல நிறுவனங்கள் ஏற்படுத் தப்பட்டிருப்பினும், அவற்றின் தரப்படுத்தலும் கட்டுப்பாடுகளும் பண்பாட்டு விழுமியங் களால் பெரிதும் வேறுபட்டிருக்கும் கீழைத் தேய சமூகங்களுக்கு முழுமையாக பயனளிக் கும் என எதிர்பார்க்க முடியாது. மட்டுமன்றி, மேற்கு சமூகங்கள் கூட அவற்றை முழுத் திருப்தியுடன் ஏற்றுக் கொண்டன என்றும் சொல்வதற்கில்லை. Entertainment Software Rating Board (ESRB) என்ற பெயர் கொண்ட அத்தகைய கட்டுப்பாட்டு நிறுவனமொன் றுடன் பெற்றார் சங்கமொன்று கடுமையான முரண்பாடு கொண்டிருந்ததாக குழந்தை மருத்துவம் தொடர்பான அமெரிக்க சஞ்சிகை ஒருமுறை குறிப்பிட்டிருந்தது.[37]

எனவே. இது தொடர்பில் முதலில் குடும்ப மட்டத்திலும், அடுத்தாக பொறுப்பு வாய்ந்த வர்கள் மட்டத்திலும் முழுமையான புரிதல் ஏற்படுதல் அவசியம். பல சந்தர்ப்பங்களில் கீழைத்தேய பண்பாட்டு பெறுமானங்களுக்கு (Values) முரணான அம்சங்களையும் உள்ளடக் கியிருக்கும் இவ்விளையாட்டுகளுள் பயனுள் ளதை தேர்ந்தெடுத்து பயனற்றதை விலக்குவது பெற்றோர் மற்றும் பொறுப்பு வாய்ந்தவர்களது பணியாகும். குழந்தைகளால் உண்மையான அபாயத்தை புரிந்துகொள்ள முடியாது. பெரியவர்களே சிறியவர்களது ஆளுமை விருத்திக்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நவீன வாழ்வியலின் தவிர்க்க முடியாத கூறாக அமைந்துவிட்ட இத்தகைய கண்டுபிடிப்புகளிலிருந்து எப்போது, எப்படி பயன் பெறுவது என்ற வழிகாட்டல் சமூக ஆய்வாளர்களாலும் கற்றறிவாளர் களாலும் தெளிவாக வரையப்பட வேண்டியது காலத்தின் தேவை. 'உங்கள் குழந்தைகளுக்கு உங்களைப் போன்றல்லாது வேறு மாதிரி யாகவும் பயிற்றுவியுங்கள். ஏனெனில் அவர்கள் உங்கள் காலத்தை விட வேறுபட்டதொரு காலத்துக்காக படைக்கப்பட்டவர்கள்" என முஸ்லிம் நல்லாட்சியாளர் அலீ பின் அபீ தாலிப் (றழி) கூறியதை நினைவூட்டுதல் இங்கு பொருந்தும்.[38]-

ஆக- இவ்விளையாட்டுகளின் போது கவனிக்கப்பட வேண்டிய பயன், உடல்-உள ஆரோக்கியம், விழுமியங்கள், நடத்தை சார் நியமங்கள், சமூகப் பெறுமானங்கள், கல்வி சார் கடமைகள், நேர முகாமைத்துவம் என்பன உரிய வகையில் கவனிக்கப்படுமாயின் எதிர் பார்க்கப்படும் பயன்கள் நிச்சயம் கிடைக்கும். தீமைகள் தவிர்க்கப்படும். சிறுவர்கள் தங்களது ஓய்வு நேரத்தின் ஒரு பகுதியை அச்சமோ கலக்கமோ இன்றி கழிக்கும் வாய்ப்புக்கிட்டும்.

மேற்குறித்த பெறுபேறுகள் மற்றும் கலந்துரையாடலின் ஒளியில் பின்வரும் அம்சங்களை நாம் பரிந்துரை செய்யலாம்:

1. இலத்திரனியல் விளையாட்டுகளின் நன்மை-தீமை தொடர்பாக சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் அறிவூட்டப்படல்.
2. இலத்திரனியல் விளையாட்டுகளை விழுமி யங்களின் அடிப்படையில் தரப்படுத்துவ தற்கும் கட்டுப்படுத்துவதற்குமான பொறி முறைகள் கீழைத்தேய சமூகங்களில் ஏற்படுத்தப்படல்.
3. பயனுள்ள இலத்திரனியல் விளையாட்டு களை மாத்திரம் பொறுப்பு வாய்ந்த அதிகா ரிகள் பயன்பாட்டுக்கு அனுமதித்தல்.
4. இலத்திரனியல் விளையாட்டுகளின் அபாயங்களை தவிர்க்கும் வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விசார் விளையாட்டுகளை பதிலீடாக முன்வைத்தல்.

5. இத்துறையில் மேலும் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்படல்.

## அடிக்குறிப்புக்களும் உசாத்துணைகளும்


1 - Douglas A. Gentile and Craig A. Anderson, Violent Video Games: The Effects on Youth, and Public Policy Implications, Chapter 12, Handbook of Children, Culture, and Violence (N.Dowd, D.G.Singer, & R.F.Wilson), 2006, pp225-246.

2 - இது பொழுது போக்கு விளையாட்டுகளை வகைப் படுத்தும் சபையின் (Entertainment Software Rating Board-ESRB) வகைப்பாடு. கல்வித் துறை சார்ந்தோரது அழுத்தங்களின் பேரில் இலத்திர னியல் விளையாட்டு உற்பத்திகளை வகைப்படுத்தி ஒழுங்கு படுத்துவதற்காக Interactive Digital Software Association இனால் இச்சபை அமெரிக்கா வில் ஏற்படுத்தப்பட்டது. கைத்தொழில் உற்பத்தி நாடுகளில் இது போன்ற வேறு சபைகளும் காணப் படுகின்றன. உதாரணம்: Entertainment Software Rating Board (ESRB) // Internet Content Advisory Association (ICAA) // Pan European Game Information (PEGI) // Australian Classification Board (ACB).

3 - இலத்திரனியல் விளையாட்டுகளின் வகைப்பாட்டு முறை தொடர்ச்சியாக மாறும் தன்மை கொண்டது. அந்தவகையில், இவ்வகைப்பாடு சிறிது காலத்தின் பின்னர் மாறக் கூடும் - Chris Crawford, "A Taxonomy of Computer Games"; http://www.vancouver.wsu.edu/fac/peabody/game-book/Chapter3.html

4 - Video game genres, Wikipedia, The Free Encyclopedia, http://en.wikipedia.org/wiki/

5 - Statista, Statistics and Facts about the Video Game Industry, www.s tatista.com

6 - Douglas A. Gentile et al., The effects of violent video game habits on adolescent hostility, aggressive behaviors, and school performance, SCIENCE DIRECT, Journal of Adolescence 27(2004) 5-22.

7 - Irwin, A.R. and Gross, A.M.(1995) 'Cognitive tempo, violent video games and aggressive behavior in young boys ', *Journal of Family Violence*, 10, 3, pp. 337–350

8- Children and Violent Video Games,p.1, www.drphil.com/articles/article/297

.9 - Anderson C.A. and Brad Bushman B.J., EFFECTS OF VIOLENT VIDEO GAMES ON AGGRESSIVE BEHAVIOR, AGGRESSIVE COGNITION, AGGRESSIVE AFFECT, PHYSIOLOGICAL AROUSAL, AND PROSOCIAL BEHAVIOR: A Meta-Analytic Review of the Scientific Literature,General Article PSYCHO LOGICAL SCIENCE, *Iowa State University*,VOL.12, NO. 5, SEPTEMBER 2001, pp.353-359.

10 - Irwin, A.R. and Gross, A.M.(1995) 'Cognitive tempo, violent video games and aggressive behavioin young boys', *Journal of Family Violence*, 10, 3, pp.337–350.

11 - Tom Robinson et al., "Effects of ReducingChildren's Television and Video Game Useon Aggressive Behavior,"*Archives of Pediatric Adolescent Medicine 55:1 (2001): 17-23.*

12 - Paul Lynch et al., "The Effects of Violent Video Game Habits on Adolescent Aggressive Attitudes and Behaviors,"paper presented at the Biennial Conference of the Society for Research in Children Development, Minneapolis, April 2001 National Institute on Media and the Family, 2001.

13 - Phillips, C.A., Rolls, S., Rouse, A. and Griffiths, M.D. (1995) 'Home video game playing in school children: a study of incidence and patterns of play', *Journal of Adolescence*, 18, pp. 687–691.

14 - Soper, W.B. and Miller, M.J. (1983) Junk time junkies: An emerging addiction among students', *School Counselor*, 31, pp. 40–43.

15- Huff, G. and Collinson, F. (1987) 'Young offenders, gambling and video game playing', *British Journal of Criminology*, 27, 4, Autumn 1987, pp. 01–410.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16.Hauge, Marney R. and Douglas A. Gentile. Video game addiction among adolescents: Associations with academic performance and aggression. (Paper presented at a Society for Research in Child Development Conference, Tampa Florida. April, 2003. Accessed June 25, 2007)

17- www.saaid.net/tarbiah/163.htm

18- Anderson C.A., An update on the effects of playing violent video games, SCIENCE DIRECT, Journal of Adolescence 27(2004), p.113

19 - Brenick, Henning, Killen, O'connor, and Collins, 2007; Dill, Brown, & Collins, 2007; Dill et al., 2005; Scharrer,2004; Walsh, Gentile, Van Overbeke, & Chasco, 2002. Karen E Dill: The Influence of Video Games on Youth: Implications for Learning in the New Millenium, p.4, *www.oecd.org/dataoecd/43/61/39414891.pdf*

20 - Karen E Dill: The Influence of Video Games on Youth: Implications for Learning in the New Millenium, Lenoir-Rhyne College (No Date) p.4.

21 - Karen E Dill. Ibid. P: 5.

22 - Karen E Dill. Ibid. pp.5.

23 - DeGaetano, G. & Bander, K. 1996, Violent vidio games and stimulus addiction .http://www.mediaawareness.ca/eng/med/class/teamedia/vidintro.htm

.24 - Walsh, D. A. (2004). *Why Do They Act That Way? A Survival Guide to the Adolescent Brain for You and Your Teen.* New York Free Press

25 - Van Schie, E. G. M., & Wiegman, O. (1997), Children and video games: leisure activities, aggression, social integration, and school performance. Journal of Applied Social Psychology, 27, 1175–1194

26 - www.zubair-online.com.

27 - THE GOOD AND BAD EFFECTS OF VEDIO GAME, www.raisesmartkid. com/.../34-the-**good-and-bad-effects-of-video-games**.

28 - Rosenthal, R.(1986).Media violence, antisocial behavior, and the social consequences of small effects. Journal of Social Issues, 42, 141–154

29 - THE GOOD AND BAD EFFECTS OF VEDIO GAME, Ibid

30 - Sanger J, (1996) Young Children, Videos amd Computer Games, The Falmer Press

31 - Provenzo, E. F. (1991). *Video kids: Making sense of Nintendo*, Cambridge, MA: Harvard University Press

32 - Kaveri Subrahmanyam, Robert Kraut, Patricia Greenfield, and Elisheva Gross, "The Impact of Home Computer Use on Children's Activities and Development," *The Future of Children: Children and Computer Technology* 10:2 (The David and Lucile Packard Foundation. Fall/ Winter 2000) : 123-144.

33 - Clark, A. C., & Ernest, J. V. (2009). Gaming in Technology Education. Technology Teacher, 68(5), 21-26. Wikipedia, the free encyclopedia.

34 - Jessica Harris, The effects of computer games on young children –a review of the research, p1, RDS Occasional Paper No 72, library.npia.police.uk/docs/homisc/occ72-compgames.pdf//

35 - THE GOOD AND BAD EFFECTS OF VIDEO GAMES,Ibid.

36 - ஸல்பிய்யாத் வ ஈஜாபிய்யாதுல் அல்ஆபில் இலக்துரூனிய்யா Admin alexmedia.forumsmotion.com/t155-topic, Last update: 28 June 2010

37- David Walsh and Douglas Gentile, "A Validity Test of Movie, Television, and Video-Game Ratings," *Pediatrics* 107(2001): 1302-1308.

38 - அல் அத்பால் பில் இஸ்லாம் ரிஆயதுஹு வநுமுவ்வுஹு வஹிமாயதுஹு ஜாமியத்துல் அஸ்ஹர், கெய்ரோ ,2005, பக்: 102



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானமும் வானவியலும்: அல்பிரூனியின் புத்திஜீவித்துவ சாறல்

* ஸெய்யித் முஹம்மத் முஹ்சின்

## முன்னுரை

அபூ ரைஹான் முஹம்மத் இப்னு அஹ்மத் அல் பிரூனி (கி.பி 973-1048) பல்வேறு ஆராய்ச்சிகளையும் விஞ்ஞான கண்டுபிடிப்பு களையும் மேற்கொள்வதற்கு ஒரு பாதையை அமைத்து கொடுத்த இஸ்லாமிய முன்னோடி விஞ்ஞானிகளில் ஒருவராவார். மேலும் இவர் இஸ்லாமிய அறிஞர்களில் மிகவும் சிறந்து விளங்குவதற்கு அவரது புதுமையான கண்டு பிடிப்புக்கள் காரணமாய் அமைந்தன. இவர் அறிவியல மற்றும் விஞ்ஞானத்துறைகளில் எத்துறையில் தனது கவனத்தை குவித்தார் என்று வரையறை செய்வது மிகவும் கடின மானது. ஏனெனில் இவர் அறிவியல் விஞ்ஞா னத்தின் முக்கிய துறைகளான வானியல், கணித வியல், காலவரிசையியல், புவிக்கணிதவியல் பௌதீகவியல், இரசாயனவியல், மாணிக் கக்கற்கள், மருத்துவம், நிலவியல், கனிப்பொரு ளியல், தாவரவியல் என்று எண்ணிலடங்காத துறைகளில் தடம்பதித்து நிற்கிறார். எனினும் இவரது வாழ்நாளில் அரைவாசிக்கு அதிகமாக வானவியல் மற்றும் அதனுடன் தொடர்பான துறைகளில் தனது கவனத்தைக் குவித்திருக் கிறார் என்பதை அறியக்கூடியதாக இருக்கின் றது. இவர் வானவியல் துறையில் மேற்கொண்ட மிகப் பெரிய பங்களிப்பாக அவரது "கிதாபுத் தப்ஹீம் லி அவாஇல் சினாஅதித் தன்ஜீம்" என்ற நூல் திகழ்கிறது. இந்தப் புத்தகம் 530 அலகுகளைக் கொண்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்நூல் கேத்திர கணிதம், எண்கணிதம், புவியியல், தூய ஜோதிடம், வானவியல், கால அளவையியல், ஜோதிடக் குறியீடுகள், கோள்கள் என்பவற்றைப் பற்றி அலசுகிறது. அத்தோடு இவர் ஜோதிட வியலிலுள்ள தனது அவதானங்களையும், ஜோதிட கணிப்பீட்டு முடிவுகளையும் துல்லிய மாக விளக்குகிறார். இவ்வாய்வு அல்பிரூனி விஞ்ஞானத்திற்கு, குறிப்பாக வானவியல் துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்ளை பகுப்பாய்வு அணுகுமுறையினூடாக அலசுகிறது.

ஒருவரது பங்களிப்பின் சிறப்புத் தன்மை அதனது தனித்துவத்தினாலும், பலநூறு வருடங்கள் கடந்தாலும் அதனது தாக்கம் நீடித்தலினாலும் தான் அளவிடக்கூடியதாக உள்ளது. அந்த வகையில் அல்பிரூனியின் வியத்தகு பிரமாண்டமான பங்களிப்புக்கள் 1000 வருடங்களுக்கு அப்பாலும் ஒரு உயர்ந்த இடத்தை தொடர்ந்தும் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றன. மேலும் அவரது கண்டு பிடிப்புக்கள் அறிவியல் நிபுணர்களின் கவனத்தை ஈர்ப்பதாகவும் காணப்படுகின்றன.

அல்பிரூனி மேற்கு மற்றம் கிழக்குலக அறிஞர்களாலும் கூட போற்றப்படும் ஒரு மிகப் பெரிய விஞ்ஞானியாக திகழ்கின்றார். மேலும் அல் பிரூனியின் அயராத அறிவுத்தாகம் கிழக்கு மற்றும் மேற்குலகிலும் கூட அறிவியல் கலைகளை வெளிக் கொண்டுவருவதற்கு உந்துதலாய் அமைந்தது. அத்தோடு அன்றைய

*தமிழில்: எஸ். ஏ.எம். றிழ்வான், விடுகை வருடம், இஸ்லாமிய கற்கைகள் பீடம், ஜாமிஆ நளீமிய்யா. rilwanabdeen1210@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் அனைவராலும் புரியப்படக்கூடிய ஒரு மொழிக்கு அக்கலைகளை மாற்றுவதற்கும், அறிந்துக் கொள்வற்கும், புரிந்துக் கொள்வதற்கும் அவரது அறிவுத்தாகம் தூண்டுகோலாக அமைந்திருந்தது. மனிதர்களது வாழ்விற்காகவும், அவர்களது வாழ்வியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குமான ஆலோசனைகளையும் வழிக்காட்டல்களையும் வழங்குவதன் பாலும் அல்பிரூனி தனது கவனத்தைத் திருப்பியிருந்தார் இதனால் வரலாற்றாசிரியர்கள் இவரை " மனித நேயமிக்க அறிஞர்" என்று அழைக்கின்றனர்.

இவ்வாய்வானது அல்பிரூனியின் விஞ்ஞானத்திற்கான, குறிப்பாக வானவியலுக்கான அவரது பங்களிப்புக்கள் பற்றியும், அவர் விஞ்ஞான பகுப்பாய்வு முறைகளை எவ்வாறு மேற்கொண்டார் என்பது பற்றியும் தெளிவாக விளங்கப்படுத்தக்கூடியதாக இருக்கிறது தற்காலத்தில் 'இஸ்லாமும் அறிவியலும்' என்ற தலைப்பில் அரங்கேறும் விவாதங்களையும் கவனத்திற்கொண்டு அறிவியலுக்கான இஸ்லாமிய உலகின் நோக்கு எவ்வாறு இருக்கின்றது என்பதனையும் உள்ளடக்கியதாகவும் இவ்வாய்வின் உள்ளடக்கம் அமைகிறது.

## ஆய்வின் முக்கியத்துவம்

இஸ்லாமிய நாகரிகத்தின் தீச்சுடரிற்கு ஒளியேற்றிய அறிவியல் முன்னோடிகளின் வரலாற்றினை விளக்கும் வகையில் இந்த ஆய்வு மிக முக்கியமானதொன்றாக அமைகின்றது. அல்பிரூனியின் மரணத்திற்குப் பின்னர் 1000 வருடங்கள் கழிந்தும் அவரது அடைவுகளும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் இன்றும் தற்காலத்திற்கு ஏற்புடையதாகவும் மேலதிக கண்டுபிடிப்புக்களை மேற்கொள்வதற்கான களமாகவும் அமைந்துள்ளன.

பின்நவீனத்துவ தத்துவவியலையும் அதனது பாதகமான விளைவுகளையும் விளங்கும் போதுதான் இந்த ஆய்வின் குறிப்பிடத் தக்க சில முக்கியமான விடயங்களை புரிந்து கொள்ள முடியுமானதாக இருக்கும். ஏனெனில் பின்நவீனத்துவத்தின் செயற்பாடுகள் மார்க்கத்தை இழிவுபடுத்தல், உண்மையைக் கைவிடல், மத நம்பிக்கையின்மையைப் பரப்புதல் மேலும் கடவுள் கொள்கைக்கு சவால் விடல் போன்றவையாக அமைந்துள்ளன. அல்பிரூனி இவற்றை மறுப்பதற்கான வழிவகைகள் நிலைத்து நிற்பவையாகவும் விஞ்ஞானத்திற்கும் அதனது தத்துவத்திற்குமான வித்தியாசங்களையும் தெளிவாக வகுத்துத் தந்துள்ளார். மேலும் இஸ்லாத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் எதிரான விவாதங்களை தனித்து முஸ்லிம்களின் அறிவியல் கண்டுபிடிப்புக்களை உலகிற்கு எடுத்துச் சொல்வதாகவும் இவ்வாய்வு அமைகின்றது. எனவே தற்காலத்திற்கு இந்தக் கண்டுப்பிடிப்புகளும், பங்களிப்புகளும் எவ்வாறு ஏற்றமானதாக அமைகின்றது என்பது பற்றியும் இவ்வாய்வு பேசுவது முக்கியமானதொன்றாக அமைகின்றது.

## அல்பிரூனி - அறிவியலுக்காக தன்னை அர்ப்பணித்த ஒரு மேதை

கணிதவியல், வானியல், தத்துவவியல், சமூகவியல் மற்றும் வரலாறு போன்ற மிக முக்கியமான துறைகளில் அழிவில்லாத இடமொன்றைத் தக்கவைத்து, தனது முழுத் திறனையும் அறிவியலுக்காக அர்ப்பணித்த மிகப் பெரிய புத்திஜீவியாக அல்பிரூனி விளங்குகிறார். அது மட்டுமல்லாது, எண் கணிதம் போன்றவற்றிலும் அல்பிரூனி தடம் பதித்துள்ளார். இவர் கி.பி. 973 செப்டம்பர் (3- துல்ஹஜ் 362 ஹிஜ்ரி) ல் பிரூனி என்ற சிந்து பிரதேசமொன்றில் பிறந்தார். 1048ல் தமது 75 வது வயதில் இவ் உலகை விட்டும் பிரிந்தார்.

இவரது ஆய்வு கூடம் சுல்தான் மஹ்முத் கஸ்னாவி என்ற ஆட்சியாளரின் நீதிமன்றத்துடன் இணைந்ததாகவே காணப்பட்டது. அல்பிரூனி சுல்தான் மஹ்முதை பின்தொடர்ந்து பல தடவைகள் இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கிறார். அதன் காரணமாகவே 20 வருடத்தில் பெரும்பான்மையான பிரதேசங்களை அல்பிரூனியால் தரிசிக்க முடிந்தது. இவ்வாறு இவர் தரிசித்த இடங்களில் அவதானித்த விடயங்களை அவரது மிக முக்கியமான புத்தகமான "கிதாப் அல் ஹிந்த்" யிலே பதிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துள்ளார். இந்த 20 வருடங்களில் அவர் இந்திய தத்துவவியல், கணிதம், புவியியல் மற்றும் மார்க்க அறிஞர்களிடமிருந்து மார்க்க விழுமியங்களை கற்றுக்கொண்டது மட்டுமல்லாமல் தனக்கு கற்றுத்தந்தவர்களுக்கு கிரேக்க, அரேபிய தத்துவம் மற்றும் விஞ்ஞானங்களையும் கற்றுக் கொடுத்தார்.

அல்பிரூனி வாழ்ந்த கால கட்டத்தில் அவரைப் போலவே மிக முக்கியமான அறிவியல் முன்னோடிகளும் வாழ்ந்தனர். பிர்தௌசி (973-1020) அலிசீனா (980-1073) இப்னுல் ஹைதம் (965-1039) அத்தபரி (960-1058) நாஸிர் குஸ்ராஸி (1003-1060) போன்றோரை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

அவரது மிக முக்கிய ஆக்கங்களாக பின்வரும் புத்தகங்களைக் குறிப்பிடலாம்:

* கிதாப் அல் ஹிந்த் (இந்தியாவின் புவியியல் மற்றும் வரலாறு )
* அல் ஆதார் அல் பாகியா (பிரதான வரலாறு மற்றும் புவியியல்)
* கிதாப் அல் ஸைதானா
* கிதாப் அல் ஜவாஹிர் (மாணிக்கக் கற்கள்)
* கிதாபுத் தப்ஹீம் லி அவாஇல் சினாஅதித் தன்ஜீம் (வானவியல் கலையில் மூலக்கூறுகள் பற்றிய அறிவுறுத்தல்கள்)

அல்பிரூனியின் பரந்த அறிவின் காரணமாக அவரைப் பல புத்திஜீவிகள் பின்பற்றினர். அவரது அறிவுத்திறனை பல மேற்கத்தேய அறிஞர்கள் கூட சிலாகித்துக் கூறியுள்ளனர். "Dr எட்வட், சி.சசுவே, பீ.போர் நல்லினோர் போன்றோரை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

ஜோர்ஜ் சார்டோன் என்பவர் தனது "Itroduction of the History of Science" எனும் ஆங்கில நூலில் அல்பிரூனி பற்றி பின்வருமாறு குறிப் பிடுகின்றார். "அல்பிரூனி இஸ்லாத்தின் மிகச் சிறந்த விஞ்ஞானியாவார் அதுமட்டுமல்லாது முக்காலத்துக்கும் பொருத்தமான ஒருவர் என்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருவராவார்".

## இஸ்லாமிய உலகியல் பார்வையில் விஞ்ஞானம்

பிரயாணம் செய்வது பண்டைக்காலம் தொட்டே தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்து வருகின்றது. இவ்வாறு பயணம் செய்பவர்கள் சமவெளிகள், மலைகள் ஆறுகள், பாலைவனங்கள், சமுத்திரங்கள் மற்றும் காடுகள் போன்றவற்றை கடந்து அதனூடாக தமது பயணங்களை மேற்கொண்டு வியாபாரம், ஹஜ், ஜிஹாத் போன்ற இன்னும் பல தேவைகளையும் பூரத்தி செய்து கொள்வார்கள். இவ்வாறான பயணங்கள் வரலாற்று ரீதியாக நம்பமுடியாத பல அடைவுகளுக்கு வழிகோலின. பிற்பட்ட கால வரலாறு அவற்றை விஞ்ஞான அடைவுகள் என அழைத்தது. இந்த அடைவுகள் சமூகவியல், அரசியல், வரலாறு, புவியியல், வணிகம், விவசாயம் போன்ற துறைகளில் ஆராய்ச்சி செய்யவும் தூண்டுகோளாக அமைந்தன. பிற்பட்ட காலத்தில் அவர்கள் தமது சிந்தனைகளை விஞ்ஞானத்தின் பௌதீகவியல் மற்றும் கணிதவியல் அணுகு முறைகளை வரையறுத்துக்கொள்ளத்தக்கவாறு விருத்தி செய்துகொண்டனர். சுருங்கச் சொன்னால் அவர்கள் பிரசித்தி பெற்ற விஞ்ஞானிகளாக மாறினர்.

கிரேக்கத்தில் காணப்பட்ட தத்துவம், வானியல், கணிதவியல், மருத்துவம் மற்றும் விஞ்ஞானம் போன்ற துறைகளில் புத்தகங்களை மொழிபெயர்ப்பதற்காக பல கல்விக்கூடங்கள் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து முஸ்லிம் ஆட்சியாளர்கள், முஸ்லிம் அறிஞர்கள் தமது கண்டுபிடிப்புக்களை உருவாக்கிய இடங்களில் பல வானிலை ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் பல ஆய்வுகூடங்களையும் நிர்மாணித்தனர்.

முஸ்லிம் உலகின் அறிவியல் துறையை வளர்த்தெடுப்பதற்காக முஸ்லிம் ஆட்சியாளர்கள், கவர்னர்கள் மற்றும் அதிகாரிகளின் பங்கு காத்திரமானது என்பது மறுக்க முடியாத சான்றாகக் காணப்படுகின்றது. முஸ்லிம் உலகின் அறிவியல் துறை உயர்வதற்கு மிக முக்கிய காரணமாக ஆட்சியாளர்களும் மற்றும் அரசாங்க அதிகாரிகளும் பெரும் புத்திஜீவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. விடயம் இவ்வாறிருக்க அறிவியலுக்கும் சுயாதீனமான ஆராய்ச்சிகளுக்கும் இஸ்லாம் வழங்கும் முக்கியத்துவத்தைப் பற்றிய பிழையான புரிதல்களும் பொய்யான விளக்கங்களும் சமூகத்தில் திட்டமிட்டுப் பரப்பப்பட்டுள்ளன. இந்த பொய்யான வதந்திகளை அறிஞர் முஹம்மத் இக்பால் பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார்: "அல்குர்ஆனின் இயல்பான போக்கு அதனை பின்பற்றுபவர்களை பயபக்தியுடையவர்களாக ஆக்கியதோடு அவர்களை நவீன விஞ்ஞானத்தின் முன்னோடிகளாகவும் மாற்றியமைத்தது." என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

முஹம்மத் இக்பாலின் கருத்துப்படி "மேற்குலகமானது இஸ்லாமிய அறிஞர்களையும் அவர்களது அறிவியலுக்கான அபிவிருத்திகளையும் வேண்டுமென்றே மறைத்துவிட்டது". இக்பாலின் இந்தக் கருத்தை ஏனைய அறிஞர்களும் வலுவடையச் செய்கின்றனர். இவர்கள் கூறுவதாவது கிரேக்க தேசம் விஞ்ஞான முறைகளைப் பற்றி எந்த அறிவும் இல்லாதிருந்த போது முஸ்லிம்கள் நவீன விஞ்ஞானத்திற்கு வித்திட்டுக் கொண்டிருந்தனர் என்பதாகும்.

பிரிப்போல் என்பவர் விளங்கப்படுத்துவதானது, 'அரபு நாகரிகம் நவீன உலகிற்கு வழங்கிய மிக முக்கியமான பங்களிப்பாக விஞ்ஞானம் காணப்படுகின்றது. எனினும் அதன் விளைவுகள் அடையப்பெறும் வீதம் மந்த கதியாகக் காணப்படுகின்றது. ஐரோப்பாவிற்கு வாழ்வளித்தது விஞ்ஞானம் மட்டுமல்ல இஸ்லாமிய நாகரிகத்தின் பலதரப்பட்ட வகையான தலையீடுகளுமே ஆகும்'.

இதற்கு இன்னும் வலுவூட்டும் வகையில் பேட்ரன் ரசல் என்பவர் கூறுவதாவது:- அரேபியர்கள் கிரேக்கர்களைவிட ஆராய்ச்சிகளில் அதிகமாக முன்னேறி இருந்தனர். குறிப்பாக இரசாயனவியல் துறையில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தனர்.

## அல்பிரூனியின் விஞ்ஞான ஆராய்ச்சி முறைமைகள்

அல்பிரூனி தான் வாழ்ந்த காலத்தில் அறியப்பட்ட அறிவியல் துறைகள் அனைத்திலும் தடம் பதித்து தனது இருப்பை நிலை நாட்டிக்கொண்ட ஒரு மிகப் பெரிய ஆளுமை மிக்க, நிபுணத்துவம் பெற்ற அறிஞராவார். இருந்த போதிலும் இவர் வானியல், ஜோதிடம் மற்றும் இதனுடன் தொடர்பான பாடப் பரப்பில் கூடுதல் கரிசனை காட்டியுள்ளார். இவரது வானியல் மற்றும் ஜோதிடத்திற்கான பங்களிப்புக்கள் அவரது காலத்தில் வாழ்ந்த அனைவரையும் கவர்ந்திருந்தன. இவர் வெறுமனே ஊகங்களினால் பெறப்பட்ட முடிவுகளை எடுக்காமல் விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து மிகத்துல்லியமாகப் பெறப்பட்ட முடிவுகளையே எடுத்துக் கொண்டார்.

அல்பிரூனிக்கு இயற்கை நிகழ்வுகளுடன் மிகநெருங்கிய தொடர்பு இருந்தது. இதற்காக அவர் மிகக் கஷ்டமான சூழ்நிலைகளிலும் கூட பயிற்சி எடுத்துக்கொண்டார். அது மட்டுமல்லாது துல்லியமான அளவீடுகளை மேற்கொள்வதற்கான பல உபகரணங்களைக் கண்டுபிடிப்பதிலும் அவற்றை மேம்படுத்துவதிலும் தனது அதிகமான நேரங்களைச் செலவழித்தார். இதற்குப் பிரதான காரணமாக, அளவீடுகளை மேற்கொள்ளும் போது எந்தவித கோளாறுகளும் ஏற்படாத வண்ணம் முடிவுகள் மிகவும் துள்ளியமாக அமைய வேண்டும் என்று அவர் நாடியமையேயாகும். இதன் காரணமாகவே அவரது அவதான முடிவுகளும் கணக்கீடுகளும் மிகவும் துல்லியமான முடிவுகளாக அமையப் பெற்றிருந்தன.

மஹ்ஸர் என்பவர் விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தி அல்பிரூனியினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க ஆராய்ச்சி முடிவொன்றை உதாரணமாகக் குறிப்பிடுகின்றார். அவரது பாரம்பரிய ஆராய்ச்சிகள் பற்றிய விளக்கவுரைகள் பாகிஸ்தானில் அமைந்துள்ள நந்தனா கோட்டையில் அரங்கேறியது. அதன்படி அவரது ஆய்வுமுறைகளைப் பயன்படுத்தி பூமியின் சுற்றளவைக் கணக்கிட்டார். அது 24778 மைல்கள் என்றிருந்தது. இவரது கணக்கீடு இன்று கணக்கிடப்பட்ட பூமியின் சுற்றளவைவிட 0.3 வீதமே வித்தியாசப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்பிரூனியின் அறிவியல் சார் பங்களிப்புக்கள்

அல்பிரூனியின் 75 வருட காலத்தில் பரந்த அளவிலான அறிவியல் கண்டுப்பிடிப்புக்களையும் அடைவுகளையும் அடையப்பெற்றுள்ளர். இவைகள் இன்றும் அறிவுப்பொக்கிஷங்களாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பிற்பட்ட காலத்தில் அல்பிரூனியின் கண்டுப்பிடிப்புக்களின் உதவியுடன் பல அடைவுகளும் அறிவியல் துறையில் மேற் கொள்ளப்பட்டன. குலாம் ரப்பானி அவர்கள் அல்பிரூனியின் குறிப்பிடத்தக்க அறிவியல்சார் பங்களிப்புக்களை கணக்கெடுத்துள்ளார்.

அவற்றுக்கான சில உதாரணங்கள்:

* பாகைமானி மற்றும் அளவுகோள் இன்றி சில கணிதப் பிரச்சினைகளை தீர்க்கும் முறை.
* ஓர் இடத்தின் அட்சர ரேகை மற்றும் கேத்திர ரேகையின் துல்லியமான அளவீட்டு முறைமை.
* அமெரிக்க கண்டத்தின் அமைவிடத்தை சுட்டிக்காட்டல்
* 18 வகையான மாணிக்கக் கற்களினதும் உலோகங்களினதும் தனித்துவமான புவியீர்ப்பு விசையை வரையறுத்தல்.
* ஒலியலைகளை விட ஒளியலைகளின் வேகம் அதிகம் என்பதற்கான ஆதாரங்களை வழங்கியமை.
* புவியீர்ப்பு விசை பற்றிய விளக்கம்
* புவி தனக்குரிய அச்சிலே சுழல்கிறதா? இல்லையா? என்ற விடயம் பற்றிய கலந்துரையாடல்.
* பூக்களில் இதழ்கள் எப்போதும் 3,4,5,6 அல்லது 8 ஐக் கொண்டிருக்கும். ஒரு போதும் 7 அல்லது 9 ஐக் கொண்டிருக்காது என்ற பிரபஞ்ச விதியை விளங்கப் படுத்தல்.
* கோள திரிகோணவியலைப் பயன்படுத்தி பூமியின் சுற்றளவு மற்றும் விட்டம் போன்றவற்றின் அளவை உறுதி செய்தல்

## அல்பிரூனி ஒரு வானியல் அறிஞராக

அல் பிரூனியின் ஆய்வுப்பணிகளில் வானியலுக்கு ஒரு தனி இடம் இருப்பதனை எம்மால் தெளிவாக அவதானிக்க முடியுமாக இருக்கின்றது. அதிலும் குறிப்பாக, அரைவாசிக்கும் அதிகமாக வானியல் சோதிடம் மற்றும் அதனுடன் தொடர்பான ஏனைய அம்சங்கள் பற்றியே பேசியுள்ளார். அல் பிரூனி ஒரே தலைப்பில் இரண்டு மிகப் பெரும் நூல்களை எழுதியுள்ளார் "கிதாபுத் தப்ஹீம் லிஅவாஇலி சினாஅதித் தன்ஜீம்" (வானவியல் கலையின் அடிப்படை கூறுகளுக்கான விளக்கப் புத்தகம்). இதனை அரபு மற்றும் பாரசீக மொழிகளில் எழுதியுள்ளார். 1029ம் ஆண்டு கஸ்னாவில் வைத்தே அதனை எழுதினார்.

M S நாமூஸ் (1973) என்பவர் இந்த நூல் பற்றிய சில அடிப்படை தகவல்களைக் கூறியுள்ளார். "இந்தப் புத்தகமானது மொத்தமாக 530 பகுதிகளைக் கொண்டுள்ளது. ரம்சேரைட் என்ற மொழிபெயர்ப்பாளர் இந்த 530 பகுதிகளையும் நவீன நூல் முறைமைக்கு ஏற்றாற் போல்13 தலைப்புகளாக பிரித்துள்ளார். இவ்வாறு 13 தலைப்பின் கீழ் கொண்டு வந்துள்ள இந்த நூலை பிரதானமான இரண்டு பாகங்களாக மேலும் அவர் பிரித்துள்ளார்.

1 - வானியல் (1-360 வரையான பகுதிகள்)

2 - சோதிடம் (347 - 530 வரையான பகுதிகள்)

அவரது பிரிப்பு முறையின் கீழ் கொண்டு வந்த 13 பிரிவுகளும் பின்வருமாறு:

1 - வடிவியலுக்கான விளக்கங்களுடன் கூடிய வானவியல்

2 - கணிப்பியல் (கணித செயற்பாடுகள், துவித எண், பிரதியீடு)

3 - தூய வானவியல் (கோளங்கள், நட்சத்திரங்கள்)

4 - புவியியல் (பூமி, காலநிலை)

5 - சோதிட வானவியல்

6 -காலவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 -நட்சத்திரவியல்

8 -வானவியல் குறியீடுகள்

9 - கோள்கள்

10 - குறியீடுகளின் வகையீடு

11 - வீடுகள்

12 -அதிஷ்டம்

13 - கோட்பாட்டு வானவியல்

அல் பிரூனியின் "கிதாபுத் தப்ஹீம் லிஅவாஇலி சினாஅதித் தன்ஜீம" என்ற நூலின் பாரசீக மொழிப்பெயர்ப்பின் அறிமுகத்தில் ரம்சே குறிப்பிட்டதை இங்கே குறிப்பிடுவது பனுள்ளதாக அமையும் என்று நினைக்கின் றோம்: "இந்த கலையினுடாக நாம் பிரபஞ்சத் தின் தன்மையை புரிந்துக் கொள்ளமுடியுமாக இருக்கிறது. இன்னும் வானங்கள் பூமி இவற்றுக் கிடையில் உள்ளவற்றின் தன்மை அவற்றுக்கான காரண காரியங்கள் போன்றவற்றை தெளிவாக புரிந்து கொள்ள முடியுமாக இருக்கின்றது. இது தொழில் சார்ந்த வானவியல் கற்கைகளுக்கு மிகவும் உதவியாக இருக்கின்றது.

எனவே, இதனைக் கற்க விரும்புவர் வானியலுடன் தொடர் பான கலைச்சொற்கள், பெயர்கள் போன்றவற்றுடன் மிகுந்த பரீட்சயத் துடன் இருக்க வேண்டும். இதனைக் கற்கும் மாணவனுக்கு இக்கலையில் பயன்படுத்தப் படும் சொற்கள் பற்றிய எண்ணக்கருவை இலகுவாக பெற்றுக்கொள்ளலாம். இதன் மூலம் மாணவனது சந்தேகங்கள் தெளிவாகி, அறிவு முதிரிச்சி நிலையை அடையும்.

ரையாஹ் பின்த் கவாரிஸ்மா என்பவரின் விஷேடமான வேண்டுக்கோளுக்கு இணங்க நான் இந்த நூலை தொகுத்து எழுதினேன். இந்த நூலானது கேள்வி பதில் முறைமையில் வாசிப்பவர்களுக்கு இலகுவாக அமையும் விதத்திலே தொகுக்கப்பட்டுள்ளது.

வடிவியல் கலையிலிருந்தே எனது தொகுப்பை ஆரம்பித்தேன். பிறகு கணிப்பீட்டு முறையை வழங்கினேன், அதன் பிறகு பிரபஞ்ச உருவாக் கம் பின்னர் வானவியலின் சட்ட விதிகள் போன்றவற்றை தொகுத்தேன். ஒருவர் இந்த நான்கு அடிப்படை விடயங்களையும் மிகவும் கவனமான முறையில் கற்று தேர்ச்சி பெற்றால் தான் ஒரு முழுமையான வானவியலாளராக மாற முடியும்".

அல்பிரூனி கேத்திர கணிதம், எண் கணிதம், பிரபஞ்ச அமைப்பியல் மற்றும் சோதிடம் போன்றவற்றில் மிகவும் புலமைப் பெற்றிருந்தார். அல்பிரூனி தனது புத்தகத்தின் ஆரம்பப் பகுதியில் இந்த நான்கு அடிப்படை விடயங்களின் முக்கியத்துவம் பற்றி மிகவும் வலியுறுத்திக் கூறியுள்ளார். 'ஒருவர் பின்வரும் நான்கு கலைகளில் தேர்ச்சி பெறாத வரையில் அவர் "வானவியலாளர்" என்று அழைக்கப்படு வதற்கு தகுதியற்றவராவர்'. அவை : வானவியல், எண்கணிதம், பிரபஞ்ச அமைப்பியல் மற்றும் சோதிடவியல். விஞ்ஞானவியல் சான்றாதாரங் களில் அல் பிரூனியின் இன்னுமொரு மிக முக்கியமான நூலாக "கானுன் அல் மஸ்ஊதி பல்கய்யாஹ் வன் நுஜூம்" என்ற நூல் விளங்குகிறது. இந்த நூல் அக்கால மன்னரான ஸுல்தான் மஸ்ஊத் என்பவருக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டதாகும். இந்த நூலானது பல வகையான தேற்றங்கள் பற்றி பேசுகின்றது. உதாரணமாக : வானவியல், திரிகோண கணிதம், சூரிய, சந்திர மற்றும் கோள்களின் நகர்வுகள் போன்றவையாகும். மேலும் இந் நூலானது அல்பிரூனியின் கணிதவியல், புவியியல், மற்றும் வானவியல் கற்கைகள் பற்றிய மிக விசாலமானதும், முக்கியமானதுமான தொரு நூலாகவும் காணப்படுகின்றது. அத்தோடு வானவியலின் பெரும்பாலான விடயங்களை தழுவிய நூலாகவே அது அமைந்தது.

அல்பிரூனி ,அவருக்கு முன்னர் வாழ்ந்தவர் களுக்கு கூட தெரிந்திருக்காத கணிதவியல் உத்திகளை பயன்படுத்தினார். உதாரணமாக : ஒருவர் கன அசைவு மற்றும் வேக வளர்ச்சி போன்றவற்றின் பகுப்பாய்வுகளை புரிந்து கொள்ள வேண்டுமானால் அவர் கணிதவியல் செயற்பாடுகளை அறிந்திருக்க வேண்டும். மேலும் "கானுன்" நூலின் 18ம் பகுதியில் சூரிய மற்றும் சந்திர கிரகணங்கள் பற்றி மிகவும் துல்லியமாக விளக்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்பிரூனியின் பார்வையில் சோதிடம்

சோதிடம் என்பது நட்சத்திரங்களின் அசைவுகள் மற்றும் தனி மனிதர்களின் நிகழ்வுகள் மீதான அதனது தாக்கம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பு பற்றிய கற்கையாகும். இஸ்லாமிய கண்ணோட்டத்தில் சோதிடம் இரண்டு வகையாக வகைப்படுத்தப்படுகின்றது. அவை: தெய்வ நம்பிக்கை சார்ந்தது மற்றையது ஆதாரபூர்வமானது. தெய்வ நம்பிக்கை சார்ந்த சோதிடமானது நட்சத்திரங்கள் மற்றும் கோள்களுக்கு மனிதர்களின் தலை விதியையும் அதிஷ்டங்களையும் மாற்றும் ஆற்றல் உண்டு என்று வாதிக்கும் பகுதியை உள்ளடக்கியதாகும். மேலும் பூமியில் ஏற்படுகின்ற நிகழ்வுகளுக்கும் நட்சத்திரம் மற்றும் கோள்களுக்கும் இடையில் இதற்குநெருங்கிய தொடர்பு காணப்படுவதாகவும் நம்பப்படுகின்றது. இவ்வகை சோதிடம் இஸ்லாத்தின் அடிப்படைகளுடன் முரண்படுவதனால் அவை முழுமையாக தடுக்கப்பட்டுள்ளன.

அடுத்த பிரிவான ஆதாரப்பூர்வமானதானது, நட்சத்திரங்கள் பற்றிய விஞ்ஞான பூர்வமான கற்கையை கொண்டதாகும். இது நேரத்தை கணிக்கவும், காலத்தை அறிந்து வரையறுத்துக் கொள்ளவும் பயன்படுத்தப் படுகின்றது. மேலும் இது திசைகளை அறிந்து கொள்ளவும் பயன்படுகின்றது. இந்த தலைப்பே தற்பொழுது "வானவியல்" என்ற பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது. முறையான கணிப்பு முறைகளைப் பயன்படுத்தி புலன்களுக்கு அறியக் கூடிய வகையில் இது அமைந்திருப்பதனால் இது ஆதாரபூர்வமாகக் கொள்ளப்படுகின்றது. இதன் மூலமாகவே இஸ்லாத்தின் கடமையான தொழுகை, ஹஜ், நோன்பு போன்றவற்றை உரிய முறையில் நிறைவேற்ற முடியுமாக உள்ளது. அல்பிரூனி, சோதிடத்தின் கொள்திறன், வல்லமை மற்றும் தீர்ப்புக்களின் ஆதிக்கம் போன்றவற்றை மிகவும் துல்லியமான முறையில் வரையறுத்துள்ளார். இதனை சட உலகின் கூறுகளான நீர், காற்று, நெருப்பு, மற்றும் நிலம் போன்றவற்றுடன் எல்லைக்குற்படுத்தியுள்ளார். என்றாலும் சட உலகுக்கு அற்பாற்பட்ட ஒன்றுதான் ஆன்மீக உலகமாகும். மனித உள்ளக செயற்பாடுகள் அனைத்தும் வானவியலுக்கு அப்பாற்பட்ட தொன்றாகும். இங்குதான் சூனியக்காரர் கள் தனது வேலைகளை செய்கின்றனர். "கிதாபுப் தப்ஹீம் லி அவாஇலி சினாஅதித் தன்ஜீம்" என்ற புத்தகத்தை பாரசீக மொழியில் பதிப்பு செய்த அகாய் ஜலால் ஹுமாம என்பவர் அல் பிரூனியின் சோதிட தீர்ப்புக்கள் பற்றிய கண்ணோட்டத்தை பின்வருமாறு விளங்கப் படுத்துகின்றார்:

சோதிடக் கலையில் காணப்படுகின்ற அவநம்பிக்கை, தளர்வு, பலவீனம் மற்றும் அதில் காணப்படுகின்ற குழப்பங்கள் போன்றவற்றை பற்றி அவர் அதிகமாக மீட்டி பேசி யிருக்கின்றார். அல் பிரூனி தனது புத்தகத்தின் 360ம் பக்கத்தில் பின்வறுமாறு குறிப்பிடுகின்றார். "இந்த சோதிடக் கலையின் அடிப்படை பலவீனமான கோட்பாடுகளையும் குழப்பமான அனுமானங்களையுமே கொண்டுள்ளது". மேற்குறிப்பிட்ட அல்பிரூனியின் கூற்றையும் மற்றைய அறிஞர்களின் அவதானங்களையும் வைத்துப் பார்க்கின்றபோது, போதுமான ஆதாரங்களின் அடிப்படையில் எமக்கு சோதிடத்தின் முடிவுகளின் தன்மைப் பற்றி ஆழமாக தெரிந்துகொள்ள முடியுமாக இருக்கின்றது.

முடிவுரை

ஒரு காத்திரமான பகுப்பாய்வு முறையிலான அல்பிரூனியின் அறிவியல் பங்களிப்புக்கள், ஏனைய விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புக்களுக்கும் மிகவும் உறுதுணையாய் அமைந்திருந்தன. உதாரணமாக, 17ம் நூற்றாண்டில் கலிலியோ மற்றும் நிவ்டன் ஆகிய விஞ்ஞானிகள் பூமி மற்றும் புவியீர்ப்பு விதி பற்றி பேசும் போது அதிகமாகப் பாராட்டப்பட்டனர். ஆனால் இந்த அறிவிற்கான அடிப்படைகள் 700 வருடங்களுக்கு முன்னால் அல்பிரூனி யினால் முன்வைக்கப்பட்டன. இந்த விடயம் திட்டமிடப்பட்டு மறைக்கப்பட்டுள்ளது என்று பெரும் அறிஞர்கள் குற்றம் சாட்டு கின்றனர். மேலும் கலிலியோவின் தொலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டியானது அல்பிரூனியின் 'உஸ்தர்லப்' என்ற கருவியின் மேம்படுத்தப்பட்ட கருவிதான் என்று பெரும் பான்மையானவர்கள் அறிய வில்லை. இதுவே வானத்தின் அசைவுகளை துல்லியமாகக் கணக்கிடப் பயன்படுத்தப் பட்டது.

இஸ்லாத்தின் மத்திய காலப்பகுதியில் வாழ்ந்த விஞ்ஞானிகளின் வாழ்க்கையை மீள் பார்வை செய்யும் போது தான், தற்கால சந்ததி யினர் அறிவியலுக்கான ஆக்கபூர்வமானதும் பொருத்தமானதுமான ஒரு பங்கை ஆற்ற முடியும். அத்துடன் ஒரு சிறந்த எதிர் காலத்தை நோக்கிய பயணத்தையும் தன்னம்பிக் கையுடன் ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும்.

*The Muslim World League Journal (01.10.2016)* இல் பிரசுரிக்கப்பட்ட ஆங்கில மொழியில் எழுதப்பட்ட *"Science and Astronomy: Intellectual Reflections of Al-Biruni"* எனும் ஆய்வினைத் தொகுத்து எழுதப்பட்டது.

### உசாத்துணைகள்


1. Al-Biruni, Abu Raihan Muhammed Ibnu Ahmed. (1934) Kitab Al-Tafhim Li Awail Sanaa'ath. Translation In English By R. Ramay Wrighti London, Luaz And Co.
2. Al- Biruni, Abu Raihan Muhammed Ibnu Ahmed. (1934) Kitab Al-Tafhim Li Awail Sanaah
3. Al-Tanjim in Persian Edited By Aqai Jalal Humai, Tehran: Majlis Press,1936 Persion Solar.
4. Al- Buruni, Abu Raihan Muhammed Ibnu Ahmed. Qanun Al- Masudi In Two Volume, Hydrabad: Dairat Al- Maarif Al- Osmania.
5. Bertrand Russel (2001) The Scientific Out Look, London : Routledge.
6. Lytrod, Jea- Francois (1984) The Postmodern Condition: A Report On Knowledge Voi.10 YSA University Of Minnesota.
7. Mazhar M Quresi (2006) Introduction To The Science And Technology New Delhi : Adam Publishers & Distributors.
8. Mohammed Iqbal (1994) The Reconstruction Religious Thought In Islam New Delhi : Kitab Bahavan
9. Mohammed Mumtaz Ali (2009) The Philosophy Of Science: Westem And Islamic Perspectives On Certain Aspects.Kuala Lampur : Thinkers Library.
10. Said, Hatim Mohammed, Ed (1973) Al- Biruni Commermoative Volume Karachi: Hamdard Academy.
11. Sarton, George (1975) Introduction To The History of Science , Melbourne: Krienge Pub Co




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Price : LKR 100

ISSN 0013-9130

9 770013 913932

Published By

Naleemiyah Bureau of Islamic Publications, Beruwala, P. O. Box : 01, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org